வாழக் கல்மின்

# கலை மலர்

கோப்பாய்

அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை

iversity of Jaffna
370.73
KOP
38(AR; MAIN)
0.73
KOP

1978

Cable : **Kalatrade** Telephone : **35284**

**Space Donated**
**by**

# KALA TRADERS

General Merchants, Importers, Exporters
&
Manufacturers Representatives & Commission Agents

Bankers
**Commercial Bank of Ceylon**
**Colombo,**
**Bank of Ceylon, Pettah**

**151, Dam Street**
**Colombo - 12**
**Ceylon**
**(Sri Lanka)**

370.73
KOP
AR
2007

# கலை மலர்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1978-12-08
PERIODICALS DIVISION

நூலகம் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு
நினைவு மலர்

ARCHIVES

250038

மலர் 19

250038

1978

University of Jaffna
250038
Library

அன்பளிப்பு

# சாந்தி நிலையம்

(தேநீர்ச்சாலை)

மாவிலித்துறை

நெடுந்தீவு

---

அன்பளிப்பு

# நியூ டெல்(f)வ்ற் ஸ்ரோர்ஸ்

துறைமுகம் — நெடுந்தீவு

# திறன் எமக்குத் தருவாய்

கல்லை வயிரமணி யாக்கல் — செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல் — வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல் — பன்றிப்
போத்தைச் சிங்கவே றாக்கல் — மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல் — என
விந்தை தோன்றிட இந்நாட்டை — நாம்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி — வெற்றி
சூழும் வீரமறி வாண்மை

கூடுந் திரவியத்தின் குவைகள் — திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் — இவை
நாடும் படிக்கு வினைசெய்து — இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக் — கலி
சாடுந் திறமெமக்குத் தருவாய் — அடி
தாயே! உனக்கரிய துண்டோ? — மதி
மூடும் பொய்ம்மையிரு ளெல்லாம் — எமை
முற்றும் விட்டகல வேண்டும்.

— பாரதி

ARCHIVES

# கலாசாலைக் கீதம்

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

### பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் மகளிர்
ஆசிரியர் கலாசாலை வாழ்க.

### அநுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரியர் மாணவர் வாழ்க.

### சரணங்கள்

அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம் (யாழ்)

ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண் டாண்டாய் ஓர்ந்திடுங் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம். (யாழ்)

தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழவெங் கலாசாலை வாழ்க
இயன்றநற் பணிகளைப் புரிவோம். (யாழ்)

அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க. (யாழ்)

உ



தோற்றம் : **1911-09-07** மறைவு : **1978-03-08**

நினைவில் நிலைத்து நிற்கும்
நிறைகுணச் செல்வி

## சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு

செந்தமிழிற் சிந்தைமகிழ்ந் தந்தமறும் எந்தையடி
வந்தனைசெய் திந்தவுல கந்தனிலே - பந்தமுற
வாழ்ந்துமகிழ் வாழ்ந்துகலை தேர்ந்தறிவு சேர்ந்தமதி
வீழ்ந்துயிரும் ஏறியதே விண்.

சொக்கன்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

*Best wishes*

**KANTH'S**
**COOL BAR**

**74/1 Kasturiar Road,**
**JAFFNA**

Best wishes

**HARAN**
**JEWELLERS**

**JAFFNA.**

**Compliments from**

All kinds of Turning
Maulding, Electric & Gas
welding undertakings
Dealers in water Pump
Couplings, Glands
Nippls & Car diggy Hings

**FINAL**
**TURNING WORKS**

103, Kasturiar Road
**JAFFNA**

நல்வாழ்த்துக்கள்

**K. N. M. மீருன் சாஹிப்**

தங்கப்பவுண் நகைமாளிகை
நகை வியாபாரம்

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

# கலைமலர்க் குழுவினர்

## 1978

காப்பாளர் : திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி

ஆலோசகர்கள் : திரு. க. சொக்கலிங்கம்

திரு. வே. சுப்பிரமணியம்

திரு. இ. முருகையன்

திருமதி சு. செல்லத்துரை

திருமதி பா. சண்முகராஜா

திருமதி ம. திருச்சிற்றம்பலம்

மலராசிரியர் : திருமதி ம. ஆழ்வாப்பிள்ளை

மலர்க்குழுவினர் : திருமதி தேவகி சுந்தரராஜா

திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை

செல்வி வசுமதி சின்னத்துரை

திரு. சு. வி. பரமலிங்கம்

திருமதி விமலன் அல்போர்ன்ஸ்

திருமதி இராஜராஜேஸ்வரி துரைசெல்வம்

திருமதி எம். என். தேவேரியம்

ஞானச்சகோதரி ரேஸ்மலர்

திருமதி நளாயினி இராஜ்குமார்

திருமதி நே. அலெக்சான்டர்

திருமதி ச. பேரானந்தம்

திரு. ந. தேவராஜா

**With Best Compliments**
**from**

# YARL METAL SALES CENTRE

**6, Model Market**
**JAFFNA**

Phone: **7596**

---

*Best wishes*

## *Bharat Studio*

*Jaffna.*

# Message

*from*

## *K. S. Palihakara* Esq.,

DIRECTOR T. C.

In recent decades, education has been emphasising its economic facet that people have learnt to look at education almost entirely as a means to economic advancement and not for most of the other benefits it confers on people. The competitiveness that comes in its wake has resulted, to a large extent, in the lessening of discipline and the sweetness of life. The infusion of the ideal of 'Dharmista Society', by the Government, is therefore just in time, to save education, as it were.

The schools system must catch up with this idea if it is to correct the imbalance in education; and Teachers Colleges have as their duty to produce a generation of teachers who could effect this change. The creation of ideals in the minds of children is mainly through the behaviour and example of their teachers and parents. A teacher with a balanced and integrated personality thus becomes an educational imperative, the creation of which is one of the responsibilites of the Teachers Colleges.

It is with much satisfaction that I note that at the Kopay Teachers College, the aspect of personality development of the teacher has taken high priority for a long time. A variety of activities ranging from religion to cultural, social and literary activity have formed a considerable part of their curriculum, and this annual magazine takes its rightful place in this process.

I congratulate the Principal and the staff for their imaginative penetration and effort in this direction.

*K. S. Palihakara*

வடமாநிலக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச் செய்தி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் வெளியீடான கலை மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கலாசாலையில் ஆசிரிய மாணவர்களின் இம்முயற்சி பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும். இவ்வாசிரியர்கள் தங்கள் பயிற்சி முடிந்ததும் நாட்டின் நாலா பக்கமும் பணிபுரியச் செல்வார்கள். அவர்கள் செயல்புரிய வேண்டுமென்ற வேணவாவுடனும், துடிப்புடனும் உரிய சிந்தனைகளைக் காவிச் செல்வார்கள். இந்தச் சிந்தனைக் காவிகள் (Thouhgt Carriess) தங்கள் கருத்துக்களை இந்நாட்டின் செல்வங்களான வருங்காலச் சந்ததியினரின் மனத்தில் விதைத்து, ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தின் மலர்ச்சிக்கு வழி சமைப்பார்கள்.

இத்தகைய மலர் வெளியீடுகள், அவர்களின் ஆக்கபூர்வமான சிந்தனையைத் தூண்டுவதோடு. அவர்களின் கருத்துக்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும். அவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும். கலைமலரை நான் மனமார வரவேற்று ஆசி கூறுகின்றேன்.

தி. மாணிக்கவாசகர்
*(வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)*
26-10-78

எமது அதிபர்



திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி

அதிபரின்

# ஆசிச் செய்தி

சென்ற ஆண்டுபோலவே இவ்வாண்டும் 'கலைமலர்' சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றேன்.

காலத்துக்குக் காலம் பெருகிவரும் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் பெரும்பணியின் காத்திரத் தன்மையை ஆசிரியர் உணர்ந்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும். இந்த அவசியத்தையும் ஆசிரிய மாணவர்களின் பல்வகைத் திறன்களையும் அபிலாட்சைகளையும் 'கலைமலர்' நன்கு புலப்படுத்தும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

நவீன கல்வித் திட்டத்திலே முதன்மை இடம்பெறுவோர் மாணவர்களேயன்றி ஆசிரியர்கள் அல்லர், என்பது கல்வியாளர்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையிலே கல்வியின் பலதரப் பயன்களையும் அவர்கள் அடைவதற்கு ஆசிரியராகிய நாம் மனம், வாக்குக் காயங்களால் இடைவிடாது உழைத்தல் வேண்டும். இந்த உழைப்பின் பிரதிபலிப்பாகவும் 'கலைமலர்' விளங்குவதாக.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலையின் கல்வி கலாசாரப் பாரம்பரியங்களின் முழுமையையும் 'கலைமலர்' புலப்படுத்தி நிற்றல் வேண்டும் என்ற என் விருப்பத்தை எடுத்துரைப்பதோடு மீண்டும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி

அன்பளிப்பு

# கமலா & பிரதர்ஸ்

3, மக்கள் சந்தை

பருத்தித்துறை

அன்பளிப்பு

## பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ் நிலைய முகப்பு

யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

## கிளாஸ் எம்போறியம்

படம் கண்ணாடி விற்பனையாளர்

192, K. K. S. றோட்

யாழ்ப்பாணம்

# சமர்ப்பணம்

"ஆசிரியர்களின் கையிலேதான் குழந்தைகளின் எதிர்காலமும் நாட்டின் சுபிட்சமும் தங்கியுள்ளன." உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

'வாழக்கல்மின்' என்ற கொள்கையை இலட்சியமாகக் கொண்ட ஆசிரிய மாணவராகிய நாமனைவரும் இக் கலை மலரைக் கலைத் தெய்வமாம் கலைவாணி யின் திருவடிகளில் பேருவகையோடும் பெருமகிழ்வோடும் சமர்ப்பிக்கிறோம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழருடைய சிறந்த பண் பாடாகும்; ஈழத் திருநாட்டின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வந்த நாம் ஒரு தாய் மக்கள்போல் உறவாடி மகிழ்ந்தோம்.

எங்களுடைய மகிழ்வில் இரண்டறக் கலந்ததுடன், கல்வித்துறையில் சிறந்த ஆசிரியர்களாக எம்மை உருவாக்குவதற்குத் துணை நின்று முழுமுதற் காரணமாக விளங்குகின்ற கலாசாலை அதிபர், விரிவுரையாளப் பெருமக்கள் அனைவரையும் அன்புடனும் நன்றியுடனும் நினைவு கூர்கிறோம்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற பெருநோக்கோடு எம் மத்தியில் பணியாற்றி அண்மைக்காலத்தில் ஓய்வு பெற்ற திருமதி ஜேக்கப் அவர்கள் பல நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழப் பரம்பொருள் அருள் புரிவாராக.

"கலைமலருக்குக் கவிதை கட்டுரை எழுதுங்கள்" என நாம் வேண்டிய போது எமக்கு வந்து சேர்ந்தவைகள் ஏராளம். அனைத்தும் இவ்விதழில் அச்சேற்ற முடியாமற் போனமைக்காக வருந்துகிறோம்.

கலைமலர் மலர்ந்து இப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு உவகை ஊட்டுகிறது. இம் மகிழ்ச்சிப் பெருக்கில் எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறோம்,

திருமதி மங்கையர்க்கரசி ஆழ்வாப்பிள்ளை
இதழாசிரியர்

# செந்தமிழ் மணங்கமழ்ந்த சந்தனநங்கை

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இரண்டறக் கலந்து தம் வாழ்க்கை முழுவதையும் இதன் மேன்மைக்காக அர்ப்பணித்த ஒரேயொரு விரிவுரையாளர் சந்தன நங்கை கந்தப்பு என்றே கூறலாம்.

அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

— திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி (அதிபர்)

* * *

செந்தமிழின் ஔவையெனச் செப்பரிய தமிழ் தந்து
அந்தமிலா வானுலகில் அழகுதமிழ் அள்ளி அள்ளித்
தந்து தமிழ் இனிமை சொல அங்கு நீ சென்றனையோ
சந்தன நங்கையே உன் செந்தமிழை நாமறவோம். — வீரமணி

* * *

வாழ்ந்திடுவீர் வாழ்ந்திடுவீர் என்று கூறும்
வளமான கோவைவரலாறும் உண்டு
தாழ்ந்து நின்ற மக்களுக்குக் கல்விச்சேவை
தளராது செய்தஉம் தர்மம் மற்றும்
ஏழ்பிறவி எடுத்தாலும் மறைந்திடாத
எழில் மிகுந்த உந்தமிழும் இசையும் பண்பும்
வாழ்ந்திடுவீர் வாழ்ந்திடுவீர் என்று கூறும்
வனிதையராம் ஒளிவிளக்கே! எங்கும் உண்டு

— திருமதி பா. சண்முகராசா

* * *

நித்திய கன்னித்தாயாகிய தமிழன்னைக்குத் தொண்டாற்ற உத்தம கன்னியாகத் தம் வாழ்நாளைக் கழித்த செல்வி சந்தன நங்கையின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

— திருமதி சு. செல்லத்துரை

* * *

பேரன்பின் பிறப்பிடமே! தங்களின் கலை ஆர்வத்தையும் மொழித் திறனையும் நினைக்குந்தோறும் சந்தனம் கமழ்வது போல உளமெல்லாம் மணக்கின்றது. 'கல்வி கரையில' என்பது போலச் சேவைக்கும் வயதில்லை என்பதைத் தங்கள் வாழ்க்கையின் மூலம் விளக்கினீர்கள். இளைப்பாறிய பின்பும் கோவையோடு தங்கள் பிணைப்பைத் துண்டிக்காமல் தேவையெனத் தங்கள் இல்லம் நாடி வந்த பொழுது அதற்கென்றே வாழ்ந்தவர் போல முழு மனத்தோடு உதவி செய்து சிறந்த ஆசிரிய இலட்சணத்தை உணர்த்தினீர்கள்.

தாயே! தங்கள் பணி இவ்வுலகில் நிறைவெய்தியது போன்று, மறுவுலகில் தங்கள் ஆன்மா நித்திய இன்பத்தில் திளைக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

— செல்வி த. முத்தையா

* * *

சந்தனநங்கையென்ற பெயரினைப் போன்று பிறருக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்து என்கடன் பணிசெய்வதே எனத் தனித்து வாழ்ந்து தமிழ்ப் பண்பும் தாய்மைப்பண்பும் பிரிக்கமுடியாத உறுப்புக்களாகப் பின்னிக்கிடக்க உண்மையான சேவகியாகவும் நம்பிக்கை மிக்க குருவாகவும் அன்புக்குறைவிடமான அன்னையராகவும் வாழ்ந்தார் செல்வி சந்தனநங்கை கந்தப்பு அவர்கள்.

— செல்வி வசுமதி சின்னத்துரை

# இம்மலரில் . . . . .


| | பக்கம் |
|---|---|
| கலைகள் கற்பதின் முக்கியத்துவம் ... ... | 1 |
| சரிநிகர் சமானமாய் வாழ்வம் ... ... | 3 |
| பெண்களும் தொழிற் சமத்துவமும் ... ... | 5 |
| இராமாயணத்தில் இராம இராவண......... ... | 8 |
| ஒளியிழந்த விழிதந்த வாழ்வு ... ... | 9 |
| புராதன அலங்கார வடிவங்கள் ... ... | 10 |
| நாட்டிய நாடகம் ... ... | 12 |
| தமிழிசைக் கலை ... ... | 15 |
| கற்பிக்கும் ஆசிரியர்......... ... ... | 17 |
| கலைச்செல்வி தன்னை......... ... ... | 20 |
| பரிசு ... ... | 22 |
| முருகன் புகழ் ஒலிக்கும் ... ... | 25 |
| கனவுகள் கலைகின்றன ... ... | 26 |
| கவிஞர் காட்டும் கவிதை இன்பம் ... ... | 29 |
| என் அடிகள் ... ... | 31 |
| சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் ... ... | 34 |
| வாழ்வாங்கு வழிகாட்டும் இலக்கியம் ... ... | 38 |
| இந்துமன்றம் ... ... | 43 |
| கிறிஸ்தவ மன்றம் ... ... | 44 |
| கலாசாலை ஆளுமன்றம் ... ... | 45 |
| முத்தமிழ் மன்றம் ... ... | 46 |
| விளையாட்டு மன்றம் ... ... | 47 |
| மனையியல் மன்றம் ... | 48 |
| நுண்கலை மன்றம் ... ... | 49 |
| சுவர்ணா இல்லம் ... ... | 50 |
| இராதா இல்லம் ... ... | 51 |
| அருணா இல்லம் ... | 52 |
| கலைமலர் குழுவினர் நடத்திய எழுத்துப் போட்டிகள் ... | 53 |
| பரிசு பெறுவோர் ... ... | 54 |
| கலாசாலைப் பயிற்சி நிறைவெய்தி ஏகுவோர் ... ... | 59 |

*Best wishes*

**E. A. Stationers**

For your Requirements
in

* Paper & Printing Materials
* Printing inks
* Fountain Pens
* Fountain Pens Repairs of all makes

**ESMALJEE AMIJEE**

**STATIONERS**

**128, Hospital Road JAFFNA**

**Best wishes**

**DESIGN** *Textiles*

People's Modern Market

JAFFNA

*Best wishes*

**Dealers in**

**All kinds of Radios under Takers of watches and Radio Repairs**

**RAMANI Corporation**

**Kasturiar Road**
**JAFFNA**

**Best wishes**

**C. S. Kailasampillai & Sons**

Drugs merchants

**76, Grand Bazaar**
**JAFFNA**

**Tel. Phone : 7135**

# கலைகள் கற்பதின் முக்கியத்துவம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் இப்பிறவியில் கற்றுத் தேறுவது என்பது முடியாத காரியமாகும். எனினும் தெய்வ அனுக்கிரகத்தினாலும் இறை பக்தியினாலும் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லுநர்களாய் இருந்த ஞானிகளையும் மகான்களையும் வரலாறு எடுத்துக் கூறுகின்றது. மனிதராகப் பிறந்த நாம் எம் தாய் மொழியில் எழுத வாசிக்கக் கற்பது போல், நுண் கலைகளுள் ஒன்றினையாவது இப்பிறவியில் கற்றுத்தேற முயற்சி எடுத்தல் வேண்டும்.

கல்லூரிகளில் இசைக்கலை, நடனக் கலை, ஓவியக்கலை, நாடகக்கலை ஆகியவற்றைக் கற்கப் போதிய வசதிகள் உண்டாகையால் அவற்றுள் ஒன்றினையாவது பாடசாலை நாட்களின்போது கற்றுத் தேறுவது ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாக இருத்தல் வேண்டும்.

கலைகளுள் ஒன்றினைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகளை மேலெழுந்த வாரியாக ஆராயுங்கால் அது ஒருவனின் கலாச்சாரத்தையும், ஞாபகசக்தியையும், கற்பனா சக்தியையும், சகோதரத்துவத்தையும் வளர்க்கின்றது, என்று துணிந்து கூறலாம்: இவற்றை ஆங்கிலத்தில் Culture Concentration; Creativeness; Comradeship என்று சொல்லலாம்.

கலைகளின் பெருமைக்காகவே அதைக் கற்கவேண்டுமேயொழிய வேறு எந்த வகையான நோக்கத்திற்காகவும் அல்ல. கலைகளைக் கற்பதனால் இயற்கையின் நியதிகளை ஓரளவிற்கு அறியக்கூடியதாகின்றது. கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத கல்வி பூரண கல்வியாகாது. கலைக்கல்வியை ஒருவன் பொறுமையுடனும் ஆர்வத்துடனும் கற்பானானால் அவனிடத்தில் நற்பண்புகள், சிறந்த சுபாவ உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. ஒருவனின் ஆளுமையும் விருத்தியாகின்றது. பரந்த நோக்குடையவனாக ஆகின்றான். மாணவர் கோஷ்டி கானம், வாத்தியக் கோஷ்டி, கும்மி, கோலாட்டம், கோல அப்பியாசம், இசை நாடகம், நாட்டிய நாடகம் இவற்றில் பங்குபற்றுவதனால் மாணவரிடையே ஒற்றுமை உணர்வு, பொறுப்புணர்ச்சி, ஒழுங்கு முறை, கட்டுப்பாடு ஆகிய நற்குணங்கள் வளர்கின்றன. கூட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவோருக்கு ஒரு வகையான இன்ப உணர்வு ஏற்படுகின்றது.

கலைகளைக் கற்பதனால் மனோதர்மத்தை வளர்க்கக்கூடிய வாய்ப்புகள் நிறைய வுண்டு. அத்துடன் ஆண், பெண் இரு பாலார்க்கும் சமமான முக்கியத்துவமே கிடைக்கின்றது. நுண்கலைகளுள் ஒன்றினைக் கற்பதனால் பிற்காலத்தில் சந்தோஷத்தையும் நற்பயன்களையும் பெறக்கூடியவராகின்றனர். பாடுதல், வரைதல், நடனமாடுதல் ஒருவருக்கு மன அமைதியைக் கொடுக்கவல்லன. பாடசாலை வாழ்க்கை இன்பகரமானதாக அமைய வேண்டுமானால் அவருக்குக் கலைக்கல்வி அளிக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

பிள்ளைகள் இயற்கையாகவே கலை உணர்வு படைத்தவர்கள், கலைவகுப்புக்கள் மாணவரின் செவிகளுக்கும், கண்களுக்கும், உடற்றசைகளுக்கும், சுவாசப்பைகளுக்கும் பயிற்சி கொடுப்பதல்லாமல் ஞாபகசக்தியையும் வளர்க்கின்றது. மேலும் ஓய்வு நேரத்தை வீணாகக் கழியாமல் பிரயோசனமான முறையில் கழிக்க உதவுகின்றது. மற்றவர்களின் பாடுதலையும் ஆடுதலையும் நயந்து இரசிக்கக் கூடிய திறமையும் வளர்கின்றது. ஒரு பாட்டைக்கேட்டு இரசிப்பதிலும் தான் உணர்ந்து நயந்து பாடுதலிலே தான் ஒருவனுக்குக் கூடிய இன்ப உணர்வு ஏற்படுகின்றது.

கலைவளர்ச்சிக்குக் கேள்வி ஞானம் முக்கியமாகும். குறிப்பாக இசைக் கலை வளர்ச்சிக்கு நல்ல தரமான சங்கீதம் கேட்டு வருவதால் சிந்தனைசக்தியும் இரசிகத் தன்மையும் வளர்கின்றன. இசை அறிவைப் பரப்புவதில் வானொலியும் இசைத்தட்டு களும் முக்கியபங்கு வகிக்கின்றன என்றே கூறல் வேண்டும். ஆனால், மக்களைச் சோம் பேறிகளாக்கத் தயார்ப்படுத்தப்பட்ட சங் கீதமே ஆக்கி வருகின்றது. இதனால் ஒரு வரின் கற்பனைசக்தி தடைப்படுகின்றது.

ஜீவனோபாயத்தை மனத்தில் வைத்துக் கொண்டு சங்கீதம் பயிலுகின்றவர்கள் பொறுமையுடனும் ஆர்வத்துடனும் தங்கள் வாழ்நாளை, நன்கு சாதகம் செய்வதிலும் சபாகான உருப்படிகளைக் கற்பதிலும் செல வழித்தல் வேண்டும். கலை கலாச்சார விருத்தியை முன்னிட்டு இசைக்கல்வியைப் பயிலுபவர்கள் பிற்காலத்தில் சிறந்த இசை ஆசிரியர்களாகவும் பிரபல சங்கீத கானசபா விற்பனர்களாகவும் நல்ல தரமான இரசிகர் களாகவும் வருவது திண்ணம்.

பூரண மன அமைதியையும் ஆன் மிகத்துறையில் நிறைவையும் தரக்கூடிய நுண்கலைகளைக் கற்றுத் தெய்வ அநுக்கிரகத் தைப் பெற்றுப் பிறவிப் பயனை எய்து வோமாக!

திருமதி நா. தணிகாசலம்
இசைப்பிரிவு, (இரண்டாம் வருடம்)

---

## கல்வி முன்னேற்றம்

ஒரு நாட்டிலே கல்வி முன்னேறியுள்ளதா என்பதை அறிய ஐந்து வகை யான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். அந்நாடு தன் தாய் மொழியைச் சரியாகவும் தெளிவாகவும் கையாள்கின்றதா, பண்பாகவும் அன்பாகவும் மக்கள் நடக்கின்றார்களா, அழகைப் போற்றும் மனப்பாங்கு அவர்களிற் காணப்படுகின்றதா, செயலாற்றுவதிலே ஆர்வம் தெரிகின் றதா, தொழில்கள் யாவும் ஏற்றத்தாழ்வின்றி மதிப்புப் பெற்றுள்ளனவா என்பதே இந்த ஐந்துவகை ஆராய்ச்சிகளாகும்.

— மறே பட்லர்

# 'சரிநிகர் சமானமாய் வாழ்வம் இந்த நாட்டிலே'

[சண்முகப் பிரியா மண்டபத்தில் விரிவுரையாளர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் 1978-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆந் திகதி 'பெண்கள் தொழில் பார்த்தல் அவசியமா' என்ற தலையங்கத்தில் பட்டிமன்றம் ஒன்று நடைபெற்றது. இதில் ஆரம்பக் கல்வி மாணவ ஆசிரியைகளுடன் இசைப்பிரிவு இரண்டாம் ஆண்டு மாணவ ஆசிரியர் திரு. பொன். சுந்தரலிங்கமும் கலந்துகொண்டார். பட்டிமன்றத்தில் வெளியிடப்பட்ட இருவகைக் கருத்துக்களையும் தொகுத்த இரு கட்டுரைகளை இங்குத் தருகின்றோம்.]

இன்றைய விஞ்ஞானயுகத்திலே நவீன மகளிர் பணியாற்றாத துறையே இல்லையெனலாம். பிரதம மந்திரியாக, எதிர்க் கட்சித் தலைவியாக, நீதிபதியாக, டாக்டராக, பொறியியலாளராக, சிவில் உத்தியோகத்தராக, நகரப் பாதுகாவலராக, பஸ் நடத்துநராக இப்படியே அவர்கள் பணியாற்றும் தொழில்களையெல்லாம் அடுக்கிக் கொண்டே போகலாம். இன்று மகளிர் இல்லாத தொழில் நிலையங்களே இல்லை. அவர்களது நளினமான கைகள் தொட்டன அனைத்தையும் துலங்கச் செய்துள்ளன. எனவே அவர்கள் பணிக்கு மகத்தான வரவேற்புக் கிடைக்கிறது.

அனைத்தையும் தமக்கே உரிமையாக்கி வாழும் ஆணினமே! பெண்ணினம் உயர்வடைவதைக்கண்டு பொறாமை அடையாதீர்கள். திறமைக்கு மதிப்புக் கொடுங்கள்.

பன்மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பலராலும் உயர்ந்த நூல் எனப் போற்றப்படும் வள்ளுவத்தில் நமது வாழ்க்கைக்கு வேண்டியன அனைத்தும் கூறப்பட்டுள்ளன. வள்ளுவம் வகுத்த வள்ளுவரே முதன்முதல் பெண்களை வீட்டுக்குள் பூட்டி வைக்கும் விந்தையைச் சாடியவர். அவர் ''சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?'' என வினவிப் ''பெண் தனது நிறையினைக் காக்கும் காப்பே தலை' எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார். கவிஞர் பாரதியும் ''வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'' எனக் கூறிப் புதுமைப் பெண்ணை வெளியில் பவனிவர வழி சமைக்கிறார். பெண்கள் அலுவலகங்களில் முக்கிய பதவிகளை வகித்துப் பெருமையுடன் வாழ்வதைப் பொறுக்காத சிலர் ''பெண்கள் இப்படிச் செல்லலாமா? பண்பாடு கலாச்சாரம் பாழாகின்றதே'' எனப் பிதற்றுகின்றனர். பொற்காலம் எனப் போற்றப்படும் சங்க காலத்தைப் பாருங்கள். அங்கு பெண்கள் முப்பதின்மர் ஆண்களுடன் சரி நிகர் சமானமாய் அமர்ந்து சிறந்த புலமையை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அன்பு,அறிவு, ஆய்ந்த சொல்வன்மையுடைய சிறந்த தூதுவராகவும் திகழ்ந்திருக்கின்றனர். வீரப் பெண்களாக விளங்கி நாட்டுப் பற்றுள்ள நன் மக்களை ஈன்று புறந்தந்திருக்கின்றனர். பெண் ஆணுடன் சரிநிகர் சமானமாய் வாழ்தல்தான் பண்பாடு, கலாச்சாரம், நயத்தக்க நாகரிகம் என்பதனை எல்லோரும் தெரிந்து கொள்வோம். வேலைக்குச் செல்லும் பெண்கள் வீட்டுவேலையை ஒழுங்காகச் செய்வதில்லை. கணவர் குழந்தைகளை அன்பாகப் பேணுவதில்லை, என்றெல்லாம் குறை காண்பதே குறிக்கோளாகக் கொண்ட சிலர் குமுறுகின்றனர். காரியாலயம் வரும் பெண் அதிகாலை நித்திரைவிட்டு எழுகிறாள். தேனீபோலச் சுறு சுறுப்பாக இயந்திரமோ என வியக்கும் வண்ணம் விரை

வாக எல்லாப் பணிகளையும் குறைவின்றிச் செய்கிறாள். அவளது அன்புப் பணிக்கு இனிய கணவரும் பிள்ளைகளும் இன்முகத்துடன் ஒத்தாசை புரிகின்றனர். பணியாற்றும் பெண் ஒவ்வொரு செயலையும் திட்டமிட்டுத் திறமையாக நிறைவேற்றுகிறாள்; உணவினையும் நிறைந்த போசாக்குடையதாய்க் குறைந்த விலையில் தயாரித்துக் கணவன் பிள்ளைகளைக் கவனமாகப் பேணுகிறாள். காரியாலயப் பணிகளைக் கருத்தோடு செய்வது போலப் பிள்ளைகளின் படிப்பிலும் அன்றாடம் கவனம் செலுத்தி அவர்களையும் பூரண வளர்ச்சி பெற்ற நற்குடிமக்களாக உருவாக்குகிறாள்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக ஊசி முதல் உலக்கைவரை எல்லாப் பொருட்களுமே விலை உயர்ந்து கொண்டே செல்கின்றன. கணவன் மனைவி இருவரும் உழைப்பாளிகளாக இருந்து பெறும் ஊதியமே இன்றைய வாழ்க்கை வரவு செலவைக் கட்டுப்படுத்தப் போதவில்லையென்றால் தனியொருவரின் ஊதியம் எந்தமூலைக்கு? உழைக்க வாய்ப்பின்றி வீட்டில் முடங்கியிருக்கும் பெற்றோர் சகோதரர்களைத் தம் உழைப்பால் பேணிப் பெருமையுடன் வாழச் செய்யும் எத்தனை சகோதரிகளை நம் கண்முன்னே காண்கின்றோம்? கணவரை இளம் வயதில் பிரிந்த காரிகைகள் பலருக்குத் தொழில் எவ்வளவு தூரம் கைகொடுத்து அவர்களது பொருளாதாரத்தை நிறைவு செய்து கவலையும் யையும் ஓரளவு மறக்கச் செய்கிறது? இவர்கள் தொழில் செய்யாவிட்டால் இவர்களும் இவர்களது செல்வச் சிறார்களும் அநாதைகளாக மாறி அவதிப்படமாட்டார்களா?

திருமணச் சந்தையிலே இன்று சீதனமா, தொழில் பார்க்கும் பெண்ணா, என்ற கேள்வியே இடம் பெற்று வருகிறது. இன்றைய பொருளாதாரப் பிரச்சினை சமூக அமைப்பிற் கேற்பப் தொழில் பார்க்கும் பெண்களை ஆண்கள் விரும்பி மணம் செய்கின்றனர்.

வீட்டினை விளங்கச் செய்யும் பெண் இன்று நாட்டினையும் நலம் பெறச் செய்கிறாள். வீடு வாழ்ந்தால் நாடு வாழும். வான் புகழ் வள்ளுவர், அறவோராகிய இளங்கோ, கவிச்சக்கரவர்த்தி கம்பர், கவிஞர் பாரதி, கவிமணி, திரு. வி. க. ஆகியோர் பரம்பரையில் வாழையடி வாழையாக வந்த நம் சகோதரரே! சகோதரிகள் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் சரிநிகர் சமானமாய் வாழ ஒத்துழைப்பு நல்குவீர்.

**திருமதி பூ. ஏனுதிநாதன்**
முதலாம் வருடம் (A)
(ஆரம்பப் பிரிவு)

## திறமையும் செயலாற்றலும்

திறமை என்பது பொறுப்புணர்ச்சியாலும் செயற்படும் ஆற்றலாலும் அமையும். கடமையுணர்வில்லாத திறமையால் எவ்வித பயனும் இல்லை.

— இயன் மக்லரென்

# பெண்களும் தொழிற் சமத்துவமும்

இன்றைய நிலையிலே நமது நாட்டிலே வாழும் பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக நின்று போட்டியிடுகின்றார்கள். அதிலும் தொழில் துறையினைப் பொறுத்தவரையில் ஒருபடி மேலே சென்றுவிட்டனரென்றே சொள்ளல் வேண்டும்.

பேருந்துகளில் அனுமதிச்சீட்டுக் கொடுப்பதிலிருந்து உயர் அதிகாரிகளாகப் பணிபுரிவது வரை அவர்கள் ஆண்களுக்குப் போட்டியாக முன்னேறிச் சென்றுள்ளனர். இந்நிலை நாட்டிற்குத் தேவையானதொன்றா? நமது நாட்டிலே பெருந்தொகையான படித்த வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அல்லலுற்று, பார்க்கும் இடமெங்கும் வேலை எங்கே, எங்கே, என்று அலைந்து திரிந்து அல்லற்படுகையில் வெறும்பொழுது போக்கிற்காகவும் கௌரவத்திற்காகவும் வேலை தேடி வருகின்ற பெண்கள் அம்முயற்சிக்குப் பெரும் இடையூறினை விளைவிக்கின்றார்கள். இப்பெண்கள் வேலைத்தலங்களில் தமக்கெனக் கணிசமான அளவு ஒரு தொகையினைச் சுலபமாகப் பெற்றுக்கொண்டு விடுவதனால் படித்து விட்டுத் தமது வாழ்வைச் செவ்வனே நடத்துவதற்காகத் தொழில் வாய்ப்புக்களைத் தேடியலையும் வாலிபர்கள், பட்டதாரிகள் பலர் மன விரக்தியடைந்த நிலையில் உள்ளனர்.

உள்ளூர் வேலை வாய்ப்புக்களில் மட்டுமல்லாது வெளி நாட்டு வேலை வாய்ப்புகளிற் கூடப் பெண்கள் ஆண்களுக்கு எதிராகப் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலை மிகவும் கண்டிக்கப்படவேண்டியதொன்று. இந்நிலை மேலும் நீடித்து வருமானால் எல்லா வேலைத்தலங்களிலும் பெரும்பாலும் பெண்கள் கூட்டத்தையே காண வேண்டிவரும்.

நம் கலாச்சாரத்திற்கு ஏற்ற பூரணத்துவமான சமுதாயம் ஒன்றினைக் கட்டியெழுப்பும் வேலையில் பெண்களின் பங்கு எத்தகையது என்று நாம் நன்கு சிந்தித்துப் பார்ப்போமானால் அதற்குரிய விடை மேற்கூறப்பட்ட பெண்களின் இச் செயலை ஆதரிக்கும் என்று கூறல் இயலாது. சமுதாயத்தைக் கட்டியெழுப்புகின்ற வேலையில் பங்கெடுக்க விரும்பும் பெண்கள் வீட்டுக்கு வெளியே வந்து தான் கருமமாற்றவேண்டும் என்றில்லை. தம்மில்லத்தினுள்ளே இருந்துகொண்டு தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் தமது பங்கினைச் சரிவரச் செய்யலாம்.

இக் காலத்துப் பெண்கள் வேலை பார்ப்பது தமக்குக் கௌரவம் என நினைக்கின்ற காரணத்தினால் பெண்களுக்கு உரித்தான சில கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற முடியாது தவறி விடுகின்றனர். தமது கணவர்மார்களுக்குரிய பணிவிடைகளைச் செய்வதிலும் தமது பிள்ளைகளின் தேவைகளைக் கவனிப்பதிலும் தவறி விடுகின்றனர். வீட்டிலே இல்லத்தரசிகளாக விளங்கவேண்டிய பெண்கள் தொழிற்கூடம் சென்று விடுவதானால் தமது கணவர், பிள்ளைகளுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யாமலும், அவர்களுக்கு வேண்டிய போஷாக்குணவைஅளிக்காமலும், தமது பிள்ளைகளின் மனோ வளர்ச்சியைத் தூண்டும்விதமாக அவர்களைச் சிறப்பாக இரட்சிக்காமலும் தவறி விடுகின்றனர்.

வேலைத் தலத்திலிருந்து களைத்து வீடு வந்துசேரும் கணவன்மார்கள், பாடசாலையிலிருந்து பசியுடன் வீடுவந்து சேரும் பிள்ளைகள் இப்பெண்களின் நேரடிக்கவனிப்பின்மையால், இருபாலார்க்குமிடையில் அன்பு குன்றி விடப்பெரிதும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் வீட்டு நிர்வாகமானது இல்லத்தரசியின் நேரடியான கவனிப்பில்லாமல் சீரழிந்து போகின்றது. இதனாலேதான் கணவன் மனைவியர்க்கிடையே, தாய் பிள்ளைகளுக்கு இடையிலே பெரிதும் பிணக்குகள் ஏற்படுகின்றன. இப்பிணக்குகள் நாளடைவில் வளர்ந்து கணவன்

மனைவியரிருவரும் விவாகரத்துப் பெறுதலும் வழக்கத்திலுண்டு.

மேலும் சில விடுகளிலே பெண்கள் தாம் தொழில் பார்க்கின்றேமென்ற அகந்தையினால் தமது கணவன்மாரைச் சரியான படி மதிக்கத் தவறி விடுகின்றனர். பிள்ளைகளும் தாயின் நேரடிப் பராமரிப் பின்மையால் கட்டாக்காலிகளாக மாறி விடவும் வாய்ப்புண்டு. இன்றைய பெண்கள் பலர் தாம் வேலைபார்ப்பதற்குக் கூறும் முக்கிய காரணம் பொருளாதார வசதியை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டே என்பதாம். விலைவாசி மிக உயர்ந்துள்ள இந்நாளில், இக்கூற்றில் ஓரளவு உண்மை இருப்பது போல் தோன்றுகிறது. எனினும் இப்பெண்கள் தமது வீட்டில் ஒரு சிறு காய் கறித்தோட்டம் போடுவதன் மூலமோ அன்றி நூல் நூற்றல், கடதாசிப் பைகள் தயாரித்தல் போன்ற சிறு வேலைகளைச் செய்வதன் மூலமோ தமது பணவருவாயைக் கணிசமான அளவு பெருக்கிக்கொள்ளலாம்.

அற்ப பொருளாதார வசதி கருதித் தொழிற்கூடம் செல்ல விரும்பும் பெண்கள், தொழில் பார்க்க வெளியே செல்வது பல பிரச்சினைகளை ஏற்படுத்துமென முன்னரே கண்டோம். எனவே பெண்கள் தாம் கற்ற கல்வியைப் பயன் படுத்தத் தொழிற் கூடத்திற்குத்தான் செல்லல் வேண்டும் என்ற நியாயமற்ற வாதத்தை விடுத்துத் தமது குடும்ப நல்வாழ்வு கருதித் தொழிற்கூடம் செல்லாதிருப்பதே நன்று. எனவே, பெண்கள் தமது இல்லத்திலேயே இருந்து கொண்டு தமது கணவன்மார், பிள்ளைகள், மாமன்மார், மாமிமார், பெற்றோர் போன்றவர்களுக்குக் குறிப்பறிந்து சேவைகள் செய்து அதனால் நாட்டிற்கு நல்லதொரு தேசிய வீரர்களாக கத் தமது கணவன்மார்களையும், பிள்ளைகளையும் உருவாக்குவதே அவர்களது முதற் கடமையாகும். இவ்வாறு பெண்கள் கடமையாற்றுவதனால் அவர்களது பிள்ளைகள் நாட்டிலே நற்குடிப் பிரசைகளாக வாழ வழி பிறக்கும்.

இங்ஙனம் பெண்கள் தமது கடமையைச் செய்தால் இல்லறம் நல்லறமாகத் திகழும். இந் நல்லறத்தில் விளைகின்ற இன்பத்தை விடவா அற்ப பொருளாதாரப் பிரச்சினை பெரிது? இந்நல்லறமே பெறற்கரிய பேறன்றோ?

எனவே முடிவாகப் பெண்கள் தொழிற்கூடம் செல்லாமல் தாம் கற்ற கல்வியை நாட்டிற்கும், வீட்டிற்கும் நன் முறையில் பயன்படுத்தி ஆண்களின் வேலை விடயத்திற் தலையிடாது இருப்பார்களேயானால் அவர்களது பெருமை ஆண்குலத்தவரால் சிறப்பிக்கப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

திருமதி ம: சிவகுரு
முதலாம் வருடம் B
(ஆரம்பப் பிரிவு)

---

## சூழலுக்கேற்ப வாழல்

தான்வாழும் சூழல் தன் மனப் போக்கிற்கு உகந்ததாய் இருக்கும் பொழுது ஒருவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கை. ஆனால் சூழலுக்கு உகந்தவாறு தன் மனப்போக்கையும் வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ள வல்லவன் முற்கூறியவனிலும் கூடிய மகிழ்ச்சி உடையவனாவான்.

— ஹியூம்

# இராமாயணத்தில் இராம இராவண பாத்திரங்கள்

இராமாயணத்தில் வரும் முக்கிய பாத்திரங்களில் இராமனும் இராவணனும் பிரதான இடத்தை வகிக்கின்றனர். கம்பர் இக் காவியத்தை ஏழு காண்டங்களாக வகுத்து விளக்கினும், இதனைக் கற்றுக் கருத்திற் கொள்பவர் இரண்டு வரிகளிலும் இரத்தினச் சுருக்கமாகக் கூறி விடலாம். ''இராமன் பிறந்தான்; இராவணன் இறந்தான்'' என்று கூறுவதில் இக் காவியம் அடங்குகிறது. இராமனின் பிறப்புக்கும் இராவணனின் இறப்புக்கும் உள்ள தொடர்பென்ன? இராமனின் பெருந்தன்மை என்ன? இராவணனின் கீழ்மைத் தன்மை என்ன? இவற்றில் கம்பரின் இலட்சியம் தெற்றென விளங்குகிறது.

இராமன் ஓர் அரசன், உத்தமன், வீரம் பொருந்தியவன். இராவணன் ஓர் அரசன், சிவபக்தன், வீரன். இவர்களுக்கிடையில் ஒரு வேற்றுமை; இராமன் ஏக பத்தினி விரதன். இராவணனோ பிறன்மனை விழைதலாம் புன் செயலுடையவன். இவ்விரு தன்மைகளிலும் இவ்விருவரும் இரு துருவங்களாகத் தோன்றுகின்றனர். இத் தன்மைகளைக் கம்பர் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்.

இராம, இலக்குமணர் விசுவாமித்திரரின் வேள்வியை முடித்த பின்னர், அவரைத் தொடர்ந்து மிதிலை நோக்கிச் செல்கின்றனர். கன்னிமாடத்திலிருந்த சீதை சாளரத்தின் வழியாகக் கீழே நோக்குகிறாள். இராமனைக் காண்கிறாள். இராமன் சீதையைக் காண்கிறான். ஒருவரையொருவர் நோக்கி, ''இருவரும் மாறிப் புக்கிதயம் எய்துகின்றனர்.'' பின் மூவரும் ஜனக மன்னன் மாளிகைக்கு ஏகுகின்றனர்.

மாலைப் பொழுது. மன்னன் அவர்களுக்குத் தனி விடுதி கொடுக்கிறான். இராமனுக்கு உறக்கம் வரவில்லை. இதற்குக் காரணம் யாது? சீதையிடம் வைத்த காதலன்று; ''நான் கண்ட பெண்மணி வேறொருவன் மனைவியாக இருப்பின், இது பெரும் பாவமாக முடியுமே'' என்று வருந்துகிறான். பிறகு மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு, இதுவரை தவறு செய்யாத என்னுள்ளம் இன்று அவளைக் கண்டு விரும்புமாயின், அவள் கன்னியாகவே இருத்தல் வேண்டும்'' என்று எண்ணுகிறான்.

''ஏகும் நல்வழி அவ்வழி என்மனம்
ஆகுமோ அதற்கு ஆகிய காரணம்
பாகு நன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறு இதற்கு ஐயுறவு இல்லையே''

இராமனின் மன நிலையையும், ஏக பத்தினி தர்மத்தையும் இப் பாடல் மூலம் அழகுபடச் சித்திரிக்கிறார் கம்பர்.

பூழி வெங்கானம் நண்ணி, ஏழிரண்டாண்டு காலங் கழிக்கச் செல்கின்றனர். இராம, சீதா, இலட்சுமணர். பஞ்சவடி செல்லும் வழியில் கோதாவரிக் கரையில் ஒரு சம்பவம், கோதாவரியில் ஸ்நானத்தை முடித்து. ஒரு சோலையில் இருக்கிறார் இராமர். அப்போது சூர்ப்பனகை வருகிறாள். தன்னுருவம் மாற்றித் தெய்வமகள் போல அசைந்து, நெளிந்து வருகிறாள். தன்னை மணக்குமாறு இராமனை வேண்டுகிறாள். இராமன் அவளை ஏறெடுத்து நோக்கினானில்லை. இலக்குவன் அவளை அங்கவீனப்படுத்தி அனுப்புகிறான். மனைவியர் மூவரை மணந்தவன் தசரதன், அவனின் மகன் இராமன். அவன் நினைத்திருந்தால் இவளை மனைவியாக ஏற்றிருக்கலாம். அவனுடைய ஏக பத்தினி தர்மம் அதற்கு இடமளிக்கவில்லை.

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். அசோக வனத்திற் சிறை வைத்தான். அவளைத் தேடிச் செல்கின்றனர், இராம இலக்குமணர். கிட்கிந்தையில்

சுக்கிரீவன், அனுமன் ஆகியோரைச் சந்திக்கின்றனர். சுக்கிரீவனின் மனைவியை வாலி கவர்ந்தமையை அனுமன் வாயிலாக அறிகிறான் இராமன். இச் செயல் இராமனுக்கு ஆத்திரத்தை மூட்டுகிறது. ''ஒருவன் தன் இளையோன் தாரம் வெளவினன் என்ற சொல் தரிக்குமாறு உளதோ'' என்னும் வரிகளில் இவ்வாத்திரத்தை அழகாகச் சித்திரிக்கிறார் கம்பர்.

அடுத்து, இராவணன் என்னும் பாத்திரத்தை நோக்குவோம். சீதையை வஞ்சமாகக் கவர்ந்து சென்று அசோக வனத்திற் சிறை வைக்கிறான். அவளை இசையவைப்பதற்காக அவள் காலடியில் விழுந்து வணங்குகிறான். தன் ஆண்மையை மறந்து, பெண்ணை வணங்க வேண்டிய நிலை, பிறன் மனை நயத்தலாகிய இழி செயலால் ஏற்படுகிறது. மேலும் சீதை அவனைத் துரும்பென மதித்து, இழித்துரைத்து, இராமனின் பெருந்தன்மையை எடுத்துரைக்கின்றாள்.

இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நடக்கிறது. இராவணன் இராமனம்புகளாலே தாக்கப்பட்டு, நிராயுதபாணியாகின்றான்; அட்டதிக்கு யானைகளுடன் பொருத மார்பின் வலிமையை இழக்கிறான். கைலயங்கிரியை அசைத்த தோள் வலிமையை இழக்கிறான். நாரத முனிவர்க்கேற்றதாக, இங்கிதமாகப் பேசிய நாவன்மையை இழக்கிறான். பத்துக் கிரீடங்களை இழக்கிறான். இறைவனால் கொடுக்கப்பட்ட வாள் வலியை இழக்கிறான். வீரத்தையும் களத்திலே விட்டான். இந்நிலையில் ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என இயம்புகிறான் இராமன். அவமானத்தால் கூனிக் குறுகி நடக்கிறான் இராவணன். ''சிந்துரக் களிறு கூடம்புக்கென, பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கி, அரண்மனை புக்கான். இந்நிலை வரக் காரணம் என்ன? மற்றவன் மனைவியை மனத்திற் கொண்டதாற்றானே ஏற்பட்டது? இச் சம்பவத்தைக் கம்பர் தம் காவியத்தில் விளக்குகிறார்.

அடுத்தடுத்து நடந்த போர்களிலே தன் சகோதரர், சுற்றத்தாரை இழந்தான். இராவணன். ஏன்? தன்னையே போர்க்களத்தில் இராமனம்புகளுக்குப் பலியாக்கிறான். இராமனின் அம்பு இராவணனின் உடனிலுள்ளே எதைத் தேடியது என்பதைக் கம்பர் தம் காவியத்தில் மண்டோதரியின் வாயிலாக எடுத்துக் கூறுகிறார்.

வெள்ளெருக்கஞ் சடைமுடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலுங்கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி
உயிரிருக்கு மிடம்நாடி இழைத்தவாறே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி
உடல் புகுந்து தடவியதோ ஒருவன்வாளி

இராமனின் அம்பு இராவணனின் உடலினுள்ளே புகுந்து, சீதை மேற்கொண்ட காதல் எங்கிருக்கிறது என்று அவ்வுடல் முழுவதும் தடவித் தேடியதாம்.

இவ்வாறு ஏகபத்தினி தர்மத்தின் சிறப்பையும் பிறன் மனை நயத்தலின் இழிவையும் முறையே இராமன் இராவணன் ஆகிய பாத்திரங்களின் மூலம் விளக்கும் கம்பரின் இலட்சியம் இராமாயணம் என்னும் காவியத்தில் நோக்கற்பாலது.

**திருமதி ப. சந்திரராசா**
முதலாம் வருடம் A.

---

# ஒளியிழந்த விழி தந்த வாழ்வு

அந்தி சாயும் நேரம் — ஆங்கோர்
ஏந்திழையாள் நின்றிருந்தாள்
உற்று நோக்கி அவளழகைச்
சற்று எட்டி நின்றே ரசித்திட்டேன்.

வேல் போல் அவள் விழியசைய
நூல் போல் இடை நெளியப் — பசும்
பால் போல் மேனி பளபளக்க
ஆல் போல் அசைவற்று நிற்குமவள்

ஆடிடும் பொன்மயிலோ — இசை
பாடிடும் பூங்குயிலோ — துள்ளி
ஓடிடும் புள்ளி மானோ — எங்கும்
தேடியும் காணாத் திரவியமோ — அவள்

விழியழகை வெல்ல — இங்கு
ஊழின் பெரு வலியாலும் இயலாது
அழியாத காவியக் காதலுக்குக் கொஞ்சம்
வழிபிறக்க மெல்லச் சிரித்திட்டேன்

சிரிக்கவில்லை பேதையவள் — அழகு
அரிவையவள் அகம்பாவமோ என்றெண்ணி
அரித்தது காதல் என் நெஞ்சைத்
துரிதமாக அவளருகே சென்றேன்.

கிட்டப் போனதும் — அவள்
எட்டி ஓடவில்லை — பூஞ்
சிட்டெனப் பறக்கவுமில்லை — கரம்
தொட்டவுடன் தலை நிமிர்ந்தவளைக்

குனிந்து யான் அன்புடன் அந்தப்
பனி மலரைக் கூர்ந்து மெல்லக்
கனிவுடன் நோக்கியதும் உடன்
பனித்தன என் விழிகள் பணிவுடனே

ஒளியில்லை அவள் கருவிழிகளிலோர்
தெளிவில்லை என் மனத்தினில்
—அவளுடனே
பளிச்சென்று தோன்றிய மெய்க் காதலால்
களிப்புடன் அமைத்திடுவேன் என் வாழ்க்கை

சோதனை கொண்ட அவள் வாழ்வு கண்டு
வேதனையால் வெதும்பிய என் உள்ளம்
சாதனை புரிய நினைந்து — கீதையின்
போதனை வழிநின்று அவளை
அணைத்திட்டேன்

— **செல்வி செல்வநாயகி பாலசிங்கம்**
(''கீதைப்பிரியா'')
2ஆம் வருடம் (மனையியற்பிரிவு)

---

### நிதியும் நீதியும்

அறிவாளிகள் தம்பால் அகப்பட்ட நிதிகளை நீட்டி நீதி செய்வார்கள்.
நீதியைக் குறுக்கி நிதிசெய்தால் ஓயாமல் அழநேரும்.

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

---

# புராதன அலங்கார வடிவங்கள்

மனிதனில் இயற்கையாய் அமைந்த இயல்பான குணம் அலங்காரம் செய்வதே யாகும். மனிதனுக்கு உண்ண உணவும் வசிக்க வீடும் கிடைக்கப் பெற்றதும் அவன் தன்னை அலங்கரிப்பதற்குக் கற்றுக்கொண்டான். குளிர் பிரதேசங்களில் வாழ்ந்தவன் தான் கொன்ற மிருகத்தின் தோலை உடையாகத் தரிக்கவும் எலும்பினால் செய்யப்பட்ட பொருட்களைப் பாவிக்கவும் கற்றுக் கொண்டான். உஷ்ணம் கொண்ட உடை தரியாதவன் பூக்களையும் இறக்கைகளையும் சிப்பி சங்கு போன்றவற்றையும் அலங்காரப் பொருட்களாகப் பாவிக்கக் கற்றுக் கொண்டான்.

தேவைப் பொருளும், அலங்காரமும் சரிசமமாக விருத்தியடைந்து வளர்ந்து வந்தன. மனிதன் திருப்திகரமான பாத்திரங்களைச் செய்வதில் முன்னேற்றமடைந்ததும் அவற்றை வர்ணத்தால் அலங்கரிக்கவோ செதுக்கி எடுக்கவோ தெரிந்து கொண்டான்.

புராதன அலங்கார அமைப்புக்களெல்லாம் மிக இலகுவானதும் பொருத்தமுமான தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொண்டு ஆக்கப்பட்டவையாகும். அதற்கடுத்தபடியாக ஒரு பொருளுக்குரிய அலங்காரத்தை இன்னொரு பொருளுக்கு அமைத்து அழகு செய்வதும் ஒருமுறையாகும். உதாரணமாகப் புராதன மட்பாண்டங்களில் பின்னல் முறையில் அமைந்த அலங்காரத்தை உலோகங்களிலோ அல்லது மரத்தினால் ஆக்கப்பட்ட கட்டிடங்களிலோ அமைத்துக் கொண்டதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஓவிய சிற்ப ஆரம்பத்திற்கு ஒன்றைப் பின்பற்றிச் செய்த முறைதான் வித்திட்டது என்றால் அது மிகையாகாது.

இலங்கையில் காணப்படும் புராதன அலங்கார முறையானது புராதன ஓவியக் கலைஞர்களாலும் கைவினைஞர்களாலும் (Craftmen) திறமையுடன் உருவாக்கப்பட்டது. இன்று இவை அழிந்த விகாரைச் சித்திரங்களிலும் உபகரணப் பொருட்களிலும் (நூதனசாலையிலும்) காணக் கூடியதாக இருக்கின்றன.

இவை பரம்பரை வழியாகவும் மரபு வழியாகவும் வந்தவை. பொலநறுவ, ஜப்பகூவா, கம்பளை, கண்டி ஆகிய இடங்களில் விருத்தி பெற்று இன்று இவைகள் விகாரைகள், குகைக் கோவில்கள், சுவர்கள், கூரைகள், மரச்சிற்பங்கள், சிற்பத்தூண்கள், ஏடுகள், போர்க்கருவிகளான ஈட்டி, வாள் போன்ற உபகரணங்களிலும், ஆலவட்டங்கள், மட்பாண்டங்கள், ஆடை அணிகள், சீலைகள், தோரணங்கள் என்பவற்றிலும் காணக்கூடியதாக இருக்கின்றன. சிங்களப் புராதன அலங்காரத்தைப்பற்றிக் கூறும் நூல் ரூபாவளி என்னும் நூலாகும். (Rupavalya)

புராதன சிங்கள அலங்காரங்கள் அடிப்படை உருவங்கள், அமைப்பு (Shape) ஒழுங்கு (Direction) ஒத்திசைவு (Harmony) லயம் (Kythm) சமநிலை (Balance) இவற்றின் அடிப்படையில் கற்பனைத் தேவையின் பொருட்டு உருவாக்கப்பட்டுப் பலவித நாமங்களால் அழைக்கப்படுகின்றன.

''ரூபாவளி'' என்னும் புராதனக் கலை நூல் வாயிலாகப் புராதன ஓவியனையும் அவனைச் சித்திரம் பயில்விக்கும் ஆசானையும் பற்றிய தகவல்களும் அறியக்கூடியதாக உள்ளன.

புராதன காலத்தில் சித்திரம் பயிலும் மாணவர் வெற்றிலையையும், காணிக்கையையும் கொண்டு தம் குருவிடம் செல்வர். குருவானவர் அத்தபுவனு என்னும் கரும் பலகையைக் கொடுப்பர். இதில் ''வடி'' என்ற பூச்சுப் பூசி ''இங்கிரிகட்டுவ'' என்று எழுதுகோலால் சித்திரம் வரையத் தொடங்குவர்.

முதன் முதலாக ''வக்கத்தக்க'' என்னும் அலங்காரமே மாணவருக்கு வரைந்து காட்டப்படும். இதுவே புராதன ஓவியனின் முதற் சித்திரப் பயிற்சியாகும். இப்படியாக வரைந்து பயிற்சி பெற்ற ஓவியர்களே அன்றைய ஓவியக் கலைஞர்களாக விளங்கினர்.

# பிரயோக அலங்காரங்கள்



குந்திரிக்கள்




அன்னுசிமலர்



பூவிதழ்



பூங்கொடி





பத்மம்



மகரம்



ஹம்ச பூட்டுவ

அலங்காரக் கலையைப் பற்றி விளக்கம் பண்ணும் முன்னர் அலங்கார அமைப்பின் பிரயோகம் செய்யப்பட்ட நுட்பமான பதங்களை ஆராய்தல் அவசியமாகும்.

18-ம் நூற்றுண்டின் பின் கண்டிய சிங்கள அலங்கார அமைப்புப் பற்றி ஆராயின் கலைஞர்களால் பாவிக்கப்பட்ட பதங்களையும் அறியவேண்டும்.

அக்கால அலங்காரக் காட்டுருக்கள் மானசீக உருவங்களாகவும் தெய்வீகக் குறியீடுகளாகவும் பாவிக்கப்பட்டுள்ளன. மிருகங்கள், பறவைகள், மலர்கள், பூங்கொடிகள், பஞ்சபூதங்கள், சூரிய சந்திரக் குறியீடுகள் போன்றவை அலங்கார உருவங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## சிங்க அலங்காரங்கள்

புராதன சிங்கள இதிகாசங்களிலே இருந்து முக்கியமான ஒரு சின்னமாகச் சிங்க உருவம் இருந்து வந்துள்ளது. இச்சின்னம் கீர்த்தி, மகத்துவம், வீரம் என்பவற்றை எடுத்துக் காட்டப் பயன்படுகிறது.

சிங்களக் கலைஞர்களால் 13 விதமான சிங்க அலங்காரத் தோற்றங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ரூபா வளியில் 16 விதமான அங்க லட்சணம் பொருந்திய சிங்க அலங்கார வடிவங்கள் கூறப்பட்டுள்ளன.

## ஹம்ச அன்ன பூட்டுவ

சிங்கள அலங்காரக் கலையில் இந்துக்களின் கலை அம்சமும் அநேகமாகக் காணப்படுகின்றது. இந்த அலங்காரமானது சிங்கள அலங்காரத்தைத் தழுவிக் காணப்படுகின்றது. வழக்கமாக இரண்டு அல்லது மூன்று அன்னங்கள் ஒன்றிணைந்த கழுத்துக்களோடு பிணைக்கப்பட்டிருக்கும். அன்னங்கள் நாயை ஒத்த கால்களும் சிவந்த அலகும் மீனைப் போன்ற முகமும் பெற்றிருக்கும். ரூபாவளியின் அன்ன அலங்காரத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது.

நாயை ஒத்த கால்களும் ஆந்தையைப் போன்ற கண்களும் நல்ல இரத்தச் சொண்டும் மீனைப்போன்ற முகமும் குறுகிய வாலும் பாதங்களிரண்டும் நடையுடன் இணைந்த வண்ணம் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## மகரம்

18-ம் நூற்றுண்டில் சிங்களக் கட்டிடக் கலை, வில் வளைவுகளிலும், கதவுகளிலும், சிலைகளிலும் சாதாரணமாகப் பாவிக்கப்பட்டுள்ளது. மகரம் பக்கப்பார்வையில் ஒன்றை ஒன்று பார்த்தபடி வைக்கப்பட்டு அவற்றின் வாயிலிருந்து அலங்காரம் கிளம்பியபடி அலங்கரிக்கப்பட்டுள்ளது. ரூபாவளியில் மகரத்தைப்பற்றிக் கூறப்படும்போது யானையின் துதிக்கையும் சிங்கத்தின் பாதமும் பன்றியின் காதும் மீனின் உடம்பும் மிதந்த பற்களும் அனுமானுடைய கண்ணைப்போலும் அழகான வாலும் கொண்டுள்ளதாக விளக்கப்பட்டுள்து. இச்சின்னம் இந்தியக் கிரக நிலையைக் குறிக்கும் சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது. 108 அங்குல லக்கினத்திற்குள் ஒன்றுகப் பயன்படுத்தப்படுகிறது. இந்திய காதல்தெய்வம் மன்மதக் கொடியாகவும் விசேட மகரமாலையாகவும் உபயோகிக்கப்படுகிறது.

## பத்ம அலங்காரங்கள்

தாமரை மலரைப் பத்மம் என்றும் அழைப்பர். புராதன ஓவியக்கலையின் பத்ம அலங்காரங்கள் பிரசித்தி பெற்றவை. சிற்பங்களிலும், சித்திரங்களிலும் தாமரை மலரை அநேகமாகப் பாவித்துள்ளனர்.

சரஸ்வதி, புத்தபெருமான் போன்ற தெய்வீக உருவங்கள் அவை பத்மாசனங்களில் அமர்ந்திருக்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன.

## பிரயோக அலங்காரங்கள் (Applied Design)

புராதன அலங்காரக் கலையில் பிரயோக அலங்காரங்களாகப் பலா பெத்தி, சவடி, அரும்புவ, பனுவ, குந்திரக்கம், ஈரிழை போன்றவை மீட்டல் முறையில் தொடர்ந்து அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அலங்காரக் தட்டுக்கள், கதவு நிலைகள், பல்லக்குகள், போர்க்கருவிகள் மற்றும் உபகரணப் பொருட்கள் போன்றவற்றில் இவற்றை உபயோகித்து அலங்கரித்துள்ளனர்.

C. டானியல்
2-ம் வருடம் (சித்திரம்)

# நாட்டிய நாடகம்

முத்தமிழை வளர்த்த முடியுடை மூவேந்தர்களின் செங்கோலாட்சியில் நாடகக் கலையும், ஏனைய கலைகள் போன்று செழித்து வளர்ந்தது. இயல், இசை நாடகம் என்ற தமிழ் மொழியின் முப்பிரிவுகளையும் தன்னுள்ளடக்குவது நாடகம். அவ்வண்ணமே ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம் ஸாத்விகம் என்னும் நான்கு வகை அபிநயங்களைக் கொண்ட நடனத்தின் முப்பிரிவுகளான நிருத்தம், நிருத்யம், நாட்டியம் ஆகியன ஒருங்கே அமையப் பெற்றது ''நாட்டிய நாடகம்.''

நாட்டியத்திற்கு வரைவிலக்கணம் கூறிய பரத முனிவர் ''புராண கதையைக் கருத்தாய்க் கொண்டதாயும், பாவங்களையும் இரஸங்களையும் வெளிப்படுத்துவதாயும் உள்ள கலை எதுவோ அது நாட்டியம் அல்லது நாடகம் எனப்படுய'' என்றார். இவரது கூற்றின்படி, ஆதியில், நாடகங்கள், நாட்டிய நாடகங்களாகவேதான் நடிக்கப் பட்டு வந்துள்ளன என்பது தெளிவாகும். ''நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்'' எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டிருப்பதிலிருந்து, நாடகம் பண்டைக்காலத்தில், தமிழ் நாட்டில் இருந்ததென்பதை அறியக்கூடியதாயுள்ளது. 'நாடகம்' என இன்று நாம் குறிப்பிடுவது உரைநடை நாடகங்களாகும்.

நாட்டிய நாடகத்தின் விசேடத் தன்மை என்னவெனில், இதில் நாடக பாணியும், நாட்டிய பாணியும் இணைந்து காணப்படுகின்றன. நவரஸங்களையும், பாவங்களையும் வெளிப்படுத்துவதில் முக்கியத்துவம் காண்பிக்கப்படும் அதே வேளையில், நிருத்தமும் நிருத்யமும் ஆங்காங்கே புகுத்தப்பட்டிருக்கின்றன.

ஓர் தரமான நாட்டிய நாடகத்தைப் பார்க்கும் இரசிகனுக்குப் பூரண மன நிறைவு ஏற்படுகிறது. ஏனெனில், செவிக்கினிய இசையின்பத்தையும், கண்ணுக்கினிய நாட்டிய விருந்தையும், மனத்திற்கினிய பொருட்செறிவையும் ஒருங்கே கொடுக்க வல்லது ''நாட்டிய நாடகம்''. இஃது இன்று நம் ஈழவள நாட்டில் மிகவும் விரைவாக வளர்ந்து, மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது எனின் மிகையாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நாட்டிய நாடகத்தினைத் தயாரிப்பதற்கு வேண்டிய சில முக்கிய குறிப்புக்களை ஈண்டு தருவோம்.

முதன் முதலாக, நாட்டிய நாடகத்திற்கு ஏற்ற, இசைவான ஓர் கதையைத் தெரிந்தெடுக்க வேண்டும். தெரிவு செய்யும் கதை பொதுமக்கள் எளிதிற் புரிந்து கொள்ளக் கூடிய கதையாக இருப்பின் மிகவும் நன்று. சாதாரணமாக, மகாபாரதம், இராமாயணம் போன்ற கதைகளில் வரும் நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கோத்து, ஓர் நாட்டிய நாடகம் ஆக்கலாம். அந்நிகழ்ச்சிகளில், காதல், நகைச்சுவை, சோகம், கோபம், வீரம், பயம், வெறுப்பு, அற்புதம், சாந்தம் ஆகிய நவரஸங்களில், நான்கிற்கும் குறையாத இரஸங்கள் அமைந்திருக்க வேண்டும். என்பது கவனிக்கத் தக்கது. ஒன்பது இரஸங்களும், ஒரு நாட்டிய நாடகத்தில் அமையப் பெற்றால், பின்னர் அதற்கு ஈடேது ? இணையேது ?

நாட்டிய நாடகத்திற்கு ஜீவன் கொடுப்பவை இசையும், பாடல்களுமே. பாடல்களைக் கதைக்கேற்ப இயற்ற வேண்டும். இயற்றப் பெற்ற பாடல்களுக்கு ஏற்ற இராகங்களை அமைக்க வேண்டும். ஒவ்வொரு இரஸத்திற்கும் ஏற்ற இராகங்கள் உண்டு என்பது எல்லாரும் அறிந்ததே. உதாரணம், வீரத்திற்கு நாட்டையும், கோபத்திற்கு அடாணாவும், சாந்தத்திற்குச் சாமாவும், அழுகைக்கு முகாரியும், காதலுக்குக் கல்யாணியும், சோகத்திற்குச் சுபபந்துவராளியும் என்று இராகங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆகவே, அந்தந்த இரஸங்களுக்கேற்ற இராகங்களிலே பாடல்களை அமைத்துப் பாடுதல், நாட்டிய நாடகத்தின் வெற்றிக்குப் பெரிதும் துணை புரிவதாகும்.

இரண்டாவதாக, நாம் கவனிக்க வேண்டியது, பாத்திரப் பொருத்தம். இதுவே மிக மிக மிக்கியமானதாகும். கதாபாத்திரங்களின் தோற்றம், குணம், பாவனை இவற்றிற்கு இணைய இசையப் பாத்திரங்களைத் தெரிதல் அவசியம். உதாரணம், இராமன் பாத்திரத்தை ஏற்று நடிக்கப் போகும் நடிகன், சாந்தமான முகமும், கருமையான திண்மையான உடலமைப்பும், வசீகரமான கண்களும் உடையவராய் இருத்தல் நன்று. ஓர் கதாபாத்திரம் மேடையில் தோன்றும் போது, பார்ப்பவர்கள் மனத்திற் தாம் கற்பனையிற் கண்ட கதாபாத்திரமே உயிர் பெற்று வந்து விட்டதோவென ஐயுறும் வண்ணம் திகழவேண்டும்.

நடிகன் தான் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தின் தன்மையை, மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும், நடை, உடை, பாவனை என்கிற மூவகை அபிநயங்களாலும் பார்ப்பவரின் உள்ளங்களிலே தெள்ளத் தெளியப் பதியும்படி செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் பாத்திரப் பொருத்தம் மிகவும் விசேடம் என இரஸிகர்கள் உணர்ந்து உரைப்பார்கள். இவ்வாறே பெண் பாத்திரத்திற்குப் பொருத்தமான உடலமைப்பும், அழகும், இளமையும் கொண்ட நடிகையைத் தெரிவு செய்தல் உத்தமம்.

அடுத்ததாக, மிக முக்கியமாக வேண்டப்படுகிறது திறமை, ஆற்றல்! திறமை சற்றுமில்லாத, வேடப் பொருத்தம் நூற்றுக்கு நூறு அமைந்த ஒரு நடிகனோ நடிகையோ, மேடையில் ஓர் காட்சிப் பொருளாக மட்டுமே காட்சியளிப்பார் என்பதை நாட்டிய நாடகத்தை இயக்குபவர் நினைவிற் கொள்ளல் வேண்டும். உள்ளத்து உணர்ச்சிகளையும், மனோ பாவங்களையும், நவ இரஸங்களையும் வெளிப்படுத்தும் சக்தியற்ற நடிகர்கள், வெறும் பொம்மைகளாவார்கள். ஆகவே, திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்தல் மிக மிக அவசியம்.

அடுத்தபடியாக, நாட்டிய நாடகத்தின் பக்க வாத்தியக் கோஷ்டியில் நிறையக் கவனம் செலுத்த வேண்டும் இக்கோஷ்டி வாய்ப்பாட்டுப் பாடும் இருவரையும் (ஒருவர் ஆணாகவும், மற்றவர் பெண்ணாகவும் இருத்தல் நலம்) நட்டுவனார், மிருதங்க வித்துவான், பிடில் வித்துவான், வீணை வித்வான், ஸ்ருதி போடுபவர் இவர்களை உள்ளடக்கியதாகும். நாட்டிய நாடகத்தின் வாத்திய கோஷ்டியினரும், ஆற்றலின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுதல் விசேடம். வாய்ப்பாட்டுப் பாடுகிறவர்கள் நல்ல கணீரென்ற சாரீரம் உடையவர்களாயும் பாடல்களின் வார்த்தைகளைத் தெளிவாக உச்சரிக்கக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். பாடகர்களுக்கு நாட்டியமும், அபிநயமும் சற்றேயாயினும் தெரிந்திருத்தல் மிக்க நலம்.

மிருதங்க வித்துவான், நாட்டியக் கச்சேரிகளுக்கு வாசித்துப் பழக்கப்பட்ட ஒருவராய் இருத்தல் சாலவும் பொருந்தும். நாட்டிய நாடகத்தில் வரும் ஜதிகளுக்கேற்றவாறு வாசிக்கவும், கையில் நல்ல நாதமும் தாள நடைகளுக்கேற்ப விவகாரம் செய்யும் ஆற்றலும், நடிகரைப் பார்த்து, அவரின் பாதங்களின் அசைவுகளுக்கேற்ப வாசிக்கக் கூடிய திறமையும் உடையவராக இருத்தல் நன்று. பாட்டுப் பாடுகிறவர் தமது கவித்துவத்தையும் சங்கீத ராகஞானத்தையும் காட்டும் இடமாக நாட்டிய நாடகத்தைக் கொள்ளாது தேவைக்கேற்பவும், சந்தர்ப்பத்திற்கேற்பவும் தமது சங்கீதக் கலையைப் பிரயோகிக்க வேண்டும்.

நட்டுவனார், ஜதிகளைத் தெளிவாக ஸ்பஷ்டமான உச்சரிப்புடனும் லயப் பிடிப்புடனும் கூறி நட்டுவாங்கம் செய்ய வேண்டும். அப்பொழுது, ஆடுபவரின் திறமை கூடவும் இரசிகர்களின் மனதில் உவகை ஊற்றெடுக்கவும் அந்நட்டுவாங்கம் ஏதுவாகும். பிடில் வித்துவான், பாட்டைப் பின்பற்றிச் சங்கீதக் கச்சேரிக்குப் பக்க வாத்தியம் வாசிப்பது போல வாசியாது, அதில் வரும் நுட்பமான இடங்களை அவதானித்து வாசிக்க வேண்டும். உதாரணம், 'குயில் கூவுகிறது' என்று பாடலில் வரும்போது அல்லது குறிப்பிட்ட காட்சியில் வரும்போது குயிலின் ஓசையை இசைத்துக் காட்டினால் பிரமாதமாக இருக்கும். இவ்வண்ணமே, வீணை வித்வானும் அவதானமாகத் திறமையாக வாசிக்க வேண்டும். உதாரணம்' கயிலை மலையசைத்த இராவணன் கயிலையம்பதியை

மகிழ்விக்க யாழ் மீட்டுகிறுன். அப்பொழுது நடிகன் வீணை வாசிப்பதாகப் 'பாவனை' பண்ணுவான். ஆனுல், பார்த்துக் கொண் டிருப்பவர்களுக்குக் காம்போதியின் சாரத் தைப் பிழிந்து அவ்விரு நிமிடங்களிலும் வைணிகன் வழங்கல் வேண்டும். இதுவே திறமைக்குச் சான்று!

நாட்டிய நாடகம் தயாரிக்கும் பொழுது கவனிக்க வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயம் உண்டு. அதுதான் ஒப்பனை. ஆடை, ஆபரணங்களால் எவ்வாறு ஒரு கதாபாத்திரத்தின் தன்மையை வெளிப்படுத் துவது என இயக்குநர் அறிந்திருக்க வேண் டும். இன்ன கதாபாத்திரந்தான் மேடை யிலே தோன்றியுள்ளது எனப் பார்த்த மாத்திரத்திலேயே சொல்லக்கூடிய வகையில் ஆடை, அணிகள், அலங்காரம், ஒப்பனை முதலியன அமைய வேண்டும்.

நாட்டிய நாடகத்தில், பாத்திரமேற்று நடிக்கும் நடிகையோ, நடிகனே தத்ரூபமாக நடிக்கலாம். ஆனுல், அப்பாத்திரமாகவே மாறிவிடக் கூடாது. 'ப்ரகலாத சரித' நாட்டிய நாடகத்தில், நரஸிம்ஹனுக நடிக் கும் நடிகன் தன்னை நரஸிம்ஹனுகவே எண்ணி, ஹிரண்யனுக நடிப்பவரை உண்மை யாகவே கீறிக் கிழித்து, வதம் செய்தால், ஹிரண்யனுகு வேடம் புனைந்தவரின் கதி என்னவாகும்? ஆகவே, நாட்டிய நாடகத் தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கதா பாத்திரமேற்று நடிக்கும் வேடதாரி, தான் ஒரு நடிகன் என்பதை மறக்கவே கூடாது.

இன்னுமொரு முக்கிய விடயம். ஒவ் வொரு நடிக நடிகையரும் தத்தமது பாகம் வரும் பொழுது மட்டுமே இரஸிகர்களின் கண்களுக்குத் தெரியவேண்டும். அதற்கு முன் னர், மேடை ஓரங்களிலோ, வேறு இடங் களிலோ நின்று தங்களைக் காட்டிக் கொள் ளுதலும், எட்டி, எட்டிப் பார்த்தலும் அவர் களுக்குக் கெடுதலே அன்றி நன்மை பயக் காது. ஏகாக்கிரக சித்தத்தோடு நாட்டிய நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களுக்கும் இச் செயல் இடை யூருகவே இருக்கும்.

மொத்தத்தில், நவரஸங்களும் ஒருங்கே அமையப் பெற்ற தரமான ஒரு நாட்டிய நாடகத்தை, மேற்கூறிய அம்ஸங்கள் அனைத் தையும் உள்ளடக்கிய நாட்டிய நாடகத்தைப் பார்க்கும் பொழுது, அறு சுவைகளும் கலந்த ஓர் விருந்தை வயிருர உண்டுசுவைத்த உணர்வு இரஸிகனுக்கு ஏற்படும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

**திருமதி லீலாம்பிகை செல்வராஜா**
*1-ம் வருடம் (நடனப் பிரிவு)*

---

## நல்ல கல்விக்கு அறிகுறி

உண்மையான நற்கல்வி எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்று எமக்குக் கற்பிக்க வல்லதாயிருக்கும். எதைச் சிந்திக்க வேண்டும் என்பதை அறி வுறுத்துவது அதன் நோக்கமாயிராது. மற்ற மனிதர்களின் சிந்தனைகளை எமது நினைவிலே பெருஞ் சுமைகளாக ஏற்றிவிடுவது நல்ல கல்வி முறை யன்று. பதிலாக நாமாகவே சிந்திக்க எது எம்மைத் தூண்டுகின்றதோ அதுவே சிறந்த கல்வி.

— பீற்றி

# தமிழிசைக் கலை

உலகில் மொழி தோன்றுவதற்கு முன்பே இசையுண்டாயிற்று என்பர். இக் கருத்தினை ஆட்டோ யெஸ்பர்சன் என்னும் மொழி நூல் அறிஞர் ''இசையிலிருந்தே மொழி எழுந்தது'' என்கிறார். மக்கள் தம் கருத்துக்களைச் சொற்களால் வெளியிட முன்பு ஏதோ ஒரு வகை இசையால் வெளியிட்டார்கள். மொழியை உருவாக்குவதற்கு முதற் பொருளாய் மூலகாரணமாய் விளங்கியது இசையே ஆகும்.

தமிழ் என்று கூறும் பொழுதே இயல் இசை, நாடகம் என்ற முத்தமிழும் நம் எண்ணத்தே எழுகின்றன. மேலும் இசைத் தமிழை நடு நாயகமாக வைத்துப் போற்றியுள்ளனர். பழங் காலமுதல் இயலும் இசையும் நாடகமும் இயைந்து வாழ்ந்தன குரல் துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி தாரம் முதலிய ஏழிசைகளையும் முல்லைப் பண் முதலிய பண் வகைகளையும் சங்க நூல்களில் பரக்கக் காணலாம். யாழ், முழவு தண்ணுமை, குழல் முதலிய இசைக்கருவிகள் பல தமிழகத்தில் வழக்கில் இருந்தன என்பதை அறிய முடிகின்றது.

நிலத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என ஐவகையாகப் பிரித்து அவற்றிற்குத் தனித்தனியாக இசையும் யாழும், பண்ணும் வகுத்துப் பாடி மகிழ்ந்தனர். ஒவ்வொரு பண்ணும் குறிப்பிட்ட காலங்களிலேயே பாடப்படல் வேண்டும்.

| யாழ் | | பண் | | சிறுபொழுது |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | — | குறிஞ்சி | — | யாமம் |
| பாலை | — | பாலை | — | நண்பகல் |
| முல்லை | — | சாதாரி | — | மாலை |
| நெய்தல் | — | செவ்வழி | — | எற்பாடு |
| மருதம் | — | மருதம் | — | வைகறை (விடியல்) |

இசையால் ஆறலை கள்வரையும் திருத்தி அவர்தம் மறநெறியையும் மாற்றவல்ல பாலை இசையைப் பற்றி,

''ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை''

எனக் கூறுகின்றார். (பொரு. 21-29)

பண்ணின் இனிமை பற்றி அகநானூற்றுக் காட்சியொன்று. வேடுவன் ஒருவன் தேன்குடித்து மயங்கி முற்றத்தில் நின்ற மரநிழலில் துயில் கொள்கிறான். முன்றிலில் காயும் நெல்லைக் கொடிச்சி காவல் செய்கிறாள். யானை ஒன்று தினையைத் தின்பதற்கு வருகிறது. ஓசை எழுப்பி யானையைத் துரத்த முயன்றால் கணவனின் தூக்கத்திற்குப் பங்கமேற்படுமென எண்ணினாள். தமது நிலத்திற்கேயுரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறாள். அதனைக்கேட்ட யானை தினை தின்ன வேண்டுமென்பதையும் மறந்து தூங்கி விடுகிறது.

''ஒலிஇயல் வார்மயிர் உயரிளங் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும பெயராது
பாடஅப் பைங்கண் பாகு பெற்றெய் யென
மற்புகல் மழகளிறு உறங்கு நாடன்''

சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த பெருநூலாகிய 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில்; கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை போன்ற இசைப் பாடல்கள் உள்ளன. இவற்றை யாழிடையும் மிடற்றிடையும் அமைத்துக் கோவலன், மாதவி, வேடுவர், குன்றர், ஆயர் சேரியின் இடைப் பெண்கள் ஆகியோர் பாடிப் பாடிப் பெரு மகிழ்வும் பேருவகையும் கொண்டு வாழ்ந்தார்கள்.

ஆடலில் மட்டுமின்றி இசையிலும் ஏற்றமுற விளங்கினாள். மாதவி என்பதை

''எண்ணும், எழுத்தும்
இயல் ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப்
பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப்
பொன்தொடி மாதவிதன்
வாக்கினால் ஆடு
அரங்கின் வந்து''

எனச் சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருகிய சீவக சிந்தாமணியில்; காந்தருவதத்தையின் இசையாற்றலை நாம் அறிகிரேும். அவளே யாழை வைத்துப் பாடிஞள். எவ்வாறு பாடிஞள், அதனைக் கண்டவர்கள் எந்நிலை எய்தினர், எண்ணினர் என்பதைப் பின்வரும் பாடலால் அறிய முடிகின்றது.

கருங் கொடிப் புருவமேரு
　　கயனெடுங் கண்ணு மாடா
அருங்கடி மிடறும் விம்மா,
　　தணிமணி யெயிறுந் தோன்ரு
இருங்கடற் பவளச் செவ்வாய்
　　திறந்தவள் பாடிஞளோ
நரம்பெறு வீணை நாவி
　　வின்றதோ வென்று கைந்தர்ர்.

ஆடியும், பாடியும், ஊடியும், கூடியும் இன்புற்று வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வில் சமணம், புத்தம் போன்ற மதங்கள் செல்வாக்குப் பெற்றன. இதற்குக் காரணம் தமிழ் நாட்டின் வடக்கே ஆண்ட பல்லவரும், தெற்கே ஆண்ட பாண்டியரும் மேற்படி சமயங்களைத் தழுவியமையே. ''அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி'' என்பதற்கு ஏற்பத் தமிழ் மக்கள் பலரும் சமண, பௌத்த மதத்தையே சார்த்து வாழ்ந்தனர். இதுவே இலக்கிய வரலாற்றின் இருண்டகாலப் பகுதியாகும்.

புத்தமும் சமணமும் துறவு வாழ்வை வற்புறுத்தின. பாட்டும், கூத்தும், காம இச்சையையும், உலகப் பற்றையும் ஏற் படுத்த வல்லன, எனவே அவை மனிதரிடம் இருந்து விலக்கப்பட வேண்டுமென வற் புறுத்தின. இதஞல் இசையும் கூத்தும் தமிழகத்தில் நலிவுறத் தொடங்கின.

கி. பி. 7-ம் நூற்ருண்டின் பின் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசையை வளர்த்தனர். இவர்கள் இறைவனின் இன்னருளினை இசையால் எடுத்து விளக்கினர். மக்கள் வாழ்க்கையையும் வளத்தையும் பண் ஒன்றப் பாடிப் பணிந்த காலமாக இக்காலம் விளங்கிற்று. ''ஏழிசையாய் இசைப் பயஞய்'' நின்றவன் எனக் கண்டனர்.

பண் ஒன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண் கொடுக்கும் மணி கண்டன்'' என்றும், ''காந்தாரமிசையமைத்துக் காரிகையர் பண்பாடக் கவிஞர் வீதி தோந்தோ மென்றரங் கேறிச் சேயிழையார் நடம் பயிலும் திருவையாறே'' என்றும் ''வரை சேரு முகல் முழவ மயில்கள் பல நடமாட வண்டு பாட விரை பொன் இதழி தர மென் காந்தள் கையேற்கும் மிழலையாமே'' என்று திருஞான சம்பந்தருக்கு இறைவனும், இயற்கையின் அழகும் ஆடலும் பாடலுமாக இசையும் கூத்து மர்கக் காட்சி கொடுக்கின்றது.

சேக்கிழார் சுவாமிகள் இசையை 'அமுத இசை' என்றும் ''என்பூடு கரைந்துருகும் இன்னிசை'' என்றும் பாராட்டியுள்ளார். ஆஞய நாயஞர் புராணத்தில் குழலோசையிஞல் அண்டத்திலே நிறைந்த அனைத்துயிரும் மகிழ்ச்சியால் மனமுருகிப் பகை மறந்து இணைகின்றன.

''நலிவாகும், மெலிவாகும்
　　உணர் வொன்ருய் நயத்தலிஞல்
மலிவாய் வெள்ளெயிற்ற ரவம்
　　மயில்மீது மருண்டு விழும்
சலியாத நிலையரியும்
　　தடங்கரியும் உடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும்
　　புல்வாய புல்வாயும்''

எனும் செய்யுள் விளக்கிக் காட்டுகின்றது.

கலையைக் காண்பவனும் தன்னை மறப்பான், கலையைக் காட்ட முயல்பவனும் தன்னை மறப்பவனேயாவான். இவ்வாறு தன்னை மறந்து தரணியில் வாழ்வாரையும் தம்மை மறக்கச் செய்வதே கலையாகும். மனித உள்ளத்தைத் தன் வயப்படுத்திப் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றல் ஏனைய கலைகளிலும் இசைக்கலைக்கே அதிகமுண்டென்பதை ''நுட்பக்கலையிலும் நுட்பக்கலையாக இயங்குவது இசை'' என்ற ஹேர்பட்ஸ்பென்சரின் கூற்றில் இருந்து நாமறியலாம்.

எதிர்காலத்தில் தேமதுரத் தமிழோசை உலகெங்கும் கேட்கவேண்டும். ''காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடும் கவிஞர் வீதிகள்'' தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் விளங்கவேண்டும். அந்நன்ஞளே தமிழிசைக்கலை வளர்ச்சியுறும் பொன்ஞளாகும்.

**வே. சுந்தரலிங்கம்**
2ஆம் வருடம்

# கற்பிக்கும் ஆசிரியர் கையாளக் கூடிய கற்பித்தற் சாதனங்கள்

கல்வித்துறையில் காலத்திற்குக் காலம் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கல்விக் கோட்பாடுகள் பற்றியும், கற்பித்தல் முறைகள் பற்றியும், பிள்ளையைப் பற்றியும் பல புதிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். மாணவர்களை உற்சாகமாகக் கற்கத் தூண்டாவிட்டால் எந்த விதமான கற்பித்தல் முறையினாலும் பயனில்லை என்று கூறலாம். மாணவர்களுக்கு அறிவு புலன்கள் வழியாக ஏற்படுகின்றது. எல்லாப் புலன்கள் வழியாக அறிவு ஏற்பட்ட போதிலும், கண்கள், காதுகள் வழியாகக் கூடுதலான பலன் ஏற்படுகின்றன. ஒருவருக்கு ஏற்படும் அறிவு வளர்ச்சியில் 75% கண்களாலும், 10% காதுகளாலும் ஏற்படுகின்றதெனக் கல்வியாளர்கள் கூறியுள்ளார்கள். இதிலிருந்து கற்பித்தல் சாதனங்களின் முக்கியத்துவத்தை உணர முடிகிறது. பெஸ்டலோஜி, புரூபல், மொன்றிசூரி அம்மையார் ஆகியோர் கற்பித்தல் சாதனங்களின் பங்கையும், புலப் பயிற்சி வழியாகக் கற்றல் நிகழ்வதற்கு எவ்வளவு தூரம் உதவ முடியும் என்பதையும விளக்கியுள்ளனர். இவர்கள் எல்லோருக்கும் முன்னோடியாக விளங்கியவர் 17ஆம் நூற்றாண்டில் தலைசிறந்த கல்வி நெறியாளராக விளங்கிய "காமினியஸ்" என்பவராவார். 20ஆம் நூற்றாண்டில் கற்பித்தல் சாதனங்கள் பொதுவாக எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

"ஆயிரம் சொற்களிலும் பார்க்க ஒரு படம் கூடிய கருத்துள்ளது, என்பதுவும்,

"நான் கேட்டால் மறந்து விடுவேன்
கண்டால் நினைவிருக்கும்
செய்தால் மனத்தில் நன்றாகப்
பதிந்துவிடும்"

என்ற சீனப் பழமொழிகள் கற்பித்தல் சாதனங்களின் சிறப்பை உணர்த்துகின்றன. இவற்றை மாணவர்கள் பார்க்கும்போது பலபுதிய கருத்துக்கள், கற்பனைகள் தோன்றுகின்றன. பேச்சு மூலம் விளங்காத விடயங்கள் இவை மூலம் தெளிவு பெறுகின்றன. மாணவர்களுக்குப் பாடத்தில் ஆர்வமும், ஊக்கமும், ஏற்படுகின்றன. அன்றியும் சுயமாகக் கற்கவும் கற்றவற்றை நன்கு மனதில் பதியவைக்கவும், தன்னம்பிக்கை ஏற்படவும் முடியும். சுருங்கக் கூறின் மாணவனின் ஆளுமை வளர்ச்சிக்கு, இவை காரணமாகின்றன.

கற்பித்தல் சாதனங்களை நல்ல முறையில் தயாரிப்பது முக்கியம். இச்சாதனம் ஆசிரியர் கற்பிக்க எடுத்துக்கொண்ட விடயத்தை விளக்குவதற்குத் துணையாக அமைய வேண்டும். எனவே பின்வரும் குறிப்புக்கள் கவனிக்கப்படல் வேண்டும்.

1. விடயம் தெளிவாகவும் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருத்தல் நன்று. ஆனால் அதிக கவர்ச்சி அதனைக் காட்சிப் பொருளாக்கிவிடும்.

2. அளவுப் பிரமாணங்கள் மிக முக்கியமானவை. வகுப்பில் உள்ள சகல மாணவர்களுக்கும் தெளிவாகத் தெரியக் கூடியதாக இருத்தல் வேண்டும். இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியதாகவும் இருத்தல் நன்று. இதனால் சொற்ப நேரத்தில் வகுப்பறையில் நன்கு பயன்படுத்தலாம்.

3 ஓரளவு சிக்கனமானதாகவும், பல நோக்குடன் தயாரிக்கப் பட்டதாகவும், இருத்தல் நன்று.

4. விளக்கக் குறிப்புகள் தடித்த எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

5. இவற்றைத் தயாரிப்பது மட்டுமல்ல, எற்ற சமயத்தில் பயன் படுத்தவும், பாதுகாப்பாக வைக்கவும் வேண்டும்.

1. கரும்பலகை

கற்பிக்கும்போது ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சாதாரண சாதனம் கரும்பலகை. இதை முறையாகப் பயன் படுத்த ஆசிரியர்

அறிவது அவசியம். கரும்பலகையில் எழுதும் பொழுது தடித்த தெளிவான எழுத்தாகவும், இடப் பக்கத்தில் ஆரம்பித்து ஒழுங்காகவும் எழுதல் வேண்டும். மாணவர்களுக்கு முன் அழகாகக் கரும்பலகையில் எழுதினுல் தான் மாணவர்களுக்கு ஆசிரியர் மீது அதிக மதிப்பும் நம்பிக்கையும் ஏற்படும். முக்கியமான விடயங்களை எழுதுவதற்கு நிறச் சுண்ணக் கட்டிகளை உபயோகிப்பது நன்று. ஆசிரியர் மட்டுமல்ல, மாணவர்களும் கரும்பலகையில் எழுதிப் பயனடைய முடியும். வகுப்பறையில் நீளமான கரும்பலகை இருத்தல் நன்று.

2. உண்மைப் பொருட்கள்

அந்நிய நாடுகளைப் பற்றிக் கற்பிக்கும் பொழுதும் மிகப் பழைய வரலாறு சம்பந்தமான விடயங்களைக் கற்பிக்கும் பொழுதும் மாணவர்களை அக்கால சமூக, பொருளாதார, கலாச்சாரங்களை உணரச் செய்வது மிகவும் சிரமமானது. 20ஆம் நூற்ருண்டில் வாழும் மாணவனுக்குக் காலத்தால் முற்பட்ட விடயங்களை அறிவுறுத்த உண்மைப் பொருட்கள் பயன் தருவனவாயுள்ளன.

3. மாதிரி உருவங்கள்

உண்மைப் பொருட்கள் கிடையாவிடத்து, மாணவரின் கற்பனைக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் மாதிரி உருவங்கள் செய்து விளக்கலாம். இலங்கையின் விளை பொருட்கள், கல்லோயா, மகாவலித் திட்டம் ஆகியவற்றை இவ்வாறு விளக்கலாம்.

4. படங்கள்

இவற்றில் சாதாரண படங்கள், தேசப் படங்கள், வரைபடங்கள் கையாளப்படலாம். பிறநாட்டு மக்கள், அவர்கள் வாழ்க்கை முறைகள் பயிர்ச் செய்கைத் தொழில்கள் ஆகியவற்றைப் பட மூலம் விளக்கலாம். நாட்டின் இயற்கை அமைவு, சுவாத்தியம், விளை பொருள், குடிசனம் ஆகியவற்றைத் தேசப்படங்கள் மூலம் இலகுவாகக் கற்பிக்கலாம். நமது நாட்டின் சனத்தொகை, ஏற்றுமதி என்பவற்றை வரைபடமூலமும் எடுத்துக் காட்டலாம். வகுப்பறையில் சில அட்டவணைகள், படங்கள் தொங்கவிட்டால் மாணவர்கள் பல முறை பார்த்து அனுபவித்து மனதிற் பதித்துக் கொள்வர்.

5. விழாக்கள்

மாணவர் திறம்படக் கற்பதற்கு அவர்களுடைய ஊக்கமும் முக்கியமான ஒரு காரணியாகும். பிள்ளைகளிடம் ஆராய்வூக்கம் இயல்பாக அமைந்துள்ளது. அதனைத் தூண்டி நன்கு பயன்படுத்தினுல் நன்கு வெற்றி பெறுவர். பொதுவாக இடைநிலை உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் தலைமை தாங்கவும் தாமே முன்னின்று எதையும் செய்யவும் விரும்புவர். இவற்றை நிவிர்த்தி செய்ய ஆசிரியர்கள் பல புற நிகழ்ச்சிகளில் ஊக்குவிக்கலாம். மன்றங்கள், இல்லங்கள் அமைத்துக் குடியரசுதினம், ஐக்கிய நாடுகள் தினம் என்பவற்றைக் கொண்டாடச் செய்வதால் மாணவர்க்கு நாட்டுப்பற்று ஏற்படும். திறம்பட ஒருவர் பேசும்பொழுது கேட்டுக்கொண்டு இருப்பது ஒரு இன்பமாகும். பலநூல்களையும் ஆராய்ந்து அறிந்து கொள்வது இயலாத காரியமாகும். பேசுவதைக் கேட்பது அறிவைப் பெருக்கலாம் எனவேதான் ''கற்றிலனுயினும் கேட்க'' என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

6. கருத்தரங்கு

கருத்தரங்கு மூலமும் பாடங்களை ஒழுங்கு செய்து கற்பிக்கலாம். இதில் விடயத்தை உபபிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிடம் ஒப்படைத்து அவர்கள் ஆயத்தம் செய்தபின், குழுத்தலைவர் தமக்குக் கொடுக்கப்பட்ட விடயங்கள் பற்றிக் கூறுதல் வேண்டும். பார்வையாளர்கள், கேள்விகள் கேட்டும் தமது கருத்துக்களைக் கூறியும் உற்சாகப்படுத்தலாம். வினுக்கள் கேட்பதால் சந்தேகமின்றி விடயத்தை அறியவும் புதிய கருத்துக்களை அறியவும் வாய்ப்பு ஏற்படுகிறது. தற்காலக் கற்பித்தலில் கருத்தரங்கு முக்கிய இடம் பெறுகிறது.

7. விவாதம்

தர்க்க ரீதியாக ஒரு விடயத்தை ஆராய்ந்து விவாதிக்கும்போதும் ஆய்வுரை வழங்கும்போதும் பிறர்கருத்திற்கு மதிப்புக் கொடுக்கவும், தனது கருத்துக்களை எடுத்து

ரைக்கவும், கலந்துரையாடவும் இணக்க முறையில் தீர்வுகளைக்காணவும் குறுவினுப் போட்டிகள் மூலம் மாணவரிடையே அறிவை வளர்க்கவும் இவை உதவுகின்றன.

8. ஓவியப்பட்டி

ஆசிரியரும் மாணவர்களும் கூட்டு முயற்சி மூலம் பலநிகழ்ச்சிகளைத் தயாரிக்கலாம். பலவருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளையும் மாணவர்களால் நேரடியாகக் கண்டு அனுபவிக்க முடியாத விடயங்களையும் ஓவியப்பட்டியாகத் தயாரிப்பதனுல் மாணவர்கள் பலகாட்சிகளைத் தத்ரூபமாகக் கண்டு களிக்க முடியும் இதன்மூலம் ஒரு நிகழ்ச்சி இடம்பெறும் விதம், நடை உடை பாவனை, கலை, கலாச்சாரம் ஆசியவற்றை மாணவர் அறிய முடிகிறது.

9. நாடகங்கள்

பயன்தருமுறையில் நாடகம் அமைவதற்கு வகுப்பை மாணவர் ஆற்றல், திறமைக்கேற்பப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும். உடை, ஒப்பனை, என்பன போன்றவற்றிற்குப் பொறுப்பாக நியமித்துச் செயற்படவிட்டால் எல்லா மாணவர்களும் நன்கு ஈடுபட்டுக் கற்பர். இதனுல் மாணவர்களுக்குப் பேச்சாற்றல் பொறுப்புணர்ச்சி, ஒத்துழைப்பு போன்ற நற்பண்புகள் ஏற்படுகின்றன.

10. வானொலி

கரும்பலகையில் கற்றமாணவன் ''கணனி'' மூலம் கற்குமளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது, கண்டம் விட்டுக் கண்டம், செய்திகளை அறியப் புதிய சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வானொலி ஒலிப்பதிவுக்கருவி, தொலைக்காட்சி ஆகிய நவீன சாதனங்கள் கற்பித்தலுக்குப் பெரிதும் உதவுகிறது. நமது நாட்டைப் பொறுத்தவரை வானொலியில் மாணவர்களுக்கான கல்விச் சேவை பெரிதும் உதவுகிறது எனலாம்.

11. திரைப்படம்

திரைப்படம் இன்று பரவலாகக் காணப்படும் ஒரு சாதனமாகும். இது பொழுது போக்கு மட்டுமல்ல, கற்பித்தல் சாதனமுமாகும். திரைப்படம், கண்களுக்கும், காதுகளுக்கும் சிறந்த விருந்தாகும். பிரித்தானிய. சபையும், ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையமும், இலங்கையின் கல்வி அமைச்சும் பாடசாலை மாணவர்க்கேற்ற திரைப்படங்களைத் தயாரித்து அளிக்கின்றன. திரைப்படங்களினுல் விளக்கம் ஏற்படுகிறது.

12. சுற்றுப்பிரயாணம்

பல்வேறு சாதனங்களைப் பயன்படுத்தி ஆசிரியர், கற்பித்த போதிலும் நேரடி அனுபவம் கூடுதலான பலனைக் கொடுக்க வல்லது. ஒன்றைப் பற்றித் தெளிவாக விளங்கி அதன் அமைப்பு, தோற்றம் ஆகியவற்றை நேர் அனுபவமூலமே ஒருவர் பெறமுடியும். ''சிகிரியா'' பற்றிக் கற்பிக்கும் ஆசிரியர் ஆயிரம் சொற்களால் அழகுற வர்ணித்தாலும் அதன் காட்சியை மனத்தில் தெளிவுற ஏற்படுத்த முடியாது. இவற்றை மாணவர்கள் நேரடியாகப் பார்ப்பார்களேயானுல் அதிக நன்மை அடைவர்.

எனவே முற்கூறிய கற்பித்தற் சாதனங்களின் உதவியோடு கற்பித்தால் மாணவர்களின் படைப்பாற்றல், திறமை, முதலியன வெளிப்படுவதுடன் சிரமமின்றி உற்சாகமாமக் கற்பர். ஆசிரியரும் சிறிய முயற்சியோடு கூடுதலான பலனை அனுபவிக்க முடியும்.

உபகரணம் இன்றேல்
உபதேசமில்லை !

**செல்வி நா. கந்தையா**
ஆரம்பக் கல்வி
*(2ஆம் வருடம்)*



# கலைச்செல்வி தன்னைக் கனவிலும் மறவோம்

**திருமதி சு. செல்லத்துரை**
(விரிவுரையாளர்)

திருமதி ஜேக்கப் அவர்கள் இக்கலாசாலையிலே முப்பது வருட காலமாக விரிவுரையாளராகக் கடமையாற்றி இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். அவரின் சேவைக்கால நினைவுகள் எங்கள் அனைவரது உள்ளங்களிலும் பசுமையாகவே இருக்கின்றன; என்றுமே பசுமையாகவே இருக்கும்.

திருமதி ஜேக்கப் அவர்களோடு நான் பதினைந்து வருடங்களாகப் பழகியுள்ளேன். அவருடைய நடத்தையிலே நான் கண்ட ஒரு சிறப்பு என்னவென்றால் தம்முடன் அன்பாக இருப்பவர்களோடு என்றுமே அன்பாக இருப்பார். சிறு சிறு காரணங்களுக்காகத் தமது அன்பு நிலையிலே மாற்றத்தையோ சலனத்தையோ ஏற்படுத்தியதே இல்லை.

இக்கலாசாலையிலே அவர்கள் சித்திரம் கைப்பணி ஆகிய கவின்கலைகளுக்குரிய போதனாசிரியராகக் கடமையாற்றினார். அவரின் சேவையின் சிறப்பை யாவரும் அறிவர். கல்லூரி வைபவங்களிலும், நாடகம் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் காலங்களிலும் திருமதி ஜேக்கப் அவர்களின் கைவண்ணம் காண்பவர் அனைவர்க்கும் இனிய விருந்தானது கண்கூடு. அன்னாரின் கலைத்திறனும் கைவண்ணமும் கலாசாலையின் பெருமைக்கும், புகழுக்கும் பெரிதும் உதவின என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

புதிய கல்வித்திட்டத்தில் ஆக்க முயற்சிகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. அவ்வேளை திருமதி ஜேக்கப் அவர்கள் ஆற்றிய சேவை அளவற்றது. ஆக்கமுயற்சிகளில் ஆசிரியர்கள் எவ்விதம் ஈடுபடலாம், அவை உள்ளத்தை எவ்விதம் பண்படுத்துகின்றன என்றெல்லாம் இக்கலாசாலையிலும் சேவைக்கால வகுப்புக்களிலும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றித் தெரியவைத்துள்ளார். அவர்களின் சொற்பொழிவுகளைப்பற்றிச் சிறப்பாகப் பலர் என்னிடம் கூறியுள்ளார்கள் என்பதையும் ஈங்கு நான் பெருமையுடன் தெரிவிக்கின்றேன்.

தேவையற்ற பொருள்கள் என வீசப்படும் கழிவுப் பொருள்களைக் கண்டால் திருமதி ஜேக்கப் அவர்களுக்கு அலாதிப் பிரியம். அவற்றை மிகவும் வாஞ்சையுடன் எடுத்து வைத்துக்கொள்வார். பின்னர் அவையெல்லாம் வண்ண வண்ணப் பறவைகளாய், ஊரும் பல வண்டினமாய், பல வர்ண மலர்களாய், பொம்மைகளாய் இன்னும் எத்தனை எத்தனையோ காட்சிப் பொருள்களாய் மாறும் விந்தையை நாமெல்லாம் கண்டு களித்தோம்.

திருமதி ஜேக்கப் அவர்கள் தமக்குத் தெரிந்த வித்தைகளைத் தம்மோடு வைத்துக்கொள்ளாமல், தம்மிடம் பயின்ற ஆசிரியர்களுக்குத் தாராளமாகத் தானம் செய்துள்ளார். அவர்களது மாணவர்களிற் பலர் கைவினை வல்லுநராய், கலைத்திறன் மிக்கவ

ராய் இங்கு காணப்பட்டனர். அவர்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பரந்து சேவையாற்றுகின்றனர். அவர்கள் பணிபுரியும் பாடசாலைகளில் தாம் பெற்ற திறமைகளையெல்லாம் நன்கு பயன்படுத்துவார்களென நம்புகிறேன்.

திருமதி ஜேக்கப் அவர்கள் 'சுவர்ணா' இல்லத் தாயாராகச் சில வருடங்கள் கடமையாற்றினர். இல்லத்தின் வளர்ச்சிக்காக அவர்கள் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவர்களின் இல்லம் அளித்த 'பெரகரா' நிகழ்ச்சியும், 'அசையும் இல்லமும்' என்றுமே மறக்கற் பாலன அல்ல. அந்த 'அசையும் இல்லத்தில்' அசைந்தவர் சிலர். அவர்களுள் ஆசிரிய கலாசாலைகளின் முன்னை நாள் கல்வி அதிகாரி திரு கெற்றி ஆராய்ச்சி அவர்களும் ஒருவர்.

திருமதி ஜேக்கப் அவர்கள் கலாசாலைக்கு வரும் பொழுது காரிலே வருவார். கார்ச் சாரதியும் அவர்தாம். காரிலிருந்து இறங்கும்போது கையில் ஒரு அழகான தோற்பை இருக்கும். அந்தப் பைக்குள் சில பொட்டலங்கள். அவைக்குள்ளே இருப்பதென்ன? மங்கலமான பொருளொன்று. அதை ஆண்டியும் விரும்புவன், அரசனும் விரும்புவன். அப்படியாயின் நாமும் விரும்புதல் அதிசயமன்று. யாவரும் விரும்பும் அது வேறொன்றுமல்ல. தாம்பூலம்! பேராசிரியர் அறையில் மதிய போசனம் முடிவடைந்ததும் திருமதி ஜேக்கப் அவர்களை அனைவரது கண்களும் நாடும். குறிப்பறிந்து ஒழுகும் பண்புடையவர் திருமதி ஜேக்கப் அவர்கள். உடனே தாம்பூலம் கைமாறும். தினமும் தவறாது இடம்பெற்ற இந்நிகழ்ச்சியை நாம் என்றும் மறக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் என்னுள்ளம் பொய்க்காதிருக்கும் வரை அன்னாரின் நினைவு நீங்காது என்று நன்றியுடன் கூற விரும்புகிறேன்.

திருமதி ஜேக்கப் அவர்கள் கலாசாலையில் இருக்கும்போது உடன் விரிவுரையாளராக மாத்திரம் அல்ல, அன்பான நண்பராய், ஆதரவு நல்கும் அரிய சகோதரியாய், எம்முடன் பழகி வந்தார். எமது இன்ப துன்பங்களில் எல்லாம் பங்கு கொண்டு அந்நியோன்யமாகப் பழகினர். அன்னாரை நாம் என்றும் மறவோம். அவர் எம்மைப் பிரிய விடை கொடுக்கவில்லை. நாம்-பிரியாத விடைதான் கூறி அனுப்பினோம் அன்று.

அவர் தமது வீட்டிலே அன்பும் ஆதரவும் மிக்க இல்லாளாய், அன்பு அன்னையாய், சீராட்டிப் பாராட்டும் பாட்டியாய், கண்ணியம் மிக்க மாமியாய், சுற்றம் தழுவும் நல்ல பண்பினராய் விளங்குவது கண்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

திருமதி ஜேக்கப் அவர்கள் விருந்தோம்பலில் மிகவும் முன்னணியில் நிற்பவர். இப் பண்பு அவரிடம் நிறைய உண்டு. தமது இல்லத்தில் விருந்தோம்புவதோடு மாத்திரம் நின்றுவிடாது எம்மையெல்லாம் தரிசிக்க வரும்போது எமக்கு விருப்பமான பண்டங்கள் கொண்டுவர என்றுமே மறந்ததில்லை. நாமும் அவர் வருகின்றாரென அறிந்ததும் குழந்தைகள் போல அவரை எதிர்கொண்டு அவர் கொண்டுவரும் கூடையை நோக்கிய வண்ணமே இருப்போம். எம்மை அவர் என்றுமே ஏமாற்றியதில்லை.

எங்கள் அன்பிற்கும், அபிமானத்திற்கும் பாத்திரமான சகோதரி, திருமதி ஜேக்கப் அவர்கள் தமது கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் சுற்றம் அனைத்தும் சூழ, இனிது நீடூழி வாழி என வாழ்த்துகிறேன். இறைவனின் கடாட்சம் அவர் பக்கம் என்றும் நிலைத்திருக்கப் பன்முறை வேண்டுகிறேன்.

---

காற்றில் பறக்கும் காய்ந்த சருகு போல் நீ வீண் கர்வம் இல்லாதவனாக இரு.

முதற்பரிசு பெற்ற ஓரங்க நாடகம்

# பரிசு

### காட்சி 1

இடம் : மாண்டவியின் அந்தப்புரம்

பாத்திரங்கள் : கைகேயி, மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி, சேடிப் பெண்.

(மாண்டவி தன் அந்தப்புரத்தின் முன்றலில் தீ வளர்த்து அதன் முன் தியானம் செய்கிறாள்)

**கைகேயி :** அம்மா ! மாண்டவி ! தயவு செய்து உன் எண்ணத்தை மாற்றிவிடு ! நான் கெஞ்சிக் கேட்கின்றேன். வெந்த புண்ணிலே வேல் பாய்ந்தது போல். நீ ஏனம்மா என்னைச் சித்திரவதை செய்கின்றாய்? கேள் மாண்டவி உன் தீர்மானத்தை மாற்றிவிடம்மா.

(மாண்டவி அசையவில்லை)

**ஊர்மிளை :** அக்கா ! ஏனக்கா எங்களை துன்பப் படுத்துகின்றீர்கள்? அண்ணலையும் அன்னையையும் விட்டுப் பிரிந்த பதினான்கு வருடங்களாக நாம் பட்ட வேதனை போதுமக்கா ? உங்கள் எண்ணத்தை மாற்றி விடுங்கள் !

**சுருத கீர்த்தி :** அக்கா ! மாண்டவி அக்கா ! என்னை விட்டுப் போய்விடாதீர்களக்கா? சிறியவளான எனக்கு உங்களை விட்டால் வேறு யாருளர் அக்கா ! அன்று முதல் இன்று வரை எனக்கு அறிவுரை புகன்றீர்களே அக்கா ! காயத்திரி மந்திரம் செபிக்கக் கற்றுத் தந்தீர்களே ! அக்கா ! என்னை விட்டுப் போய் விடாதீர்கள் !

(கண்திறந்து அனைவரையும் பார்த்து விட்டுக் கண்ணீர் வடிக்கின்றாள்)

**மாண்டவி :** அம்மா ! அன்னையே ! நீங்கள் துன்பப் படாதீர்கள் ! மறுமை தவறாத குலத்தில் வந்தவளான நான், இராமபிரானின் அடிகளைப் பின்பற்றி நடக்கும் கண்ணின் மணியான சீதாபிராட்டியின் தங்கையான யான் (உடன் பிறப்பில்லை) மட்டும் என் கணவன் தீயில் வீழ்ந்திறந்த பின்னும் எப்படி உயிர் வாழ்வேன் அன்னையே ! பதினான்கு வருடங்களாக அண்ணல் காடாள, வாழ்வை வெறுத்து பாதுகைகளைப் பூஜிக்கும் என் கணவன், அண்ணாவின் வருகை தாமதப்படின் தீயில் வீழ்ந்து விட்டால், அப்புனிதரின் ஆன்மாவுடன் ஒன்றுதல் தானே என் கடன்? தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள் ! அனைவரும் என்னைத் தனிமையில் விடுங்கள் ! விடுங்கள் !

**கைகேயி:** மாண்டவி ! என்னை நீ குத்திக் காட்டுகின்றாயா ? அறம் அழிந்து மறம் ஓங்கும் வேளையில் இவ்வுலகைக் காக்கச் சிறு நாடகமாடிய என் உள்ளத்தின் உண்மை நிலை புரியாமல் உலகமே தூற்றுகின்ற இவ்வேளையில், சிறு பிள்ளையான நீயும் என்னைத் துன்புறுத்துகின்றாயா ? உன் கணவன் விண்ணுலகம் சென்ற பின்னும் நீ உயிருடன் இருக்கின்றாயே என்று தூற்றுகின்றாயா ? இதோ நான் நீ வளர்த்த தீயிலேயே வீழ்ந்திறக்கின்றேன். பார் ! பார் !

(கைகேயி தீப்பிழம்பிற்கு அருகில் ஓடுகின்றாள், அனைவரும் சென்று பிடிக்கின்றனர்)

**சுருத — ஊர் :** அம்மா ! இவ்வேளை நீங்களும் எங்களை விட்டுப் போய்விடப் போகின்றீர்களா ?

மாண்டவி அக்கா ! பார்த்தீர்களா ! எத்தகைய பெரிய பிழை நேரவிருந்தது !

(அனைவரையும் அமைதியுடன் பார்த்த மாண்டவி பேசத் தொடங்குகின்றாள்)

**மாண் :** ஊர்மிளா, சுருத கீர்த்தி ! எங்கள் திருமண நாளைச் சற்று நினைவு கூர்ந்து பாருங்கள் அன்று நாமனைவரும் ஓர் சபதம் எடுத்துக் கொண்டோமே ஞாபகமிருக்கின்றதா ? சற்று நினைவு கூர்ந்து உங்கள் தீர்மானங்களைக் கூறுங்கள் பார்க்

கலாம். எங்கே ஊர்மிளா ? உன் தீர் மானம் என்ன ?

மாண்: நன்று ! அப்படியே இன்று வரை உன் கணவன் சொல்லைத் தட்டாமல் நடந்து வருகின்றாய். அண்ணனுடன் காவலாக (இலட்சுமணன்) உன் கண வன் சென்று விட அன்னையைக் காக் கும் பொறுப்பையேற்று, பதி சொற்ற வறாத பாவையாக நடந்து கொள்கின் றாய். ம்: அப்படித்தானே ? எங்கே சுருதா ? உன் தீர்மானத்தையும் சற்றுக் கூறு பார்க்கலாம் ?

சுருத: ''கணவனுக்குத் துன்பம் நேராமலும் நேர்ந்தால் அதனைத் தாங்கிக் கொள் ளும் மனோதைரியத்தை என் கணவ னுக்கு கொடுக்க வேண்டும் எனவும் இறைவனை என்றென்றும் தியானம் செய்வேன்''

மாண்: பார்த்தாயா ? உன் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் என்னிலும் சிறியவ ளான நீ கூட எவ்வளவு உறுதியாக இருக்கின்றாய்! நேற்று முதல் நீ ''மாங் கல்ய பலமான விரதத்தை மேற்கொள்ள வில்லையா ? சுருதா. எங்கே என் தீர் மானத்தைக் கூறட்டுமா ? என் தீர்மா னம் என்னவெனில்,

''கணவன் நலத்திற்காகவே தியானம் செய்வது, அவன் நலத்திற்கு தீங்கேற்ப டின் அவரிருக்கும் இடத்தையே அடை வது என்று தீர்மானம் செய்து கொண்டேன்.''

பார்த்தீர்களா ஊர்மிளா ? சுருதா ? நீங்கள் மட்டும் உங்கள் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கும் போது நான் ஏன் உறுதியாக இருக்கக் கூடாது ? தயவு செய்து என் வழியில் குறுக்கிடாதீர்கள் ! என்னை விட்டு விடுங் கள் ! விட்டுவிடுங்கள் ! தெய்வமே ! என் கணவர் சேதியொன்றும் தெரிய வில்லையே !

(குமுறிக் குமுறி அழுகின்றாள் மற்றவர் கள். செய்வதறியாது நிற்கின்றனர்.) அவ்வேளை

சேடி : அம்மா ! (அனைவரும் நிமிர்ந்து பார்க்கின்றனர். தாயே சேவகன் ஓர் செய்தி கொணர்ந்தனர் கூறட்டுமா?

அனைவரும் ; கூறு ! கூறு ! விரைவாகக் கூறு !

சேடி : அம்மா ! அண்ணனும் அன்னையும் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்க ளாம். இளையவர், காலதாமதமாகி விடவே தீயில் விழப்போகும் நேரத்தில் ஓர் குரங்கு வந்து கணையாழியைக் கொடுத்துச் சேதி கூறியதாம். அவர்களை வரவேற்க நாடெங்கும் அலங்கரிக்கப் படுகின்றதம்மா.

அனை : ஆ ! என்ன இன்பமான செய்தி ! வாருங்கள் நாமும் அனைவரையும் வரவேற்கத் தயாராவோம் ! ஆகா !

(அனைவரும் கட்டித் தழுவுகின்றனர்)

## காட்சி 2

### பரதன்—மாண்டவி அந்தப்புரம்

பாத்திரங்கள் : பரதன், மனைவி மாண்டவி

பர : மாண்டவி ! கண்ணே ! நன்றாக இளைத்து விட்டாயே ! நான் பெரும் பாக்கியசாலி மாண்டவி ! கண்ணெ திரே தன் கணவன் துறவறம் மேற் கொள்ள வேறு எந்தப் பெண் பொறுத் திருப்பாள். கண்ணே !

மாண் : போதும் புகழுரை. அக்கா சீதை செய்த தியாகத்திலும் விடவா வேறு தியாகம் சுவாமீ !

பர : என்ன ! ஒரு பெண்ணை இன்னொரு பெண் புகழ்வதா ? தான் செய்த தல்லவா பெரிதெனப் போற்றுவார் கள் பெண்கள் ! ம் ! நான் உண்மை யிலேயே கொடுத்து வைத்தவன்தான். எங்கே மாண்டவி ! இவ்வளவு காலமும் உன்னை விட்டுப் பிரிந்திருந்தேன் ! உனக்கு என்ன வேண்டும் கூறு கண்ணே ! கூறு !

மாண் : என்ன ! தந்தை வழியைப் பின் பற்றுகின்றீர்களா ? சுவாமி ! வரம் கொடுத்ததால் ஏற்பட்ட துயர் நீங்கு முன் இன்னொரு வரமா ? நன்ருக யோசித்துப் பார்த்துத்தான் கேட்கின் றீர்களா ? நாதா !

பர் : என்ன மாண்டவி ! என் அன்புக் கினியவளைப் பற்றி எனக்குத் தெரி யாதா ? என் துன்பம் உன் துன்பமாகக் கொள்பவளல்லா ? நீ ! அண்ணலின் வருகையில் தாமதமேற்பட்டதால், தீயில் விழுவதற்குத் தயாராக யானிருக் கையில், நீயும் உன் வாழ்வை முடித்துக் கொள்ள இருந்தாயே, மாண்டவி, உன் அன்பு எனக்குத் தெரியாததா ?

மாண் : போதும் நானும் அப்போதிருந்தே பார்த்துக் கொண்டிருக்கின்றேன். புக ழாரமாகச் சூட்டுகின்றீர்கள். யான் உங்களிடம் கேட்கப்போவது ஒரு பொருள் ! என் மாங்கல்யத்தை, என் தெய்வத்தைக் காத்த அப்பொருளை எனக்குத் தரவேண்டும் நாதா ! அத் தூய பொருளை என் உயிர் உள்ள வரை வைத்துப் பூசிக்க விரும்புகின்றேன் நாதா ?

பர: அப்படி என்ன பொருள் மாண்டவி ! உனக்கில்லாத பொருளா ? எனக்கு. எங்கே இனி என் பொறுமையைச் சோதிக்காமல் கூறு பார்க்கலாம் ?

மாண்: சுவாமி ! அண்ணலும் அக்காவும் தாம் நாடு புறப்பட்டுவிட்டோம் என் பதை அறிவிப்பதற்காக, ஒரு குரங்கி டம் ஒரு கணையாழி கொடுத்து அனுப் பினர்களே, அத்தூய பொருளைத்தான் நான் பரிசாகக் கேட்கின்றேன். அக்க ணையாழி இல்லாவிடின் இன்று நாமிரு வரும் இவ்வளவு உற்சாகமாக இருக்க முடியுமா ? சுவாமி மறுக்காமல் அதனை எனக்குத் தருவீர்களா ? நான் நாடோ றும் அதனைப் பூசிக்க விரும்புகின்றேன்.

பர: மாண்டவி ! ஏன் நாமிருவருமே அத னைப் பூஜையில் வைத்து வழிபடுவோமே என் கண்ணின் மணியாளை எனக்குத் திரும்பத் தந்ததுவும் அக்கணையாழி தானே ! வா மாண்டவி ! எம் பூஜை யறையில் அக்கணையாழியை வைத்து வழிபடுவோம்.

(இருவரும் சென்று பூஜையறையில் கணையாழியை வைத்து வழிபடுகின்றனர்.)

**செல்வி வசுமதி சின்னத்துரை**
மனையியல் (2ம் வருடம்)

---

**மனிதாபிமானம்**

பந்தொன்றை நிலத்திலே எவ்வளவு தாக்கத்தோடு எறிகிருேமோ அந்த அளவிற்கு அது மேலே மேலே எழும். சூழ்ந்துள்ள மக்களில் நாம் எவ்வளவு அதிகமாக மனிதாபிமானம் காட்டுகின்ருேமோ அந்த அளவிற்கு நாம் சுவர்க்கத்தை நோக்கி மேலெழலாம்.

— ஜே. மேசன்

முதற் பரிசு பெற்ற இசைப்பாடல்

# முருகன் புகழ் ஒலிக்கும்

இராகம் : — வலஜி
தாளம் : — ஆதி

ஆ : — ஸ க ப த நி ஸ்
அ; — ஸ் நி த ப க ஸ

### பல்லவி

பாட்டிசைத்தால் முருகன் புகழ் ஒலிக்கும் — அவன்
காட்டிடும் கண் அழகில் கலை பிறக்கும்.

### அனுபல்லவி

கூப்பிய கையோடு குமரன் முன் நின்ருல்
வாட்டும் கவலை நிறை வையத்தையே மறந்து

### சரணம்

பன்னிரு கையழகன் பழநி மலை வாசன்
நண்ணிடும் வினைகளை நலிந்தோட நயப்பவன்
விண்ணிற மாமயிலில் வீற்றிருக்கும் விநோதன்
வீர வேற் தலைவனின் விந்தைகளை எண்ணி

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; , கா ப தா நீ, ப தா பா | ; த பா க கா | பா ; பா பா |
| ·· பாட்டிசைத்தால் முருகன் | · புகழ் ஒலிக் | கும். அவன் |
| ; , கா ப தா நீ, ஸ் ஸ்ா ஸ்ா | ; நீநீ த தா | பா ; கப கப |
| ·· காட்டிடும்கண்அ ழ கில் | · கலை பிறக் | கும். …… |
| ஸா, — கா பதா நீ, பதா பா | | |
| ·· பாட்டிசைத்தால் முருகன் | | |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , பா த நீ ஸ்ா, ஸ்ா, ஸ்ா | ! ஸ் க்ா ஸ் ஸ்ா | ஸநிதபத நிஸ்ா |
| ·· கூப்பிய கை யோ டு | - கு ம ரன்முன் | நின்…… ருல் |
| ; , ஸ்ா க்ாப்கா ஸ்ா ஸ்ா ஸ்ா | கபதநீ த பா | கா, ப கா ஸா |
| ·· வாட்டும் கவ லை நி றை | வை… யத்தை | யே ம றந்து |
| ; , கா ப தா நீ, ப தா பா | | |
| ·· பாட்டிசைத்தால் முரு கன் | | |

### சரணம்

| | | |
|---|---|---|
| ; , ஸா க பா கஸா க கா பா | ; தபா க கா | கபக- கபபஸா |
| ·· பன் னிரு கை- ய ழகன் | · பழ நி ம | லை . . வா . . சன் |
| ; , கபாகஸாஸாஸாஸாஸா | ; நிஸா நீ த | நீ ஸாஸாஸா |
| ·· நண் ணிடும் வினை க ளை | ; நலிந்தோட | நயப்பவன் |
| ; ; | (அனுபல்லவிபோற் பாடவும்) | |
| ·· விண்ணிறமாமயிலில் | வீற்றிருக் | கும் விநோதன் |
| வீரவேற் தலைவனின் | விந்தைக | ளை எண்ணி |

பொன். ஸ்ரீ வாமதேவன்
முதலாம் வருடம்
இசைப்பிரிவு

முதற் பரிசு பெற்ற சிறுகதை

# கனவுகள் கலைகின்றன

**வ**சந்த காலத்தின் ஆட்சி அக்கிராமத்தில் பார்க்கும் இடமெல்லாம், பசுமையை வாரி இறைத்து வனப்பூட்டிக்கொண்டிருக்கிறது. கன்னிப்பெண்களின் குதூகலச் சிரிப்பொலியும், கானமிசைக்கும் குயிலின் கூ கூ என்று ஒலிக்கும் இன்னிசையும் அருகே நெருங்கிக் கேட்கும் நீரோடையின் சலசலப்பும் அவற்றிற்கு மெருகூட்டுகின்றன. மெல்லெனத் தழுவும் தென்றலில், மேனி சிலிர்த்த மைதிலி அமைதியாக வானத்தைப் பார்க்கின்றாள். ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் வெண்முகில்கள் அவள் கவனத்தைக் கவர்கின்றன. சற்று நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். எங்கிருந்தோ ஓடிவந்த கருமேகக் கூட்டமொன்று வானைக் கருமையாக ஆக்கிரமிக்கத் தொடங்குகிறது. இருள் சூழ்ந்து சில வினாடிகளில் பேரிரைச்சலுடன் சோவென்று மழைகொட்டத் தொடங்கியது.

நேரம் கரைந்து போவதை உணராது நெஞ்சைப் பறிகொடுத்து இயற்கை எழிலை ரசித்துக் கொண்டிருந்த அவளுக்கு பெரும் ஏமாற்றம் சூழ மெல்லக் கண்கள் கலங்குகின்றன. சிட்டாகப் பறந்து திரிந்த அவள் வாழ்விலும் சற்று முன் வானில் காணப்பட்ட அழகின் பாங்கும், கலகலப்பான சிரிப்பொலியும் குடிகொண்டிருந்தன. திடீரென்று வானில் சூழ்ந்த வனப்பை வாரிச் சென்ற கருமேகக் கூட்டத்தைப் போல, இதயமற்ற மனிதர்களின் கூட்டம் அவள் வாழ்வின் திசையை மாற்றியமைத்தது. அவள் எண்ணங்கள் வேகமாகப் பின்னோக்கி ஓடின.

இயற்கை எழில் கொஞ்சும் கண்டிமாநகரை நோக்கி அவள் தன் தோழியைக் காண சென்று கொண்டிருந்தாள். இணைபிரியாது வாழ்ந்த மைதிலியையும், கவிதாவையும் கவிதாவின் தந்தைக்குக் கிடைத்த உத்தியோக இடமாற்றம் பிரித்து வைத்தபோது, கண்கள் கலங்க பிரிந்த அந்தக் காட்சி இன்றும் பசுமையாகக் காட்சியளிக்கிறது. ஆசிரியராக பணிபுரியும் மைதிலிக்கு கிடைத்த விடுமுறை நாட்களை மகிழ்வுடன் கழிக்க, மனமகிழ்ச்சியுடன் புறப்பட்டதும் தந்தையற்ற அவளைப்பார்த்து தாய் மீனாட்சி ''மைதிலி கவிதாவைக் கண்டு என்னை மறந்து விடாமல் ஒரு வாரத்திற்குள் திரும்பி விட வேண்டும் என்ன? என்று சற்றுக் கண்டிப்புடன் கூறவும் மைதிலி, ''அம்மா நான் வரும்போது கவிதாவையும் கூட்டிக் கொண்டுதான் வருவேன்'' என்று செல்லமாகக் கூறி தாயின் பாதங்களை பணிந்து புறப்பட்டாள்.

வாசலைத் தாண்டும் போது, காத்திருந்ததைப்போல கூரிய கல்லொன்று அவள் காலைப் பதம் பார்த்தது. போகும் வேகத்தில் பொருட்படுத்தாத மைதிலி பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் குனிந்து காலைப் பார்த்தாள். வலது காலின் பெருவிரல் செந்தூரமாகச் சிவந்து இரத்தத்தால் தோய்ந்து கொண்டு இருந்தது. மெல்ல தன் கைப் பையில் கையை நுழைத்து தன் கைக்குட்டையை எடுத்து, காலில் ஒரு கட்டுப் போட்டுவிட்டு நிமிர்ந்தாள். அவளின் செய்கையை கவனித்துக் கொண்டு இரு விழிகள் இருந்தன. தலை நிமிர்ந்த மைதிலி தனது இருக்கையின் எதிர்ப்புறத்தே உற்று நோக்கிய இளைஞனைக் கண்டு நாணமுற்று தலை குனிந்தாள். தன் கவனத்தை யன்னலின் ஊடாக செலுத்தி இயற்கையின் எழிலை ரசிக்கத் தலைப்பட்டாள்.

நெளிந்து வளைந்து காணப்பட்ட அந்தப் பாதைகளில் மிக நிதானமாக பஸ் ஓடிக் கொண்டிருந்தது. சிறு கணம் தடுமாறினாலும் பயங்கரமான பள்ளத்தில் உருண்டு விடும் சுற்றுடலைப் பார்க்கும் போது அவள் மனம் ஏனோ பயத்தால் நடுங்கியது. வெளியே இருந்த தலையை உள்ளே இழுத்து எதிரே காணப்பட்ட இருக்கையை உற்று நோக்கினாள். தன்னைக் கவனித்த இளைஞன் மெல்லக் கண்ணயர்ந்து காணப்பட்டான். சற்றுத் துணிச்சலாக அவள் உற்றுப் பார்த்த போது, அமைதியான அழகு தென்பட்டது. அவளது ஆராய்ச்சியின் நடுவில் கண் விழித்த இளைஞன் அவளைப் பார்த்து மெதுவாகப்

37/... KOP AR

புன்னகைத்தான். நர்ணத்தால் முகம் சிவக்க நளினமாகச் சிரித்த மைதிலியை நோக்கி, "எங்கே போகிறீர்கள்?" என்று வினவ மைதிலியும் கண்டியில் இருக்கும் சிநேகிதியின் இல்லத்திற்கு என்று கூறிக் கொண்டே மெதுவாகச் சிரித்தாள். உரையாடலின் மத்தியில் அவன் ஒரு ஓவியன் என்பதையும், தற்போது கண்டியில் ஆசிரியராக கடமையாற்றுவதையும், அறிந்து கொண்டாள். பஸ் தன் கடமை முடிந்தது என்பதை, அறிவிக்கும் முகமாக ஒரு குலுக்கலுடன் பஸ் நிலையத்தில் நின்றது.

சுற்றும் முற்றும் பார்த்த மைதிலியின் கண்களில் கவிதா தன்னை அழைத்துச் செல்ல வரவில்லையென்பது தெரிந்து விட்டது. புதிதாக தான் வந்திருக்கும் இடத்தில் எப்படித் தனியாக வழியைக் கண்டு பிடிப்பதென்ற பிரச்சனை தோன்றவும், அருகே வந்த அந்த இளைஞன் "ஆட்சேபனை இல்லையென்றால் நான் உங்களைக் குறிப்பிடும் இடத்தில் சேர்த்து விட்டுத் திரும்புகிறேன்" என்று கூறினன். ஒரு கணம் தயங்கினலும் வேறு வழியின்றி இசைந்தாள் மைதிலி. சுவாதீனமாக தன் சூட்கேசை எடுத்து வாடகைக் காரின் பின்புறம் வைத்து விட்டு, முன்னே அமர்ந்த அவனிடம், தன் மென்கரத்தால் விலாசச் சீட்டை நீட்டினள். படித்த சங்கரின் இதழ்களில் ஒரு விஷமப் புன்னகை நெளிந்து ஓடியது. அரைமணி நேரத்தில் கவிதாவின் இல்லத்தை அடைந்ததும் துள்ளிக் குதித்தபடி வீட்டினுள் இருந்து வந்த கவிதா ஆதரவாக கரம்பற்றி இழுத்துச் சென்றாள். மைதிலி கோபத்தில் முகம் சிவக்க "மகாராணியாருக்கு பஸ் நிலையத்திற்கு வரமுடியாமல் போய்விட்டது. இங்கு மாத்திரம் சிரிப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது" எனக் கடிந்து கூறியதும் "துணைக்குத்தான் சங்கர் அண்ணு வந்திருந்தாரே என்று கேலியாகக் கூறிச் சிரித்தாள்; மைதிலி திடுக்கிட்டுத் தன்னை அழைத்து வந்த சங்கரை திரும்பிப் பார்த்தாள். இருவர் பெட்டிகளையும் இரு கரங்களில் சுமந்தபடி வீட்டினுள் நுழையும் அவனின் இதழ்களில் அலாதியான ஒரு புன்னகை தோன்றக் கண்டு முகம் சிவந்தாள். "கவிதா எதிலும் உனக்கு விளையாட்டுத்தான், இதற்கெல்லாம் எல்லை கிடையாதா?" என்று செல்லமாகச் சிணுங்கியபடி உள்ளே நுழைந்தாள்.

பிரயாண அலுப்புத் தீர நுராடி உணவருந்தி இளைப்பாறக் கவிதா முன்பு தனக்கெழுதிய கடிதமொன்றில் சங்கரைத் தன்னுயிர்த் தோழிக்கு வாழ்வில் துணையாக்க தந்தை சந்திப்பது பற்றி குறிப்பிட்டிருந்தாள். ஆனல் இதில் தன் தாய்க்கு அவ்வளவு விருப்பமில்லையென்றும் எழுதியிருந்தாள். எனவே கூடுமான வரை சங்கருடன் கதைப்பதை தவிர்க்கத் தொடங்கினள். வெறுப்பதில் நம்மையறியாமல் விருப்பு ஏற்படுகிறது என்பதற்கிணங்க சங்கரின் பேச்சில், சிந்தனையில், தூய்மையான நடத்தையில் மனதைப் பறிகொடுத்து விட்டதை மைதிலி தன் வீடு திரும்பும்போது உணர்ந்தாள். அவரின் அமைதியான சுபாவமும் நிதானமான பேச்சும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன.

வீட்டிற்கு வந்தபின்னும் அவன் நினைவில் சுழன்ற தன் எண்ணங்களை நிலை நிறுத்த பிரயத்தனப் பட்டாள், மைதிலி. இரண்டு நாட்களின் பின் அவள் பெயருக்கு வந்த கடிதத்தை பிரித்தபோது அது சங்கரால் எழுதப்பட்டிருந்தது என்பதைக் கண்டு வியப்பும் சந்தோஷமும் மாறித் தோன்ற செய்வதறியாது திகைத்தாள். அன்று மாலை வந்த அவளது மாமன் அடுத்த வாரம் நிச்சயதார்த்தத்திற்கு நாள் பார்த்திருப்பதாக உணவருந்தும் போது கூறிய செய்தி கேட்டு மைதிலியின் கண்கள் கலங்கின. எழுதிச் செல்லும் விதியின் கரங்களில் தானும் ஒரு விளையாட்டுப் பொம்மையாக மாறுவதை எண்ணி வேதனைப்பட்டாள். கள்ளத்தனமாக தன் உள்ளத்தில் புகுந்து விட்ட சங்கரை மறக்க முடியாது என்பதைப் புரிந்தும் செய்வதற்கு வழியொன்றும் புலப்படவில்லை. ஒரு தாளை எடுத்து நினைவில் நிலைத்துவிட்ட பாடலின் சில வரிகளை எழுதினள்.



250038

ARCHIVES

உள்ளமெனும் பொற்பாயில் ஒரு கோடி
நல்முத்தைப் பரப்பி வைத்தே !
கள்ளமில்லா எண்ணக் கரங்களினால்
ஒவ்வொன்ருய் எடுத்துக் கோர்த்தேன்
பள்ளமெனும் பாவப் பெருங் கனலில்
கை சுடவே கையை விரித்தேன்
பழி என் மீதோ ?

எழுதிய வரிகளை முந்தி எண்ணற்ற கண்ணீர்த்துளிகள் பெருக தபாலில் சேர்த்தாள். அவள் சற்றும் எதிர்பாராத விதமாக நிச்சயதார்த்தம் என்ற பெயரில் சங்கரின் தாயும் தந்தையும் பெண்பார்க்க வந்தனர். அளவில்லாத மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்ட மைதிலியை அலங்காரப் பூஷிதையாகக் கொண்டுவந்து நிறுத்திய போதும அவளின் அழகைவிட, திறமையை விட சீர்வரிசை பற்றிய பேச்சில் தான் சங்கரின் தாய் பிடிவாதமாக வாதாடினுள். காசாக இருபத்தையாயிரமும் பெண்ணுக்கு வீடும் நகைகளும் கொடுக்க வேண்டும. என்று பேசியதோடு இதைவிட எத்தனையோ நல்ல இடங்கள் இருப்பதாகவும் கவிதாவின் விருப்பத்திற்காகவே தாம் பெண்பார்க்க வந்ததாகவும் கூறிய போது மைதிலியின் உள்ளத்தில் கூரிய முள் தைத்தது போன்ற வேதனை ஏற்பட்டது.

திரைமறைவில் இருந்த மைதிலியின் கலங்கிய கண்களைக் கண்ட மாமன் தியாகராஜன் நகைகளும், வீடும், காசாக இருபதினுயிரம் தருவதாக ஒப்புக் கொண்டார். பணத்தின் மீது குறி வைத்துப் பேசிய சங்கரின் தாய் காமாட்சி பிடி கொடுக்காமல் போய் தம் முடிவை அறிவிப்பதாகக் கூறிச் சென்ருள். அவள் பின்னே சங்கரின் தந்தையும் தொடர்ந்தார்.

நாட்கள் நகர்ந்தன. அன்று நவராத்திரி ஆரம்பம். பூரணகும்பம் பொலிவுற வைத்து கூடமெங்கும் கோலமிட்டு அலங்கரிக்கும் நன்னுள். புள்ளிகளை இணைத்து கோலத்தை பூரணமாக்க முயன்ற அவள் ''தபால்'' என்ற ஒலி கேட்டு வாசலை நோக்கிச் சென்ருள். அங்கே அவள் பெயருக்கு வந்த திருமண அழைப்பிதழ் ஒன்று கையில் கிட்டியது. உறையைக் கிழிக்குமுன் உருவாக்க முயன்ற கோலத்தில் அவள் கண்கள் சென்றன. ஓடிய வேகத்தில் கால்பட்டு அழிந்த அந்தக் கோலம் அவள் கண்களில் நீரை வரவழைத்தது. உள்ளம் நடுங்க பிரித்த போது அது சங்கரின் திருமண அழைப்பிதளே ! அவளின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய இடத்தில் ''மிர்ஞளினி'' என்ற தன் பணக்காரப் பள்ளித் தோழியின் பெயர் அழகாக அச்சிடப்பட்டிருந்தது. தான் கட்டி வைத்த எண்ணக் கோட்டை தன் கண் முன்னே இடிந்து விட்ட கொடுமையை தாங்க முடியாது பக்கத்தில் இருக்கும் தூணில் சாய்கிருள்.

உலகில் தன்னைத் தேய்த்து மணம் பரப்பும் சந்தனத்திற்கு ஒப்பான தியாகச் சின்னங்களாகிய பெண் இனத்தை விலை பேசும் இந்த சீதனக் கொடுமை மாறும் நாளே பெண்களுக்கு விடிவு ஏற்படும் பொன் நாளாகும். உன்னதமான தன் சிந்தனைகளை எண்ணக் கருத்துக்களை அழகு தமிழில் நயம் குன்ருது சிறு கதையாகவும், கவிதைகளாகவும் உருவாக்குகிருள். அவளின் இலட்சியம் காலமகளின் நடையினிலே இளைஞர்களை ஒரு நாள் நிட்சயமாகத் தூண்டிவிடும். நாட்கள் நகர்கின்றன அதோ ! அவளின் இதயத்தில் இடம்பெற்ற சங்கரின் கரங்களில் ''உதிரிப்பூ'' என்ற மைதிலியின் உருக்கமான கவிதைத் தொகுப்பு காணப்படுகிறது. படித்து முடிந்த அவன் கண்களில் பெருகும் கண்ணீரின் இடையே, ''மைதிலி என்னை மன்னித்து விடு நான் ஒரு கோழை உன்னைத் துணிந்து கைப்பற்ற முன் வராதது என் தவறு அம்மா என்று அவனின் இதழ்கள் வேதனையோடு முணுமுணுக்கின்றன. அவனுடைய மனமாற்றம் அவன் எண்ணங்களில் ஏற்பட்ட எழுச்சி எல்லாம் ஒன்று சேர மைதிலியை விம்மி விம்மி அழ வைக்கின்றன. அவளுடன் இயற்கையும் சேர்ந்து அழுது கொண்டே இருக்கின்றது.

**செல்வி சத்தியராணி சிவப்பிரகாசம்**
மனையியல் பிரிவு 1ம் வருடம்

# கவிஞர் காட்டும் கவிதை இன்பம்

''காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்
அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் நம்மில்
தொட்ட விடமெல்லாம் கண்ணில்
தட்டுப்—பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலங்குகின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்;
ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனிலந்த அழகென்பாள் கவிதை
தந்தாள்.''

என்று பாடிப் பரவசமடைகின்றார் கவிஞர். இயற்கை இன்பத்திலே புலவர்கள் காண்கின்ற காட்சி - அடைகின்ற இன்பம் அளவிடற்கரியது. இவர்களின் கவிதைகள் யாவும் மக்களின் மனதைக் கவர்ந்திழுக்க வல்லன.

மணிமேகலை ஆசிரியரான சீத்தலைச் சாத்தனாரும், கவியரசர் கம்பரும் காண்கின்ற இயற்கைக் காட்சியின் மாட்சிதான் என்னே!

வெயில் நுழைபறியாக் குயில் நுழை சோலை: சோலைக்குள்ளே தும்பிகள் குழல் ஊதுகின்றன; வண்டுகள் யாழ் மீட்டு கின்றன. மயில்கள் நடனம் புரிகின்றன; கம்பங் கோழிகளின் கனத்த ஓசை நாட்டியத்திற்கேற்ற முழவொலியாக ஒலிக்கின்றது. குயில்கள் மரக்கிளையிலிருந்து இன்னிசை எழுப்புகின்றன. அருகில் உள்ள குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. அம் மலர்களில் ஒன்றில் அன்னமானது ஓர் அரசனைப்போல் அமர்ந்திருக்கின்றது. அரசனுடன் சேர்ந்து மந்திகள் நடனத்தைக் கூர்ந்து நோக்குகின்றன.

மணிமேகலையில் ''பளிங்கறை புக்க காதை'' யினுள் இப் பாடலைக் காண்கின்றோம். பாடல் இதோ!

பரிதியஞ் செல்வன் விரிகதிர் தானைக்
கிருள்வளைப்புண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை
- பொதும்பர்
மயிலாடரங்கின் மந்தி காண்பன காண்
மாசறத் தெளிந்த மணிநீரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மலரிடைநின்
றோரு தனியோங்கிய விரை மலர்த்
- தாமரை
யரசவன்ன மாங்கினி திருப்பக்
கரை நின்றாலு மொரு மயிறனக்குக்
கம்புட் சேவற் கனை குரன் முழவாக்
கொம்பரிருங் குயில் விளிப்பது காணு
வியங்கு தேர் வீதி... ...

கவிச் சக்கரவர்த்தி கம்பர் மருத நிலத்தை அரசனாக உருவகித்து, அரச தர்பாரை எம் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறார்.

தாமரை மலர்கள் விளக்கேந்தியது போலவும் மேகங்களின் முழக்கம் முழவினைப் போலவும் வண்டுகளின் ஒலி மகரயாழினைப் போலவும் உள்ள சோலையில் மயில்கள் ஆடுகின்ற நடனத்தைக் குவளை மலர்கள் வியந்து நோக்குகின்றன.

'தண்டலை மயில்களாடத் தாமரை
விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவினேங்கக்
குவளை கண் விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகளினிது பாட மருதம்
வீற்றிருக்கும் மாதோ.

என்பது அவரது பாடல்.

அடுத்து இயற்கையழகோடு கூடிய ஆண்டாளின் அனுபவத்தைப் பார்ப்போம்.

வயலில் செழித்து விளைந்த செந்நெல் ஊடே கயல் மீன் புரள்கிறது. குவளை மலரில் வண்டு துயில் கொள்கிறது. வாவி

யில் செங்கழுநீர் மலர, ஆம்பல் கூம்புகிறது. ஆனைச் சாத்தான் என்னும் குருவி 'கீசு கீசு' என்கிறது. மாதவிப் பந்தல்களில் குயில்கள் கூவுகின்றன. கோவில்களிலிருந்து சங்கொலி எழுகின்றது. எருமை மாடுகள் அதிகாலை யில் மேய்ச்சல் நிலத்தை நோக்கிச் செல் கின்றன. வீட்டினுள்ளே தங்கத்தால் ஆன கட்டிலின் அருகில் குத்து விளக்குச் சுடர் விடுகின்றது.

'ஓங்கு பெரும் செந்நெல்
ஊடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில்
பொறி வண்டு காண்படுப்ப

உங்கள் புழக்கடைத்
 தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து
 ஆம்பல் வாய் கூம்பின காண்......
கீசு கீசென்று
 ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம்
 கேட்டிலையோ.
வந்தெங்கும் கோழி
 அழைத்தன காண் மாதவிப்
பந்தரில் பல்காள்
 குயிலினங்கள் கூவினகாண்
கீழ் வானம் வெள்ளென்று
 எருமை சிறு வீடு
மேய் வான் பரந்தன காண்... ...

மார்கழி மாதத்தின் அதிகாலைப் பொழுது எம் கண்முன்னால் படம் விரித் தாடுகின்றதல்லவா ?

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நீழலே.

குற்றமற்ற வீணை இசை; மாலை பொழுது; தண்ணொளி பரப்பும் சந்திரன்; வீசுகின்ற தென்றற்காற்று; விம்மிப் பூரிக் கின்ற இளவேனில், வண்டுகள் ரீங்காரம் செய்யும் மலர்ச்சோலை இவை யாவும் ஒன் றிணைந்து திருநாவுக்கரசரை இன்ப உல கிற்கு இட்டுச் சென்றன. அவரை மட் டுமா ... ... ... நம்மையும் தான்.

**திருமதி தேவிகாராணி முருகுப்பிள்ளை**
இசை, 2ம் வருடம்

---

### சிரிப்பின் அருமை

சிரிப்பது மிகவும் நல்லது. எவ்வாறுவது நாம் சிரித்து வாழவேண்டும். ஒருவன் எமது உடலிலே வைக்கோல் துண்டினால் கிசுகிசு மூட்டி அதனால் சிரிப்பு உண்டானாலும் நல்லதே. ஏனெனில் மனிதனை மிருகத்தி னின்றும் வேறுபடுத்துவதே இந்தச் சிரிப்புத்தான் மிருகங்கள் வருந்தும் பொழுது அழுகின்றன. ஆனால் மகிழ்ச்சியின்போது அவற்றால் சிரிக்க முடிவதில்லை.

— ட்றைடன்

# எண் அடிகள்

எண் அடி எண் முறையின் முக்கிய அம்சமாகும். எண் முறையின் மற்றைய அம்சங்கள் எண் பெயர்கள், எண் குறிகள், எண்களின் பெறுமானம், எண்கள் ஒழுங்கு என்பனவாகும். நாங்கள் வழமையாக எழுதும் எண்களின் இடப் பெறுமானங்கள் பத்தின் வலுக்களாகும். அதன் இடப் பெறுமானம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் முதலியன அதனுல் நாங்கள் தசம எண் முறையை உபயோகிக்கின்ருேம். இம் முறை எளிமையான தாகையால் சர்வதேச எண் முறையாக இருக்கின்றது. எண் முறை வளர்ச்சியடைந்து வந்த வரலாற்றை ஆராய்ந்தால் ஆரம்பத்தில் எண் முறையே இருக்கவில்லை. நாகரீகம் வளரவே எண் முறையும் கண்டு பிடிக்கப்பட்டது. பல்வேறு சாதியினர் பல்வேறு எண் முறைகளை உபயோகித்துள்ளனர். சிலருக்கு அவற்றை உபயோகிப்பதில் பல பிரச்சினைகள் ஏற்படுவதால் அவை பாவிக்கப்படுவதில்லை எனலாம்.


நாம் இன்று உபயோகிக்கும் இந்து அராபிய எண் முறை கூட மிக அண்மைக் காலத்தில் கண்டு பிடிக்கப்கட்டவை. இந்து மக்கள் கையாண்ட இம் முறையை அராபிய வியாபாரிகள் ஐரோப்பிய நாடுகளில் பரப்பியதன் காரணமாக இப் பெயர் நிலவியது. அதுவும் பூச்சியத்தின் கண்டு பிடிப்பினுல் முழுமை பெற்றுள்ளது பூச்சியம் கண்டு பிடிக்கும் முன் இம் முறையிலும் பிரச்சினைகள் இருந்தன. அவை எண்களைச் சரியாகச் சொல்ல முடியாததும், பெருக்கல் செய்வதில் பிரச்சினையும் ஆகும். இவை யாவும் பூச்சியத்தால் நிவர்த்தியாக்கப்பட்டன. இந்து அராபிய முறையில் 0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்னும் அடிப்படை எண்குறிகள் பத்து உள்ளன. இவற்றைக் கொண்டு விரும்பிய எந்த எண்களையும் எழுதலாம். உ—ம்: 2222 என்ற எண்ணில் வலது புற இறுதியில் உள்ள 2 ஒன்றையும், அதை அடுத்துள்ள 2 பத்தையும். மூன்ருவது 2 நூறையும், நான்காவது 2 ஆயிரத்தையும் காட்டுகின்றன இதிலிருந்து வலமிருந்து இடமாக ஒவ்வொரு எண்களும் 10 மடங்கு கூட்டப்படுவதையும், இடமிருந்து வலமாக 10 மடங்கு குறைக்கப்படுவதையும் காணலாம். ஆதலால் இவ் எண் முறையை எண் அடி பத்து எனக் கூறப்படுகின்றது.

நமது கையிலுள்ள விரல்கள் பத்தாக இருப்பதனுல் அதை எண்ணுவதற்கு உபயோகித்தனர் என்று கருதப்படுகின்றது எங்கள் கைவிரல்கள் வித்தியாசமாக இருந்திருந்தால் எண் அடியும், எண்களுக்குரிய அடியும் வேருக உபயோகிக்கப்பட்டிருக்கலாம். பத்தை அடியாகக் கொண்ட எண் முறையை நன்கு விளங்கிக் கொள்ளவும், கணனிகள், கணித்தற் பொறிகள் இயங்கும் விதத்தை அறிந்து கொள்ளவும் வித்தியாசமான எண்ணடிகள் பற்றிய அறிவு இன்றியமையாததாகும்.

இரண்டாம் வகுப்பில் இருந்தே வித்தியாசமான எண்ணடிகள் பற்றிக் கற்பிக்கப்படுகின்றது இதற்கு டீன்சின்படி அடிக்கட்டைகளும், முக்கோணத் துண்டுகள், எண் சட்டம் என்பன உபயோகிக்கப்படுகின்றன. இவை அமைப்புச் சம்பந்தமான உபகரணங்களாகும். இவற்றை விட குச்சிகள். சிறு கற்கள், கட்டைகளும் பாவிக்கப்படுகின்றன. இவற்றை எப்படி உபயோகப்படுத்தலாம் எனச் சிறிது ஆராய்வோம். எமக்கு வேண்டிய குச்சிகளை எடுத்துக் கொள்வோம். உ—ம்: 5ஐ அடியாகக் கொண்டு 34 குச்சிகளை எடுத்து ஐந்து, ஐந்தாகக் கட்டுவோம். இப்போது இதிலுள்ள கட்டுக்களையும் தனிக் குச்சிகளையும் அவதானிப்போம். +++++ +++++ +++++ +++++ +++++ +++++ IIII இதில் 6 கட்டுகளும், 4 தனிக் குச்சிகளும் இருக்கின்றன. இக் கட்டுகளில் திரும்பவும் ஐந்து குச்சிகள் கொண்ட ஐந்து கட்டுகள் ஒன்ருகக் கட்டிப் பார்ப்போம். +++++++++++++++++++++++++ +++++ IIII இதில் 25 குச்சிகள் கொண்ட 1 கட்டும் 5 குச்சிகள் கொண்ட 1 கட்டும், 4 குச்சிகளும் இருக்கின்றன. எனவே இதனை எழுதும்போது 114 ஐந்து என எழுதுதல் வேண்டும்.

இந்த குச்சிகள் 5ஐ அடியாகக் கொண்டு கட்டப்பட்டவை. இதனை வாசிக்கும் போது 114 ஐந்து என்பதை ஒன்று, ஒன்று, நாலு அடி ஐந்து என வாசிப்போம். எனவே 34 பத்து = 114 ஐந்து முன்னையதில் 3 பத்தும், 4 ஒன்றுக்களும் இருப்பது போல பின்னையதில் 1 இருபத்தைந்தும், 1 ஐந்தும், 4 ஒன்றுக்களும் உண்டு. இதே எண்ணை டீன்ஸ்படி அடிக்கட்டைகளில் காட்டுதல் :-


3875 C
C



= 1 14 ஐந்து

இப்படியான உருவத்தில் காட்டலாம்.

எண் சட்டத்தில் காட்டுதல் :-



= 114 ஐந்து


எண்ணடி பத்திலுள்ள 34ஐ எண்ணடி எட்டில் காட்டுதல் :-

(i) குச்சிகள்

++++++++ ++++++++ ++++++++ ++++++++ I I


= 42 எட்டு

(ii) டீன்கின்படி அடிக்கட்டைகள்



= 42 எட்டு

(iii) எண் சட்டம்



= 42 எட்டு

34 இல் 8 கள் நாலும் ஒன்றுக்கள் இரண்டும் உண்டு. இவ்வாறு பத்தை அடியாகக் கொண்ட எந்த எண்ணையும் விரும்பிய எந்த எண்ணடிக்கும் மாற்ற முடியும் என்பதை இவ்வுதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கம்பியூற்றரில் உபயோகிக்கும் எண்ணடி இரண்டு ஆகும்.

இதுவரை கூறிய விளக்கத்திலிருந்து எண்ணடியின் எண்ணிக்கைக்கு ஏற்ற எண்கள் அவற்றில் இருக்க வேண்டும். உ+ம் :- எண்ணடி 2 ஆயின் 1, 0, எண்ணடி 4 ஆயின் 1, 2, 3, 0 எண்ணடி 5 ஆயின் 1, 2, 3, 4, 0 போதுமானது. இது போல் மற்ற எண்களையும் எழுதலாம்.

114 ஐந்து என்பதை எண்ணடி பத்திற்கு மாற்றுதல் :-
இவ்வாறு மற்றைய எண்ணடிகளையும் செய்து கொள்ளலாம்.

(i)
```
  1  1  4
× 5
  5
+ 1
  6
× 5
 30
  4
 34 விடை
```

அல்லது

(ii) $114_{\text{ஐந்து}} = 1 \times 5^2 + 1 \times 5^1 + 4 \times 5^0$


அல்லது

$114_{\text{ஐந்து}} = 1 \times 25 + 1 \times 5 + 4 \times 0$

$= 34_{\text{பத்து}}$


விடை.

எண் சட்டத்தில் 6+7ஐ செய்தல் :-



$$\begin{array}{r} 6 \\ +7 \\ \hline 13 \end{array}$$

எண்ணடி ஐந்தில் 4+3ஐ செய்தல் :-



$$\begin{array}{r} 4 \\ +3 \\ \hline 12 \end{array}$$

## முடிவுரை

பச்சை நிறம் பற்றிய எண்ணக் கருவை வளர்ச்சியடையச் செய்வதற்குப் பச்சை நிறத்தினுலான பொருளுடன் மற்றும் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்னும் நிறத்தினுலான பொருட்களையும் காட்டியே ஒப்பிட்டு விளங்க வைத்தல் வேண்டும். இதே போன்று பத்தை அடியாகக் கொண்ட எண்ணடியை அறிமுகம் செய்து விளங்க வைக்க இரண்டு, நாலு, ஆறு, பன்னிரண்டு ஆகிய எண்ணடிகளைப் பற்றிக் கற்பித்தல் சிறந்தது. கணனிகளில் வித்தியாசமான எண்ணடிகள் உபயோகிக்கப்படுகின்றன. எனவே இவற்றைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு எண்ணடிகள் பற்றிய அறிவு இன்றியமையாததாகும். நாங்கள் இப்போது உபயோகிக்கும் அளவைகளும் வித்தியாசமான எண்ணடிகளைக் கொண்டவை. இவற்றுள் எண்ணடிகள் முக்கிய இடத்தை வகிக்கும்.

செல்வி யோகா கனகசபை
இறுதி வருடம்,
ஆரம்பக்கல்வி

[1978 ஆம் ஆண்டு, ஈழத்தின் தமிழ், சைவ வரலாற்றிலே குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றது. இவ்வாண்டிலே மூன்று முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்தன.

I சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

II பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம், இலக்கிய கலாநிதிப் (Doctor of Letters) பட்டம் வழங்கியது.

III புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அமரரானார்.

தொடக்கத்தில் மிக்க மகிழ்ச்சியையும் இறுதியில் மிக்க துன்பத்தினையும் தந்து முடிந்த இந்த ஆண்டிற்குப் பிரியாவிடையளிக்கும் இந்த வேளையில் மேற்குறித்த பெரியார் மூவரையும் போற்றுவதும் அவர்களின் பெரும் பணிகளுக்கு நன்றி கூறுவதும் எமது கடனாகும்.

இக்கடனின் பிரதிபலிப்பாகப் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை சைவப்பெரியார் பற்றி எழுதிய ஒரு கட்டுரையையும், புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை வானொலிக்கென எழுதிய ஒரு கட்டுரையையும் வெளியிடுகின்றோம்.

புலவர்மணியின் கட்டுரையை (கையெழுத்துப்படி) வெளியிடுவதற்கு உதவிய ஆசிரியர் பி. நடராசன் அவர்களுக்கு எமது நன்றி உரியது. — ஆசிரியர்.]

# I

# சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் உயர் தனிப் பெருமை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, D. Litt. (Cey.)

### குடும்பச் சிறப்பு :

புலோலியில் கல்வி அறிவு ஒழுக்கங்களுக்கு உறைவிடமாய், சித்த புருஷரான மகான் ஒருவரின் அநுக்கிரகம் பெற்ற குடும்பம் மேற்குறிப்பிட்ட பெரியார் அவர்கள் உதித்த குடும்பம்.

பெரியாரின் தந்தையார் சுப்பிரமணிய பிள்ளை. பிள்ளைக்கு இருவர் சகோதரர். ஒருவர் சகோதரி. சகோதரரில் ஒருவர் பெயர் கணபதிப்பிள்ளை. இவர் சம்ஸ்கிருதத்தில் மகாபண்டிதர். திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரியில் சம்ஸ்கிருத ஆசிரியர். அப்பொழுது அக்கல்லூரியில் தமிழாசிரியரா யிருந்தவர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. திரு. கணபதிப்பிள்ளை இரகுவம்சம், வில்ஹணீயம் என்ற நூல்களை மணிப்பிரவாள நடையில் இயற்றியிருக்கின்றார். கெம்பீர நடை.

சகோதரரில் மற்றையவர் கோவிந்த பிள்ளை என வழங்கும் வ. குமாரசாமிப் புலவர், டாக்டர் சிவப்பிரகாசத்தின் தந்தையார். இவருக்கு நாவலரோடும் நாவலர் மருகர் வித்துவசிரோமணியோடும் கல்வித் தொடர்புண்டு.

சகோதரியின் பெயர் பார்ப்பதி அம்மையார். பாருச்சி என வழங்குவது வழக்கம். வான்மீகத்தைச் சம்ஸ்கிருதத்தில் வாசித்து விளக்கஞ் செய்யும் திறமை அந்த அம்மையாருக்கிருந்தது. குறித்த குடும்பத்தில் இரு பெண்பிள்ளைகள் மிக இளம் பருவத்தில் மதுரைப் பண்டித பரீட்சையில் சித்தியெய்த வைத்தவர் பார்ப்பதி அம்மையார். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களைக் கதை சொல்வதுபோற் கற்பித்து விடுவார் என்று கேள்வி.

உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் அவர்கள் சமஸ்தான வித்துவான்போல் அக்குடும்பத்தில் ஒருவராய் அங்கே வசித்து வந்தவர்கள்.



பாவலர் ஈழப் பண்டிதர்க் கெல்லாம்
பண்டித மணியாய் ஒளிவிடும் ஐயா
நாவலர் மாணவ பரம்பரை வந்து
நற்றமிழ் சைவக் கடலினை முகந்தோய்
மேவுசித் தாந்த வரையினை யகழ்ந்து
விலையிலா மணிகள் பலவினைத் தந்தோய்
காவியச் சாறு பிழிந்தனை சுவைத்தோம்
கலாநிதிப் பட்டம் பெற்றதெம் பேறே.

''முல்லைமணி''

வடக்கிலங்கையின் துருவமீன்
**பண்டிதமணி, இலக்கியகலாநிதி**
**சி. கணபதிப்பிள்ளை**

கிழக்கிலங்கை பெற்றெடுத்த கீதைத் தமிழன்
எழுச்சிப் புலவர்மணி, ஏந்தல் — விழிப்புமிக்கோன்
எங்கள் பெரியதம்பி; ஈழத்தின் மாட்சிமைக்கு
நன்கலமாய் வாய்த்த நயம்.

இ. முருகையன்



கிழக்கிலங்கையின் விடிவெள்ளி
**புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை**

'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனர் வேண்டுவது'



**கிழக்கிலங்கையின் ஞானச்சுடர்**
**விபுலாநந்த அடிகள்**

ஞானி, சுவாமி, நறுந்தமிழைத் துய்ப்பதிலோர்
தேனீ, அறிஞன், திறல்மிக்கோன் — ஆய்வாளன்
யாழ்நூல் படைத்த நமதுவிபு லாநந்தன்
சூழ்புகழாய் நின்ற சுடர்.

இ. முருகையன்

ஆகவே சம்ஸ்கிருதத்தோடு தமிழும் ஒருங்கு அக்குடும்பத்தில் தாண்டவம் ஆடிற்று. திரு. சுப்பிரமணியபிள்ளை அடிக்கடி கடல் மார்க்கமாக வடக்கே போய் வருபவர். வடக்கே சித்த புருஷர் ஒருவரின் அநுக்கிர கத்திற்குப் பாத்திரமாய், அம்மகானைத் தம் மிடத்துக்கு அழைத்துவரும் பாக்கியத்தை யும் பெற்றிருந்தார். அந்த மகானின் பெயர் வார்கடைச்சுவாமி. சுவாமிகள் கடையிற் சுவாமியை ஒத்தவர்கள். சுவாமிகளின் சித் துக்கள் பல. ஒருநாள் சிறிது தூரத்தில் உள்ள ஒருவர் சுவாமியை வணங்கி, சுவாமி யிடம் ஒரு காசைப் பெற்று விட்டார். அன் றிரவு சுவாமிகள் சுப்பிரமணியபிள்ளையை எழுப்பி 'புறப்படு அவனிடம் அந்தக் காசை வாங்கிவரவேண்டும்' என்றார்கள். பிள்ளை, வண்டியில் சுவாமியை அழைத்துச் சென்றார். சுவாமி காசை வாங்கிக்கொண்டு மீண்டது. இது சுவாமிகளின் திருவிளையாடல்களில் ஒன்று. சுவாமிகளுக்குப் பணிவிடை செய் யும் பெரும் பேற்றைப் பெற்றவர் பார்ப்பதி அம்மையார். நிற்க,

இக்குடும்பத்தில் ஒரு பிள்ளை பிறப்பதா னால் அப்பிள்ளைக்கு எத்துணைத் தவம் இருக்கவேண்டும்!

* * *

திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் சுப்பிர மணியபிள்ளை அவர்களின் இளைய குமாரர். ஒரே ஒரு குமாரர். மூத்த பிள்ளைகள் பெண் பிள்ளைகள். அவர்களுள் மகேசுவரிதேவி என்ற பெண்ணைத்தான் எனக்குத் தெரியும். மிக மிக நெருங்கிய பழக்கம் உண்டு இள மையில் மகேசுவரி தேவியே என்னை வளர்த் தார் என்றும் சொல்லலாம். மகேசுவரியின் கணவர் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள். உரையாசிரியர் எனக்குப் பாட் டன் முறையினர். 'இந்துசாதன' பத்திரா சிரியராயிருந்த திரு திருஞானசம்பந்தர் முதலிய ஐவர் உரையாசிரியரின் புதல்வர் கள்; திரு. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு மருமக்கள்.

* * *

**சைவப் பெரியார் :**

'கல்லாமற் பாதி குல வித்தை'. சமய மும் தமிழும் குடும்பச்சொத்தாய், பெரி யார் அவர்களுக்கு இளம் பருவத்திலேயே உதிரத்தில் கலந்து ஊற்றெடுக்கத் தொடங்கிவிட்டன. கந்தபுராணம் என்றால் உள்ளங்காலிலிருந்து உச்சிவரை பெரியா ருக்கு உருகும். கந்தபுராணம் சைவ சித்தாந்த பொக்கிஷம் என்பது பெரியார் கருத்து.

புலோலியில் பெருமதிப்புக்குரியவர்கள் திரு. வேலாயுதபிள்ளையவர்கள். பெரியா ருக்கு அவர்கள் உறவினர். வேலாயுத மகாவித்தியாலயம் அவர்கள் தாபித்தது. பெரியாருக்கு ஆரம்பக்கல்வி அவ் வித்தி யாலயத்தில் ஆரம்பித்திருக்கும். மேற் படிப்பு திருச்சியில் நடந்தது.

அக்காலத்தில் 'பிராமண ரல்லாதா ருக்கு கணிதம் வராது' என்ற திட நம் பிக்கை அங்கேயிருந்தது. பெரியார் அந் நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கணிதத்தில் மிக்க திறமையோடு B. A: பரீக்ஷையிற் சித்தியெய்தினார் தர்க்கம், அக நூல் அவருக்குக் கைவந்தவை. பட்டதாரி யானபோது மிக இளம் வயசாயிருக்கும். அவரது ஆங்கிலப்படிப்பு ஆங்கில நாகரி கத்தை எட்டியும் பார்க்கவில்லை.

ஒல்லியான தேகம்—குடுமி—மடித்துக் கட்டிய எட்டுமுழ வேட்டி—காற்சட்டை, சப்பாத்து, செருப்பு அவர் கால்கள் அறி யாதவை—சட்டை தரிப்பது மிக அருமை— சிறிய அங்கவஸ்திரம்—மிதியடி—இவ்வாறு காட்சியளித்தார் இளைஞர் திரு. சு. சிவ பாதசுந்தரம்.

* * *

இவருக்கு ஆசிரியர் உத்தியோகம் திருக்கோணமலையில் அமைந்தது. அப் பொழுது பிறர் பொருளைக் காஞ்சிரங் காயாக மதிக்கும் அவரியல்பு வெளிப்பட் டது. இதற்கு வேடிக்கையான கதைகள் அங்கே உண்டு. பிற்காலத்தில் வெகுதூரம் பிரசங்கத்துக்குச் சென்றாலும் மோட்டார் செலவைத் தாமே கொடுத்து விடுவது அவர் வழக்கம்.

பெரியாரின் சமயவாழ்க்கை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் உப அதிபரா யும், அதிபராயும் இருந்த காலத்தில் உச்ச நிலை எய்தியது.

பெரியார் எழுதிய முதலாம் சைவ போதத்துக்கு, சேர். பொன். இராம நாதன்துரை ஒவ்வொரு பாடத்தையும்

ஆராய்ந்து விரிந்த முன்னுரை வழங்கியிருக்கின்றார் இரண்டாம மூன்றும் சைவ போதங்களும் சைவக் கிரியை விளக்கமும் ஆங்கிலத்தில் எழுதிய சைவசித்தாந்தமும் அருமையானவை. அவற்றைப்பற்றி இங்கே விமர்சிக்கவில்லை.

* * *

பெரியாரின் பேச்சுத் தனித்துவமானது. அது பற்றிச் சிறிது சிந்திப்போம்.

1917 ஆம் ஆண்டு தொடக்கம் பத்து வருடகாலம் நாவலர் வண்ணைச் சைவப் பிரகாசவித்தியாசாலை எனக்கு வசிப்பிடமாயிருந்தது. வருடந்தோறும் மூன்று தினம் அங்கே சைவசித்தாந்த மகா சமாஜம் நடைபெறும். பகல் 2 மணி தொடக்கம் இரவு 12 மணி வரை நடக்கும். நாள்தோறும் பத்துக்கு மேற்பட்ட தொகையினர் சொற்பொழிவு செய்வார்கள். வித்தியாசாலைத் திறப்பு என்னிடமிருப்பதால் பிரசங்கம் முழுவதையும் நான் கேட்டுக் கொண்டிருப்பேன். இறுதியில் மிகச்சிலரே இருப்பார்கள்.

ஒருநாள் வித்தியாசாலை மனேஜரும் நாவலர் தமையனார் புதல்வருமான ஸ்ரீமத் த. கை. அவர்களிடம் ஒரு முறையீடு செய்தேன். நான் பாடம் படிப்பதையும் விட்டுப் பிரசங்கம் கேட்பதால் எவ்வித பயனும் கிடைப்பதாயில்லை. பிரசங்கங்கள் எனக்கு விளங்குவதில்லை என்றேன். இந்த முறையீட்டுக்குக் கிடைத்த பதில் வெகு நூதனமானது.

'பிரசங்கஞ் செய்பவர்கள் தாம் விளங்கிக்கொண்டு பேசுகின்றார்கள் என்று எண்ணுகிறாயா ?' என்பது கிடைத்த பதில்.

பதில் ஹாஸ்யத்தோடு கூடியதாயினும் உண்மையைக் கொண்டதாயிருந்தது.

மனேஜர் அவர்களின் பதில் கிடைத்த நாள் தொடக்கம் சமயப்பிரசங்கம் கேட்பதில் விருப்பமில்லாததொரு நோய் என்னைப் பற்றிக்கொண்டது.

நோயோடு கூடிய இந்த நிலையில், குறிப்பிட்ட பெரியார் அவர்களின் சமயப் பிரசங்கம் ஒன்றைக் கேட்க நேர்ந்தது. பிரமித்துப் போனேன். ஒவ்வொரு சொல்லையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

பிரசங்கஞ் செய்யும்போது பெரியார் அவர்களின் நிலை பிரத்தியேகமானது. தேக அசைவின்றி மெல்ல எழுந்து நிற்பார். அங்கவஸ்திரத்தால் தோள்கள் மறைந்தும் மறையாமலுமிருக்கும். மார்பின் மேற்பகுதி தெரியும். கைகள் ஒன்றன்மேலொன்றாய் மார்பை அணைத்து மடங்கியிருக்கும். எந்த அவயவமும் அசைவதில்லை.

கணிதபாடம் போலப் பிரசங்கம் ஆரம்பமாகும். சில விநாடியில் ஒரு அம்ச முடிவில் இலக்கிய இரசனை சொட்டும். சபை குதூகலிக்கும்.

இவ்வாறே மேலும் இரண்டொரு முறை நடந்தபின், சபை தம்வயமானதன் மேல், விஷயங்கள் விரித்து விளக்கப்படும். நியாயித்து நிச்சயிக்கும் இடங்களில் பெரியாரின் மார்பை அணைந்திருக்கும் வலக்கைச் சுட்டுவிரல் சற்றே வளைந்த நிலையில் சிறிதே அசைந்து விஷய நிச்சயத்தை வலி செய்யும்.

இடையிடையே சபை குதூகலிக்கும் போது பெரியாரின் நிலையும் முகபாவமும் வெகு சிறப்பாயிருக்கும். சபையார் குதூகலிக்கும்போது தாமும் சேர்ந்து குதூகலிக்காமல், சபையை உற்று நோக்கியபடி மௌனமாய் நிற்பார்கள். அப்பொழுது பெரியாரின் முகத்தில் ஒரு ஒளி தவழும். அது, 'ஈத்துவக்கும் இன்பத்தின்' விளைவு. வறியவர்களின் முகம் மலரக் கொடையாளியின் முகம் மலர்வதொரு நிலை.

* * *

ஒரு முறை சைவ மகாநாடொன்றில் பெரியார் அவர்கள் தலைமை வகித்து ஒவ்வொருவர் பேச்சுக்கும் வழங்கிய குறிப்புரை பேசியவர்களையும் சபையையும் பிரமிக்கச் செய்தது. உண்மையில் பிரசங்கம் முழுவதும் பெரியாரின் பிரசங்கமாகவே இருந்தது. ஆயினும், பேசியவர்கள் தம்மைப் பெருமைப் படுத்திக்கொள்ளத்தக்க வகையிலும் இருந்தது ஒரு தனிச்சிறப்பு.

கந்தபுராணத்தில் சுக்கிரனுபதேசம் பேசும்போது ஏகான்மாவாதமாகிய மாயாவாதம் பற்றி வருமிடத்தில், "கிழி கிழி யென்று கிழித்திருக்கிறார்" என்று, கிராமிய நடையில் கச்சியப்பர் பெருமை பேசுவது சுவை சொட்டுவதாயிருக்கும்.

தென்மராட்சியில் பெரியார் அவர்கள் பேசுமிடங்களில் பிரசித்தி பெற்ற சின்னத் தம்பிப் போதகரும் அதிபர் ஆபிரகாமும் பயபக்தியுடன் முன்வரிசையிலிருந்து கேட்பது குறிப்பிடத்தக்கது.

* * *

**மகோந்நத சக்தி :**

ஒரு முறை சுவாமி சர்வானந்தா யாழ்ப்பாணம் வந்தார். அவர் இராம கிருஷ்ணரின் சீடர். விவேகானந்தருக்கு அடுத்தபடியில் பிரசங்கமழை பொழிபவர்.

சுவாமிகள் பிரசங்கம் இடி முழக்கத் தோடு கூடிய பாரிய விடாமழை போன்றது. பேசும்போதே வசனம் வசன மாகப் பெயர்க்கும் வகையில் சுவாமிகள் பேச உடன்படார்கள். மணித்தியாலக் கணக்கில் பேசுவார்கள். மூன்று மணித்தி யாலப் பேச்சுமுண்டு. சுவாமிகள் பேசிய பின் ஆங்கிலந் தெரியாதவர்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு நடக்கும். சுவாமிகள் அப்படிச் சொன்னூர்கள், இப்படிச் சொன் ஞர்கள் என்று ஏதேதோ சொல்லப்படும். சொல்லுவோர் பெரும் புள்ளிகளாயிருக்க லாம். மொழிபெயர்ப்பு வாய்ப்பாயிருப்ப தில்லை. தமிழ்மாத்திரந் தெரிந்தவர்கள்கூட இருந்து கேட்பதில்லை. இதனைக் கண்ணுற்ற சிலர், நமது பெரியார் அவர்களை மொழி பெயர்ப்புக்கு அமர்த்தினர்கள்.

சுவாமிகளின் பிரசங்க மழை ஓய்ந்த பின், சுவாமிகளுக்குப் பக்கத்தில் சித்திரப் பாவை போல் அமர்ந்திருந்த பெரியார் அவர்கள் மெல்ல எழுந்து, தம்மைச் சுவாமி யாகப் பாவித்துக்கொண்டு, பிரசங்க சாரத்தைத் திரட்டி, ஆங்காங்கு சேர்க்க வேண்டியவைகளை உரிய இடத்தில் சேர்த்து,

'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி, என்ற பாடலை நினைவு கூரத்தக்க வகையில்,

பாரிய கருத்துக்களைக் கடுகுப் பிரமா ணத்தில் வழங்குவார்கள். 'சுவாமிகள் சொன்னூர்கள்' என்ற வாய்பாடு கிடை யாது. சுவாமிகள் தமிழிற் பேசுகின்றூர் கள் என்ற எண்ணமே நிலவும். சுவாமிகள் திரு. சு. சி. அவர்களாய்த் தமிழிற் பேசு கின்றூர்கள் என்றே கூறலாம். ஆங்கில ரசிகர்கள் அத்தனை பேரும் அந்தத் தமிழ்ப் பிரசங்கத்தைக் கேட்டபின்புதான் எழு வார்கள் எத்தனையோ ஆங்கிலம் வல்லா ருக்குச் சுவாமிகள் பேச்சில் உள்ள அரிய கருத்துக்கள் அப்பொழுதுதான் தெளிவா கும். சிலருக்கு அது நல்லதொரு மீட்டற் பாடமாயிருந்தது.

இம் மொழிபெயர்ப்பு பெரியாரின் உந்நத சக்தியை யாழ்ப்பாணம் உணர வைத்தது. சுவாமிகளுக்குப் பெரியார் அவர்கள்பால் மிக்க மதிப்பு உண்டானது. அதற்கு மேலே நட்புறவு முண்டாயது. சென்னைக்குச் சுவாமிகள் திரு. சு. சி. அவர்களை அழைத்ததுமுண்டு. பெரியார் அவர்கள் மூலம் சுவாமிகள் சைவ சித் தாந்தப் பெருமையையும், நாவலர் பெரு மானின் சேவைகளையும் உணர்ந்திருக்கலாம்.

ஒருசமயம் சென்னையில் ஒரு சந்தர்ப் பத்தில் சுவாமிகள் முன்னிலையில் நாவலர் அவர்களைப்பற்றிப் பேச்செழுந்த போது சுவாமிகள் எழுந்து யாழ்ப்பாணத்தை நோக்கி நின்று, கைகூப்பி,

'அந்த நைஷ்டிகப் பிரமசாரிக்கு வணக் கம்' என்று கூறி அமர்ந்தார்களாம். இந்த மயிர்க்கூச்செறியும் சம்பவம் அங்கு குழுமி இருந்தவர்களுக்குப் பேராச்சரியம் விளைத் தது.

மகான் செந்திநாதையர் அவர்களின் மாணவர் நல்லசாமிப்பிள்ளை, M.A. அவர் சிவஞானபோதத்தை விளக்கி ஆங்கிலத் தில் நூல் செய்தவர். அவரது கூட்டுறவால் சுவாமி விவேகானந்தர் அவர்கள் சைவ சித்தாந்த தத்துவங்களை அறிந்து ஆச்சரிய மும் மதிப்பும் எய்தியதுண்டு. அவ்வாறே திரு சு. சி. அவர்களின் கூட்டுறவால் சைவ சித்தாந்தப் பெருமையையும் நாவலர் பெருமானின் சேவையின் அருமையையும் சர்வானந்த சுவாமிகள் அறிந்திருந்தார்கள் என்பது தெளிவு.

* * *

பெரியார் அவர்களின் வாழ்க்கை சமய வாழ்க்கை, அவர்களின் ஒவ்வொரு மூச்சும் சைவசித்தாந்த மூச்சு.

[நன்றி : புலோலியூர் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனூர் நூற்றூண்டு விழா மலர்]

II

# வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் இலக்கியம்

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

பழந்தமிழ் இலக்கியங்கள் மக்கள் வாழ்வினை இருபகுதியாக வகுத்துக் கூறுகின்றன. ஒன்று அகவாழ்வு; மற்றது புறவாழ்வு. அகவாழ்வென்பது ஒரு தலைவன் இல்லின்கண் மனைவி மக்கள் சார்பாக வாழும் வாழ்க்கை. புறவாழ்வென்பது ஒரு தலைவன் தன்னாட்டு மக்களும் பிறநாட்டுத் தலைவரும் பிறரும் சார்பாக வாழும வாழ்க்கை. ஒரு சார்புமின்றி ஒருவனுக்கு இவ்வுலக வாழ்வுமில்லை; அவ்வுலக வாழ்வுமில்லை. சார்பறிந்து ஒழுகவேண்டுமெனத் திருக்குறள் கூறுகின்றது.

அகவாழ்வும் புறவாழ்வும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பயனையும் ஒருவன் பெறுதற்குரிய ஒழுக்க நெறிகளாகும். இந்நான்கையும் மூன்றுள் அடக்கி அறம், பொருள், இன்பம் என்றே நூல்கள் கூறுகின்றன. இந்த ஒழுக்க நெறிகள் இரண்டும் ஒருவனது இல்வாழ்விலும் சமூக வாழ்விலும் தேசிய வாழ்விலும் மலர்ச்சி பெற்றுச் சர்வதேசிய வாழ்வில் நிறைவுற வேண்டுமென இலக்கியங்கள் கூறுகின்றன.

''பெற்ற தாயும் பிறந்தபொன்னாடும், நற்றவ வானின் நனி சிறந்தனவே'' என்கின்றார் பாரதியார். ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்கின்றது புறநானூறு. ''யாதானும் ஊராம்; யாதானும் நாடாம்'' என்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

மக்கள் வாழ்வினை அகவாழ்வு, புறவாழ்வு எனப் பகுத்தமைத்த தமிழிலக்கியங்கள் இவ்விரு வாழ்க்கை நெறிக்கும் அறமே ஆதாரமென்றும் அகத்தூய்மையே எல்லா அறங்களுக்கும் தாயறமென்றும் இவை அன்பினால் ஆக்கமடையுமென்றும் அழகாகக் கூறுகின்றன.

''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'' என்பது திருக்குறள். ''அன்பின் நின்றன அறங்கள்'' என்பது கம்பராமாயணம்; ''அன்பென்று கொட்டு முரசே; அதில் ஆக்கமுண்டாமென்று கொட்டு'' என முழங்குகின்றது பாரதிபாடல்.

அகவாழ்விலும், புறவாழ்விலும் நாம் செய்கின்ற அறங்களும் தேடுகின்ற பொருள்களும் அனுபவிக்கின்ற இன்பங்களும் அறநெறி கடவாதிருக்க வேண்டும். அறத்தின்கண் அறமும் பொருளின்கண் அறமும் இன்பத்தின்கண் அறமும் இணைபிரியாது அமைந்திருக்கவேண்டும் என்பது கட்டாயம்.

அன்றியும், அறத்தின்கண் இன்பமும் பொருளின்கண் இன்பமும் இன்பத்தின்கண் இன்பமும் இணைபிரியாது உடன் நிகழவேண்டும் என்பதும் நியதியாகும். இவ்வாறு அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பயன்களையும் அகவாழ்விலும் புறவாழ்விலும் மக்கள் அடையும்போது அவர்கள் கண்ட அனுபவங்களே இலக்கியங்களாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. அகவாழ்விலும் புறவாழ்விலும் நாம் அடையும் பயன் இன்பமேயாயினும், துன்ப அனுபவங்கள் இடையே வந்து கலப்பதையும் நாம் விலக்க ஒண்ணாது; அனுபவித்தே தீரவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் இலக்கியங்கள் மக்கள் மத்தியிலே சிறந்த சேவையைச் செய்கின்றன. துன்ப அனுபவங்களை இன்பமாக்கிக் கொள்ளும் சிறந்த சேவையைச் செய்கின்றன. துன்ப அனுபவங்களை இன்பமாக்கிக் கொள்ளும் சிறந்த நெறிகளை நேராகவும் கதாபாத்திரங்கள் வாயிலாகவும் திறந்து வைக்கின்றன இலக்கியங்கள். இதனால் அகவாழ்வும் புறவாழ்வும் துன்பம் நீங்கி இன்பமயமாக மாறுகின்ற பல சம்பவங்களை இலக்கியங்களிலே நாம் காண்கின்றோம்.

''இடுக்கண் வருங்கால் நகுக'' என்கின்றது திருக்குறள்; ''இடுக்கண் வந்துற்றகாலை எரிகின்ற விளக்குப்போல - நடுக்கமொன்

ருனுமின்றி நகுக; அந்த நகை துன்பத்தை அரிக்கின்ற ஆயுதமாகும்'' என்கின்ருர் திருத்தக்க தேவர். ''பெயக்கண்டும் நஞ் சுண்டமைவர் - நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்'' என்கின்ருர் வள்ளுவனுர். ''முந்தை நின்று நட்டோர் கொடுப்பின் - நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'' என்கின்றது நற் றிணை; ''நச்சை வாயிலே கொணர்ந்து - நண்பரூட்டு போழ்தினும் - அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என நிமிர்ந்து நின்று பாடுகிருர் பாரதியார்.

''ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே யாள நீ போய்த் தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற் கொண்டு-பூழி வெம் கானம் நண்ணி - ஏழிரண்டு ஆண்டில் வா'' எனக் கைகேசி அன்னை கூறிய எதிர் பாராத துன்ப மொழிகளின் மத்தியிலே, இராமபிரானின் முகம், ''அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா'' எனத் துன்பத்தை இன்பமாக்கி விடுகின்ருர் கம்பர். ''நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங் காடு? - பத்தும் நாலும் பகல் அல்லவோ'' எனத் துன்பத்தில் வீரம் பேசுகின்ருர் சீதா பிராட்டியார். இன்பத்தில் இறுமாப் பற்றது வாழ்வு; துன்பத்தில் துளங்காம லிருப்பது வாழ்வு.

அகவாழ்வும் புறவாழ்வும் நிறைவுபெற வேண்டுமா? நாடு சுபிட்சமாக வாழ வேண்டுமா? மனித சக்தியை நம்புங்கள்; மனித சத்தியாலேதான் நாடு நலம்பெறு மென்கிறது இலக்கியம்.

நிலமே நீ நாடாயிருந்தாலென்ன? காடாயிருந்தாலென்ன? பள்ளமாயிருந்தா லென்ன? மேடாயிருந்தா லென்ன? அதில் ஒரு சிறப்புமில்லை. உன்னிடத்து வாழ்கின்ற மக்கள் எவ்வாறு நல்லவர்களா யிருக்கின் ருர்களோ அவ்வாறே நீயும் நலம்பெற்று வாழ்வாயாக என வாழ்த்துகின்றது புற நானூறு. ''எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்பது செய்யுள். நல்லோர்கள் எங்கே பிறந் தாலும் அவர்களை உயர்வாக மதிப்பவன் தமிழன். ''நல்லோர்கள் எங்கே பிறந்தா லும் என்?'' ''அறிவார்யார் நல்லான் பிறக் குங்குடி''; ''எக்குடிப் பிறப்பினும், யார்வரே யாயினும், அக்குடிக்கற்ருேரை மேல்வரு கென்பர்'' என்னும் இலக்கியங்கள் சமூக சமரசத்துக்குத் தமிழகத்தில் நல்ல இட மிருந்ததைக் குறிப்பிடுகின்றன.

நல்லோர்கள் பலர் ஒரு நாட்டில் இருந் தாலும் அந்நாட்டின் நல்வாழ்வு அவர் களின் அறிவாற்றல்களைக் கூட்டாகப் பயன் செய்வதிலேதான் தங்கியிருக்கிறதென இலக் கியங்கள் குறிப்பிடுவதையும் நாம் மறத்த லாகாது. இதனை மறத்தலினும் பார்க்கக் கேடில்லை. மலையிடைப் பிறந்த மணியும் பொன்னும்; - அலைபிடைப் பிறந்த முத்தும் பவளமும்; வெவ்வேறு இடங்களிற் பிறந் தனவாயினும், அழகிய இரத்தினுபரணங் களை அணிவிக்கும்போது ஓரிடத்தில் சென்று கூடி அழகு தருகின்றன அவைகள்; இது போல எக்குடிப் பிறப்பினும், யாவரே யாயினும், நல்லோர்கள் கூட்டாகத் தங்கள் அறிவினை நாட்டுக்குப் பயன் செய்தால், நாட்டின் அகவாழ்வும், புற வாழ்வும் நிறை வுற்று நாடு செழிக்குமல்லவா? இலக்கியம் காட்டும் நெறியில் நாடு மலர்ச்சியடைக.

நமது முன்னேர் மனித சக்தியை நன்கு பயன் செய்திருப்பதையும், நாட்டின் இயற்கை வளத்தினை விருத்தி செய்யும் வழியில் அதைத் தொழிற்படுத்தியிருப்பதை யும் இலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இருவரின் அன்பு கலந்த மன ஒருமைப் பாட்டினை வருணிக்க வந்த புலவர் அதனைச் செம்புலப் பெயல்நீர் போலிருக்கிறது என உவமிக்கின்ருர். பண்பட்ட நிலத்தில் இனிய நீர் பாய்ந்தால், நிலமும் நீரும் ஒன்ருகக் கலந்து விடுதல் போல இவர்களின் அன்பு கலந்த நெஞ்சம் ஒன்ருய்விட்டது என்று கூறிய புலவர் பெருமான் அந் நாட்டு மக்கள் நிலத்தையும் நீரையும் பயன் செய்த சீரிய வாழ்வினைச் சித்திரித்துக் காட்டிய அருமை நம்மால் உணரத்தக்கது. நமது நாட்டிலும், தென்தமிழ் நாட்டிலும் நிலத்தையும் நீரையும் இணைத்துவைத்த அரசர்கள் பலர் இலக்கியத்தில் பெருங் கீர்த்தி பெற்றுத் திகழ்கின்ருர்கள். நிலத் தையும் நீரையும் இணைத்துவைத்தோர் உலகையும் உயிரையும் இணைத்து வைத் தோர். ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' எனப் புறநானூறு கூறு

கின்றது. இந்த வரிசையிலே காவிரிக்குக் கரைகட்டிய கரிகாற் பெருவளத்தான், பகீரதன், மகா பராக்கிரமவாகு, குளக்கோடன் முதலிய மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இயற்கைவளஞ் சிறந்த நாடுகளிலே வேலையில்லை; வரும்படியில்லை; அது இல்லை; இது இல்லை என்று சொல்லிக் கொண்டு சோம்பேறிகளாகத் திரிவோரைக் கண்டால் பூமாதேவி இகழ்ந்து சிரிக்கிறுள் எனத் திருக்குறள் கூறுகின்றது. ''இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின், நிலமென்னும் நல்லாள் நகும்''.

நமது நாட்டில் நல்ல நிலமிருக்கிறது. இனிய நீர்ப்பெருக்குகள் உள்ளன. அரசாங்கம் நிலத்தையும் நீரையும் இணைத்து வைக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நிலத்தையும் நீரையும் பயன் செய்து வாழ்ந்தவர்களின் சந்ததி இன்று உணவுக்குக் கையேந்தி நிற்பதேன்? நமது வயல்களைத் திரும்பிப் பார்ப்போம் ஈழநாடு பிறநாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்த பழைய பட்டினப்பாலைச் செய்தியைப் புதுச் செய்தியாக்குவோம். காடு கெடுத்து நாடு புதுக்கிடுவோம். காணியிற் குடியேறி வசித்திடுவோம். பாடுபடுத்தும் சோற்றுப் பஞ்சமெல்லாம பறந்ததென்றே வெற்றி பாடிடுவோம் - தூர்ந்த பலகுளங்கள் திருத்திடுவோம்; பாய்ந்து வரும் நதிநீர் மறித்திடுவோம் பாங்காய் நெல் இருபோகம் விளைத்திடுவோம் - இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம்; ஏற்றி அயல் நாட்டவர் பசிதணிப்போம்; இலங்கு தங்கக் குவியல் கொண்டுவருவோம்; எங்கள் பழைய நிலை இன்றுகாண்போம். இந்த நோக்குடன் இலக்கியங்களைப் படிப்போம். பரீட்சைக்காகப் படிப்பதுடன் பாடத்துக்காகவும் படிப்போம். நமது இலக்கியப் படிப்பு நமக்கு அனுபவசாதனமாக மாற்றமடைய வேண்டும்.

எததொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் நமது முன்னேர் ஒன்றை மாத்திரம் மறக்கவில்லை. அதுதான் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கு முள்ள இணைபிரியாத தொடர்பு. இதனுல், வறுமையிலும சரி; செல்வத்தினும சரி; அவர்கள் செம்மை வாழ்வு வாழ்ந்து மன அமைதியுடன் வாழ்வதற்கு அவர்கள் காட்டிய வழிவழியே செல்லவேண்டும். உலகிலே பெருஞ் செல்வம் படைத்த குபேர நாடுகள் பலவும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிற் பலவும் இன்று மன அமைதி பெற்று வாழ்வதாகக் காணவில்லை. காரணம் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் தொடர்பு காணுமல் வெறும் பொருள் படைப்பதிலேயே அவைகள் நாட்டங்கொண்டிருப்பதுதான்.

பழைய இலக்கியங்களிலே திருந்திய கமத்தொழில் பற்றிய செய்திகள் அதிகம் வருகின்றன. அங்கெல்லாம் அகவாழ்வுடன் அவைகள் இணைந்தே வருவதை நாம் காணலாகும், நாற்று நடுதல், களைபிடுங்குதல், எருவிடல், நீர் பாய்ச்சுதல் முதலிய முறைகள் பெருவழக்காக நடைபெற்று வந்துள்ளன. இந்தப் புறத்தொழில்கள் யாவும் அகத்தொழில்களோடு இணைந்து நிகழ்வதை ஓர் உதாரணத்தாற் காண்போம். 'இன்சொல் விளைநிலனு, ஈதலே வித்தாக, வன்சொற் களைகட்டு, வாய்மை எரு அட்டி, அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈனவோர் - பைங்கூழ் சிறுகாலைச் செய்'' என்பது செய்யுள்.

இன்சொல்லாகிய விளைநிலம். இனிய சொல்லிலிருந்துதான் எல்லா நல்வினைகளும் உண்டாகின்றன. ''பல்லக் கேறுவதும் வாயால்; பல்லுடைபடுவதும் வாயால்'' என்பது பழமொழி. ஈகை அதாவது கொடை எனகின்ற விதை நெல் கொடுத்து வைத்தவன் என்பார்கள். இதனுல் ஈகையை விதை நெல்லாக உருவகஞ் செய்தார். வன்சொற்களாகிய களைகள். பல்லுடைபடுவதும் வாயால் என்றதனுல் வனசொற் களைக் களைகளாக உருவகஞ் செய்தார். வாய்மையாகிய எரு. அன்பாகிய நீர்; அறமாகிய கதிர்; வாழ்க்கையாகிய நெற்பயிர்; ஆயுள் ஆகிய காலம். இவை எல்லாம் பொருந்த இயைபான உருவக அணியால் நடக்கின்ற இச்செய்யுள் அகவாழ்வு சிறக்காதாயின் புறவாழ்வு பயன்தராது என்னும் உண்மையினை ஆணித்தரமாகக் கூறுகின்றது.

இன்னுமொரு நிகழ்ச்சி இங்கே நினைவுக்கு வருகின்றது. அகமும் புறமும் இணைந்த காட்சி. பண்பட்ட ஒரு வயலிலே பச்சைப் பசேலென்ற பருவப் பயிர்கள். களைபிடுங்கும் காலம். வயல் வேலையாட்கள் களைபிடுங்க வயலில் இறங்கிவிட்டார்கள். இவர்களுக்கு நல்ல தண்ணி. கள்ளு வெறியிலே களைகளை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறார்கள், மள்ளர்களுக்குக் கையும் வருகுதில்லை; காலும் வருகுதில்லை. மதுமயக்கம் அதிகமாய்விட்டது. களை பிடுங்காமல் சும்மா நிற்கிறார்கள். [வீண் சம்பளம். மள்ளர்களுக்கு ஏதோ நடந்துவிட்டது. அப்படி என்ன நடந்தது? ஒன்றுமில்லை. களைகளை மள்ளர் பார்த்த பார்வை இன்னுமொரு தரம் கள்ளுப் போட்டதுபோலாயிற்று.] இத்தனைக்கும் காரணமென்ன? காரணத்தைக் கம்பர் சொல்லுகிறார்; கேளுங்கள்.

''பண்கள் வாய் மிழற்றும் இன்சொற் கடைசியர் பரந்து நீண்ட - கண் கை வாய் முகம் காலொக்கும் களையலாற் களையிலர்மை உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலாது உலோபிநிற்பார்.'' கருநீலம், செங்காந்தள், செவ்வாம்பல், செந்தாமரை முதலிய பூக்கள் மள்ளர்களுக்குக் கள்ளு வெறியிலே மருத நிலப் பெண்களின் கண், கை, வாய், முகம், கால் முதலிய அவயவங்களாகவே காட்சியளிக்கின்றன. களைகளைப் பிடுங்குவது காதலியரின் கண், கை, வாய், முகம், கால் முதலிய உறுப்புகளைக் கொய்வதுபோல் மள்ளர்களுக்கு வருத்தம் தருகிறது. தயங்கி நிற்கின்றார்கள். இதைக் கண்ட கம்பர், ''பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்'' என்று பாட்டை முடிகின்றார். [அறிவு குறைந்த மள்ளர்கள் கள்ளுக்கும் காமத்துக்கும் அடிமையாகிவிட்டார்கள். இந்நிகழ்ச்சியை உலகின்மேல் வைத்து அறிவு குறைந்த மக்கள் பெண்கள் மீது கொண்ட காமத்தில் அமிழ்ந்திக் கடைத்தேற முடியாமல் கெட்டுப் போகின்றார்கள் என்று மள்ளர்கள் மூலமாக வாலிபர்களை எச்சரிக்கின்றார்.] இச் செய்யுளிலே திருந்திய கமச் செய்கையாகிய புறவாழ்வினையும், அகவாழ்வினைக் கெடுக்கின்ற அறியாமை, கள், காமம் என்பவற்றையும் இணைத்து உவமை நயம் தோன்ற உறுதி மொழி கூறுகின்றார் கம்பர்.

ஒருவன் தனது அகவாழ்வில் மன நிறைவு பெற்றால்தான் புறவாழ்வு அவனுக்கு இன்பமளிக்கும். கோடி சீமானாயினும் அகவாழ்வில் நிறைவு பெறாதவனுக்கு இன்பமில்லை; அவனது அனுபவம் துன்பமாகவே முடியும். இதனை இலக்கியக் கண்கொண்டு நோக்குவோம்.

ஒரு நாள் சாயந்தரம்; சிறு மழைத் தூறலுங்கூட. மழைதூறி விட்டபின்பு வேடனொருவன் வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டினுள்ளே ஒரு புற்று; அதன் பக்கத்தே நிற்றுகொண்டு வேடன் கண்ணெடுத்துப் பார்க்கிறான்; காது கொடுத்துக் கேட்கிறான். வேடனை நோக்கி வேகமாக வருகிறது ஒரு மதயானை. விடுகிறான் அம்பை. மதயானை வீழ்ந்துபட்டது. இதற்கிடையில் கறையானெடுத்த புற்றினுள்ளே அத்துமீறிக் குடியேறிய நாகபாம்பொன்று வெளியே வந்து வேடனின் காலைக் கடித்தது. பாம் புக்கும் அம்பு விடுகிறான். பாம்பும் இறக்கிறது. விஷந் தலைக்கேறி வேடனும் சாகிறான்.

இந்த அவதியில் அங்கே வருகிறது நரியொன்று. காட்டில் நரி; வீட்டில் எலி. நரியும் எலியும் பிறர் தேட்டத்தை அபகரித்து உயிர்வாழும் பிராணிகள். உலகிலே மனிதருள்ளும் பலர் எலியும் நரியுமாகி விடுகின்றனர். எலிப் புத்தியும், நரிப்புத்தியுமுள்ள மனிதர்களை இலக்கிய கர்த்தாக்கள் நன்றாகச் சாடியிருக்கிறார்கள். அது கிடக்கட்டும்; வந்த நரியைப் பார்ப்போம்.

பேராசை கொண்ட நரி வட்டமிட்டுப் பார்க்கிறது. ''இனி எனக்குக் காலம் நல்லது. இருக்கு மிடத்திலே இனிய உணவு கிடைத் திருக்கிறது. இதோ எனது உணவுப் பட்டியல். யானை ஆறு மாதத்துக்கு; வேடன் ஒரு வாரத்துக்கு; பாம்பு ஒருநாளுக்கு உணவாகும்'' என்று சொல்லிக் கொண்டே இடப்பக்கமாகச் சுற்றி வருகிறது நரி. வேடனின் பக்கத்தில் நாணேற்றியபடியே கிடந்த வில்லைக் கண்டது. பேராசை விட்டபாடில்லை. வில் நுனியிற் கட்டியிருந்த தோல் துண்டைக் கண்டு ''இதை விடக் கூடாது; முன்பு இதைத் தின்போம்'' என்று வில் நுனியைக் கடித்ததும் நாணறுந்து வில் நிமிர்ந்து நரியின் குடலைப் பீறிவிட்டது. கொடுத்து வையாத நரி அனுபவிக்கக் கிடையாமல் இறந்துவிட்டது. இந்த நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு நரி விருத்தம் என ஓர் இலக்கியம் செய்து உலகுக்கு நல்லதோர் உபதேசஞ் செய்கின்றார். உலகத்தில் எத்தனையோ பேர் தமக்கென்று நல்ல அனுபவங்களிருக்க, உயர்ந்த பட்டம், பதவி, அதிகாரம், நிலையான வருமானம் எல்லாம் இருக்க, நரி தோல் துண்டை விரும்பியது போல அற்ப பொருளுக்கு ஆசைப்பட்டு எல்லா அனுபவங்களையும் இழந்து தமது உயிரையும் இழந்து விடுகிறார்கள் என நரி விருத்தம் கூறுகின்றது.

---

## திருத்தகு நல்லீர்

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்,
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊன்ஊண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரைவினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென

— இளங்கோவடிகள்

# இந்து மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் : | திருமதி ம. திருச்சிற்றம்பலம் |
| தலைவர் : | செல்வி கௌரி கனகலிங்கம் |
| செயலாளர் : | செல்வி சாவித்திரிதேவி சிவசுப்பிரமணியம் |
| பொருளாளர் : | திருமதி ஜெயதேவி சிறீஸ்கந்தராசா |

எமது மன்றம் காலை, மாலை இரண்டு நேரமும் யோகமண்டபத்தில் பஜனை யுடன் வழிபாடாற்றி வருகின்றது. மகாசிவராத்திரி தினத்தை விரத வழிபாட்டுட னும் கலை நிகழ்ச்சிகளுடனும், பூசைகளுடனும் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.

நவராத்திரி தினங்களில் கும்பபூஜைகள், பஜனைகள், சமயப்பிரசங்கங்கள் பக்திப் பாடல்கள், இசைக்கச்சேரிகள் என்பன இடம்பெறும். இவ்வாண்டு நவராத் திரியின்போது சிறப்புச் சொற்பொழிவாளர்களாகப் பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தக் குருக் கள், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்வளாக விரிவுரையாளர்களான திரு. கோபால கிருஷ்ணன், திருமதி ஞா. குலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஒவ்வொரு விசேட தினத்திலும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு எங்கட்கு ஆலோசனையும், உதவிகளும் வழங்கி ஊக்குவிக்கும் கலாசாலைப் பேராசிரியர் திருமதி ம. திருச்சிற்றம்பலம் அவர்கட்கு எமது மன்றம் நன்றி தெரிவிக்கின்றது. சமயவிழாக் களை நாம் கொண்டாட விரும்பும் போதெல்லாம் எமக்கு நிறைமனத்துடன் அனுமதி தந்து உதவி புரியும் அதிபர் அவர்கட்கும் வேண்டியபோது வேண்டிய ஆலோசனை வழங்கும் பேராசிரியர்க்கும் எல்லா நிகழ்சிகளிலும் பங்கு கொண்டு உதவி புரியும் ஆசிரிய மாணவ, மாணவிகட்கும் எமது இந்து மன்றம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**செல்வி சாவித்திரிதேவி சிவசுப்பிரமணியம்**
செயலாளர்

—

# கிறிஸ்தவ மன்றம்

காப்பாளர்கள் : ஞானச் சகோதரி டானியலா
ஞானச் சகோதரி யூஸ்ரினு
திருமதி ஒ. செ. தர்மானந்தன்
திருமதி பா. சண்முகராசா
தலைவர் : திருமதி மரியநாயகம்
செயலாளர் : திருமதி க வாமதேவன்
பொருளாளர் : செல்வி டொ. கெ. ஜீ. எதிர்மனசிங்கி

கறை படிந்த மண்ணில் — பரன்
பிறக்கக் காண்பதன்பு
குறையகற்றி வாழ்வை — நிதம்
நிறைய வைப்பதன்பு

அன்பே தெய்வம் என்போம். அந்த அன்பு என்றும் இருந்தது, இருப்பது. தன்னையே கொடுப்பது கொடுக்க விழைந்த அன்பால் குவலயமே உருவாகியது. விண்ணும் மண்ணும் உறவாடின. தெய்வம் மனிதனுனன். மனிதருடன் தன் அன்பைப் பகிர்ந்து கொணடான். அந்த அன்பில் தன்னலம் இல்லை. தியாகம் இருந்தது. உயர்வு தாழ்வு தோன்றவில்லை தனித்துவம் மரிக்கப்பட்டது. சமத்துவம் இழையோடியது. எதுவுமே ஈடுகொடுக்க முடியாத நிர்மலமான அன்பு அத் தெய்வத்தின் அன்பு.

ஒவ்வொரு மனிதனும் இந்த உலகில் தோன்றும் உரிமையைப் பெற்று விட்ட பொழுதே அதனை நலம் பெற வைக்கும் கடமையையும் பெற்றுக் கொண்டான். இக் கடமையை அவன் உதறித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால் மனிதன் சமுதாயமாக வாழவே படைக்கப்பட்டான். தன்னையே வழங்கிக் கொண்டிருக்கும் அன்பின் மூலம் தெய்வத்தின்மூலம் பிறந்தவன் தன்னையே பிறருக்கு வழங்கித்தான் வாழவேண்டும். தானும் பிறரின் மூலம்தான் நிறைவு பெறமுடியும் என்பதை உணரவும் வேண்டும். அனைவரும் ஒரே தந்தையின் மக்கள். ஒருவருக்கொருவர் சகோதரர். இச் சகோதரத்துவம் ஒருவர் ஒருவர்மட்டில் அக்கறையையும் அன்பையும் பிறப்பிக்கின்றது. ஒருவரின் குறைவை வேறொருவரின் நிறைவால் ஈடுசெய்ய முடியும்.

எனக்கு என் அயலான் வேண்டும். என் அயலானுக்கு நான் வேண்டும் என்ற குறிக்கோளுடன் இணைந்து வாழ்வதே எம் மன்றத்தின் நோக்கமாகும்.

எமது மன்றம் இவ்வாண்டிலே 35 உறுப்பினர்களைக் கொண்டு பொலிவுடன் திகழ்கின்றது. மறைக்கல்வீ கற்றும் கிறிஸ்தவ தினம் ஒளிவிழா போன்ற விழாக்களை ஏனைய சகோதரர்களுடன் சேர்ந்து சிறப்புடன் நடாத்தியும் மகிழ்வுற்றோம்.

எம்மைச் சமயத் தொண்டில் ஈடுபடவும் சமயவிழாக்களை ஆர்வத்துடன் கொண்டாடவும் ஊக்கமும் ஆக்கமும் அளித்துவரும் சமயவிரிவுரையாளர்களான ஞானச் சகோதரி டானியலா, ஞானச் சகோதரி யூஸ்ரீனு திருமதி ஒ. செ. தர்மானந்தன் அவர்கட்கும் எம் மன்றம் நன்றி நவில்கின்றது.

மேலும் சமய விழாக்களை நாம் கொண்டாட முற்படும் போதெல்லாம் அனுமதி தந்து ஆசி கூறி அருந்துணை புரிந்த அதிபர் அவர்கட்கும் வேண்டும்போது வேண்டிய ஆலோசனைகளைத் தந்து உதவிய பேராசிரியர்கட்கும் தங்கள் அயராத ஒத்துழைப்பை அன்புடன் தந்துதவிய சக ஆசிரிய மாணவ மாணவிகட்கும் எம் மன்றம் தன் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

நன்றி.

**திருமதி க. வாமதேவன்**
செயலாளர்

250038



ஆளுமன்றம்

# கலாசாலை ஆளுமன்றம்

| | |
|---|---|
| ஆள்பதி : | இ. ஆனந்தக்குமாரசாமி |
| முதலமைச்சர்கள் : | திரு. பொன். சுந்தரலிங்கம் |
| | செல்வி வசுமதி சின்னத்துரை |
| உதவி அமைச்சர்கள் : | திரு. செ. டானியல் |
| | திருமதி அ. குரூஸ் |
| பொது நிர்வாக அமைச்சர் : | செல்வி நாகேஸ்வரி கந்தையா |
| போக்குவரத்து அமைச்சர் : | திரு. பொன். சுபாஸ் சந்திரன் |
| சுகாதார அமைச்சர் : | செல்வி தவமலர் பொன்னம்பலம் |
| விவசாய அமைச்சர் : | திரு. சி. கணேசமூர்த்தி |
| மின்சார அமைச்சர் : | செல்வி அகிலா கந்தையா |

**வகுப்புத் தலைமை மாணவர்கள் :-**

| | | | | |
|---|---|---|---|---|
| 2-ம் | வருடம் | சங்கீதம் | : | திருமதி தே. முருகுப்பிள்ளை |
| 2-ம் | ,, | மனையியல் | : | செல்வி சாவித்திரி சிவசுப்பிரமணியம் |
| 2-ம் | ,, | ஆரம்பக்கல்வி A | : | திருமதி தேவகி சுந்தரராஜா |
| 2-ம் | ,, | ,, B | : | செல்வி தவமலர் பொன்னம்பலம் |
| 2-ம் | ,, | நடனம் | : | செல்வி பத்மினி நமசிவாயம் |
| 2-ம் | ,, | சித்திரம் | : | திரு. சி. கணேசமூர்த்தி |
| 1-ம் | ,, | சங்கீதம் | : | திருமதி விஜயலட்சுமி இராஜநாயகம் |
| 1-ம் | ,, | மனையியல் | : | செல்வி கிருபா ஜெகநாதன் |
| 1-ம் | ,, | ஆரம்பக்கல்வி A | : | வண. சகோதரி டானியலா |
| 1-ம் | ,, | ,, B | : | திருமதி ஐ. துரைராஜா |
| 1-ம் | ,, | நடனம் | : | செல்வி வினோதினி அரசரட்ணம் |
| 1-ம் | ,, | சித்திரம் | : | திரு. வி. பி. தேவராஜா |

நாட்டின் அறியாமை என்னும் இருள் அகற்றும் அறிவுக் கதிர் வீசும் ஆசிரியர் சமுதாயம் குறையற்ற, கறையற்ற, நிறைவுற்ற நல்லதொரு இளஞ் சந்ததியினரை உருவாக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ளது. மாணவரிடையே இயல்பாகவே பொருந்தியுள்ள திறன்களை வெளிக்கொணர்ந்து பட்டை தீட்டிய விலை மதிப்பில்லா வைரக் கற்களாக அவர்களைத் திகழச் செய்யும் ஆசிரியர் சேவை போற்றுதற்குரியதே. கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் திகழும் ஆசிரிய சமுதாயத்தை உருவாக்குவதில் நம் கலாசாலை முன்னிற்கிறது என்று கூறிக்கொள்வதில் பெருமையுறுகின்றோம்.

